பக்கங்கள்: 20 | விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | புரட்டாதி 07 | ஞாயிற்றுக்கிழமை 23.09.2018 | கதிர் 322

## இது ரகசியம் அல்ல!

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையில் தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு தெரிவான பினனர், அந்தச் சபையின் தலைவர் பதவிக்குக் கூட்டமைப்புத் தலைமை உத்தியோகபூர்வமாக நிறுத்திய வேட்பாளருக்குப் போட்டியாகக் களத்தில்

பக்கம் 03 »

## அரசைப் பதவி விலக கோருகிறார் மஹிந்த



கொழும்பு, செப். 23

ரூபாவின் மதிப்பிறக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் அரசு உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்று முன்னாள்

பக்கம் 18 »

## அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்!

### ஏ 9 பிரதான வீதியை மறித்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, செப். 23

சிறைகளில் நீண்டகாலமாகத்தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அரசியல் கைதிகளுக்குப் பலம் சேர்க்கும் வகையிலும் வவுனியா நகரில் வீதியை மறித்து நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

பக்கம் 18 »




# திலீபன் தூபியில் நினைவேந்தலை தடுக்க நீதிமன்றில் பொலிஸ் மனு

## மாநகர ஆணையாளரை செவ்வாயன்று முன்னிலையாக உத்தரவு

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 23**

**தியாகி திலீபன் தூபி அமைந்துள்ள பிரதேசத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அவரை நினைவு கூரும் விதமாக நடைபெறவிருக்கும் நினைவேந்தல் நிகழ்வைத் தடை செய்யும் விதத்தில் உத்தரவிடுமாறு கோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் விண்ணப்பம் செய்துள்ளனர்.**

**இந்த விண்ணப்பத்தை ஒட்டி யாழ். மாநகர ஆணையாளரை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு யாழ். நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

பக்கம் 18 »

## நீதிமன்றில் செவ்வாயன்று சுமந்திரன் ஆஜராவார்

யாழ்ப்பாணம், செப்.23

நல்லூரியில் திலீபனின் தூபிப் பகுதியில் புதன்கிழமை நடைபெறவுள்ள திலீபன் நினைவேந்தல் நிகழ்வைத் தடை செய்யுமாறு கோரி பொலிஸார் சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் அதற்கு முதல் நாள் – அதாவது நாளை மறுதினம் – யாழ்ப்

பக்கம் 18 »

## திலீபனின் நினைவு நாளன்று வேறு நிகழ்வுகளுக்கு தடை!

### யாழ். மாநகர சபையில் தீர்மானம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப். 24

தியாகி திலீபனின் நினைவு இறுதி நாளன்று யாழ். மாநகர சபை எல்லைக்குள் வேறெந்த நிகழ்வையும் நடத்த அனுமதிக்கக்

பக்கம் 18 »

## வேலையில்லாப் பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு

யாழ்ப்பாணம், செப். 23

வேலையற்ற பட்டதாரிகளை மூப்பின் அடிப்படையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்

பக்கம் 18 »

## பொலிஸ்மா அதிபர் கோமாளி சீறிப் பாய்கிறார் கோட்டாபய

கொழும்பு, செப். 23

சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாப்பதற்காகக் கம்பீரமாக செயற்பட வேண்டிய பொலிஸ்மா அதிபர் கோமாளிபோல் செயற்பட்டு வருகின்றார் என்று பாது

பக்கம் 18 »

## அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக அடையாள உண்ணாவிரதப் போர்

### நாளை யாழ்ப்பாணத்தில் நடக்கும்

(எஸ்.நிதர்ஷன்)

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக யாழ். மாவட்ட செயலகம்

பக்கம் 18 »

### காணாமற்போனோர் விவகாரம்;

## விஜேதாஸ தலைமையில் அமைச்சரவை உப குழு

கொழும்பு, செப். 23

காணாமற்போனோர் அலுவலகத்தின் இடைக்கால அறிக்கையில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளைச்செயற்படுத்துவதற்கானசிறப்புஅமைச்சரவை உபகுழு

பக்கம் 18 »



நாகர்கோவில் மகாவித்தியாலயம் மீது 1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி இலங்கை விமானப்படை நடத்திய குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 21 மாணவர்கள் உட்பட 39 பேரின் 23 ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று அங்கு அனுஷ்டிக்கப்பட்டது.

## பெண் விரிவுரையாளர் திட்டமிட்டே கொலை!

### பொலிஸ் விசாரணை தீவிரம்

திருமலை, செப். 23

காணாமல்போயிருந்த நிலையில் திருகோணமலை நகரக் கடலில் இருந்து சடலமாக மீட்கப்

பக்கம் 18 »

## பிராந்திய அலுவலகங்களை அமைக்கும் பணியில் இறங்கியது காணாமல்ஆக்கப்பட்டோர் பணியகம்

### வருட இறுதிக்குள் இரு பணிமனைகளை நிறுவ உத்தேசம்

கொழும்பு, செப். 23

காணாமல்ஆக்கப்பட்டோர் தொடர்பான பணியகம், வடக்கு மாகாணத்தில் பிராந்திய அலுவலகங்களை அமைக்கும் முயற்சியில் தீவிரமாக

பக்கம் 18 »

காலைக்கதிர்
Kalaikkathir



# பொலிஸ்மா அதிபரை பதவி நீக்க அரசமைப்புச் சபைக்கே முடியும்!

## அமைச்சர் மத்தும பண்டார தெரிவிப்பு



பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிராகக் கிடைக்கப்பெற்றுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் கண்டறிவதற்காக மூவரடங்கிய உயர்மட்டக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழு முன்வைக்கும் விசாரணை அறிக்கையின் அடிப்படையிலேயே பொலிஸ் மாஅதிபர் தொடர்பிலான எதிர்கால நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படுமென்று சட்டம், ஒழுங்கு அமைச்சர் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபரை நியமிப்பதற்கும், விலக்குவதற்குமான அதிகாரம் அமைச்சருக்கன்றி அரசமைப்புச் சபைக்கே உண்டு என்றும் அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

சிறிகொத்த வில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் தொடர்பிலான குற்றச்சாட்டுகுறித்து ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் நடக்கும் கொலைகள், கொள்ளைகள், பாலியல் வன்புணர்ச்சி சம்பவங்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரம் என்பன மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தை விட பெரியளவில் குறைந்துள்ளன.

கூட்டு எதிர்க்கட்சியினர் தற்போது நாட்டின்பாதுகாப்பு குறித்து பேசுகின்றது. கடந்த 3 ஆண்டு காலத்திற்குள் சட்டத்தில் சுயாதீனத் தன்மையையும், சட்டத்தின் நியாயத்தையும் எம்மால் ஏற்படுத்த முடிந்தது.

பொலிஸாருக்குத் தற்போது சுதந்திரமாகச் செயற்படும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் எந்த பயமும் அச்சமும் இன்றி நாட்டில் பயணங்கள் செல்லவும், வாழவும் சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு ஜனாதிபதி, பிரதமர் உட்பட அனைவரையும் விமர்சிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் போல் எவரும் வெள்ளை வான்கள் மூலம் கடத்தப்படுவதில்லை.

ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்படுவதில்லை. இந்த சுதந்திரம் தற்போது நாட்டில் உள்ளது. 2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மக்களுக்கு சுதந்திரமாக வாழும் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கொலைகள் பற்றி கூட்டு எதிர்க்கட்சியினர் பெரிதாக பேசுகின்றனர். கடந்த 2014ஆம் ஆண்டு 548 கொலை சம்பவங்கள் நடந்துள்ளன. 2017ஆம் ஆண்டு கொலை சம்பவங்கள் 452 ஆக குறைந்துள்ளன.

நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் கொலைகள் குறைந்துள்ளமையைப் போல, பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும் சம்பவங்களும் குறைந்துள்ளன எனவும் ரஞ்சித் மத்துமபண்டார குறிப்பிட்டுள்ளார்.

# கழிவுநீர் முகாமைத்துவ நிலையம் அமைப்பதற்கு கனடா நிதியுதவி!



கொழும்பு, செப்.24

கல்முனையில் அமைக்கப்படவுள்ள கழிவுநீர் முகாமைத்துவ நிலையத்துக்கு நிதியுதவி வழங்குவதற்கு கனேடிய அரசு முன்வந்துள்ளது.

இலங்கையிலுள்ள கனேடிய நாட்டுத் தூதுவர் டேவிட் மக்கின்னன் தலைமையிலான குழுவினர் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ஷூப் ஹக்கீமுடனான சந்திப்பின்போதே தூதுவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பு அமைச்சரின் நாடாளுமன்ற அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் டீ.ஜீ.எம்.வீ. ஹப்பு ஆராச்சி, மேலதிக செயலாளர் எல். மங்கலிகா மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளர் தீப்தி சுமனசேகர ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சி

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு நேற்று முன்தினம் ஒரு நாளில், 2.03 ரூபா வீழ்ச்சியடைந்து, 170.66 ரூபாவைத் தொட்டுள்ளது.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி நாளுக்கு நாள் வீழ்ச்சியைச் சந்தித்து வருகிறது.

இலங்கை மத்திய வங்கி நேற்று முன்தினம் வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றில் விற்பனைப் பெறுமதி, 170.66 ரூபாவாகவும், கொள்வனவுப் பெறுமதி 166.78 ரூபாவாகவும் வரையறுக்கப்பட்டிருந்தது.

கடந்த ஒகஸ்ட் 8 ஆம் திகதியில் இருந்து, அமெரிக்க டொலருக்கு நிகரான, இலங்கையின் நாணயப் பெறுமதி, 9.48 ரூபாவால் வீழ்ச்சியடைந்துள்ளது. இது, 5.88 வீத சரிவாகும்.

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இலங்கை ரூபாவின் மதிப்பு 16.06 ரூபாவால், (10.39 வீதம்) வீழ்ச்சி கண்டுள்ளது.

# பொலிஸ்மா அதிபர் மீது முன்வைக்கப்படும் பல குற்றச்சாட்டுக்கள் சோடிக்கப்பட்டவை!

## பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவிப்பு

பொலிஸ் மா அதிபர் மீது முன்வைக்கப்படும் பெரும்பாலான குற்றச்சாட்டுக்கள் சோடிக்கப்பட்டவைகள் என்றும், குற்றச்சாட்டு உள்ளதென்பதற்காக அவர் தொடர்பிலான நல்ல செயற்பாடுகளைப் பாராட்டாமல் இருக்க முடியாதெனவும் சட்டம் ஒழுங்கு பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

சிறிகொத்த வில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

பொலிஸ்மாஅதிபரிடம் குறைபாடுகள் இருக்கலாம், அதற்காக வேண்டுமென்றே அவர் மீது சிலர் சேறு பூசி வருகிறார்கள். கண்டி பெரஹரவின் போது ஆடாமல் சென்ற நடனக் கலைஞர்களை ஆடுமாறு அவர் கையை ஆட்டி சைகையில் காட்டியதை மட்டும் காட்சிப்படுத்தி பொலிஸ் மா அதிபர் நடனமாடுகிறார் எனப் பிரசாரம் செய்தார்கள்.

அதேபோன்று அவர் பாடசாலையொன்றில் ஆற்றிய உரையின் சில வசனத்தை மட்டும் எடுத்து வேறு அர்த்தம் புலப்படும் வகையில் அதனைக் காட்சிப்படுத்தி சேறு பூசி வருகிறார்கள். அந்த உரை முழுவதையும் நான் கேட்டுப்பார்த்தேன். உண்மையில் அது கருத்துள்ள உரையாகவே காணப்பட்டது.

எனக்குத் தெரிந்த வரை பொலிஸ் மாஅதிபர் தனது உரிமைகளைப் பெறக்கூட அதிக ஆர்வம் காட்டாத ஒருவர். இன்னமும் சாதாரண காரிலேயே பயணம் செய்கிறார். அண்மையில்கூட அமைச்சர் காரை ஏன் மாற்றக்கூடாது எனக் கேட்டமைக்கு, இது போதும் என்று சாதாரணமாகப் பதிலளித்தவர் அவர்.



அவர் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளான 129 பொலிஸ் அதிகாரிகளுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுத்தவராவார்.

கடந்த அரசில், அரசியல் தலையீட்டின் காரணமாகவே போதைவஸ்து கடத்தல் மற்றும் விற்பனை செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ஆனால் பொலிஸ் மாஅதிபரின் கடுமையான செயற்பாட்டால் தற்போது அனைத்து நடவடிக்கைகளும் குறைவடைந்துள்ளன.– என்றும் பிரதியமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பிறந்த நாள் விழாவில் ஏற்பட்ட விபரீதம் 7 பேர் காயமுற்று வைத்தியசாலையில்

களுத்துறையில் நடைபெற்ற பிறந்த நாள் விழாவில் ஏற்பட்ட விபரீதத்தால் 7 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பிறந்த நாள் விழாவில் பற்ற வைத்த வான வெடி மேல் நோக்கிச் செல்லாமல் அவ்விடத்திலேயே வெடித்தமையினால் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

கட்டுகுருந்த பிரதேச வீடு ஒன்றில் நேற்று முன்தினம் நடந்த பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் 6 பேர் 9 – 14 வயதுடையவர் எனவும், மற்றையவர் இளைஞர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்த 7 பேரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வானவெடி பற்ற வைக்க வேண்டாம் என வீட்டவர்கள் தெரிவித்த போதிலும், அதனைக் கண்டுகொள்ளாமல் சிலர் செயற்பட்டமையால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# நாடுகளைத் தம் பக்கம் இழுக்க சீனாவும் இந்தியாவும் பனிப்போர்

## மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி விசனம்

கொழும்பு, செப்.23

நாடுகளைத் தமது பக்கத்துக்கு இழுத்துக் கொள்வதற்காக, இந்தியப் பெருங்கடலில் சீனாவும் இந்தியாவும் பனிப்போரில் ஈடுபட்டுள்ளதாக மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொகமட் நசீட் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்திய அவர், இது தொடர்பில் மேலும் தெரிவித்ததை வருமாறு –

நான் இந்த உண்மைகளை மறைக்க முயற்சிக்கவில்லை.

மாலைதீவில் சீனாவுக்கு நிறைய நலன்கள் உள்ளன. எனவே மாலைதீவில் தனது நலன்களை காப்பாற்றிக்கொள்வதற்கு, தற்போதைய அதிபர் அப்துல்லா யமீன் தொடர்ந்து பதவியில் இருப்பதையே சீனா விரும்புகிறது.

மாலைதீவில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் யமீன் வெற்றி பெற முடியாது. எனினும் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள யமீன் முயற்சிப்பார்.

அதிபர் தேர்தலுக்குப் பின்னர் யமீனுக்கு அனைத்துலக சமூகம் அங்கீகாரம் அளிக்கக் கூடாது .– என்றார்.

மாலைதீவில் இன்று நடக்கவுள்ள அதிபர் தேர்தலில் ஜனாதிபதி யமீனை எதிர்த்து, எதிர்க் கட்சிகளின் பொதுவேட்பாளராக, இப்ராகிம் மொகமட் சோலி போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# காந்தி மாஸ்டர் நூற்றாண்டு நிகழ்வு

மாதகல் மேற்கு பாரதி சனசமூக நிலைய திறப்பு நிகழ்வும் காந்தி மாஸ்டர் நூற்றாண்டு விழாவும் இன்று பிற்பகல் 3 மணிக்கு மாதகல் மேற்கு பாரதி சனசமூக நிலையத்தில் அ.கந்தசாமி தலைமையில் நடைபெறும்.

மாதகல் பங்குத் தந்தை சகாநாயகம் அடிகள், நுணசை முருகமூர்த்தி தேவஸ்தானத்தின் சிவஸ்ரீ பா.துஷ்யந்தக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா பங்கு பற்றுவார். தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன், யாழ்பல்கலைக் கழக, மெய்யியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், 'காந்தீயம்' தலைவருமான ந.சிவகரசன், வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினகளாகவும் பிரதேச சபை உறுப்பினர் வி.சுப்பிரமணியம், கிராம சேவையாளர் எஸ். பிரதீபன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாவும் கலந்துகொள்வர்.

காந்தி மாஸ்டர் நினைவுரையை பண்டிதர் வை.பாலகிருஷ்ணன் ஆற்றுவார். நூல் வெளியீடும் இடம்பெறும். (உ)

# முதலாளித்துவ கொள்கைகள் மூலம் மட்டுமே ஒரு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும்!


## அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

முதலாளித்துவக் கொள்கைகள் மூலம் மட்டுமே ஒரு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதை பல நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன என அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை, சூரியவெவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சக்குணகம கிராமத்தின் வீடுகளை நேற்றுமுன்தினம் பயனாளிகளுக்கு கையளித்து உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சீனா மற்றும் ரஷ்யா போன்ற கம்யூனிச கொள்



கைகளை கொண்ட நாடுகள் இப்போது அமெரிக்காவையும் மிஞ்சும் அளவுக்கு முதலாளித்துவ கொள்கைகளை பின்பற்றி வருகின்றன.

முதலாளித்துவ கொள்கை மூலம் மட்டுமே நாடு ஒன்றை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதை சீனா போன்ற நாடுகள் ஒப்புவித்து காட்டியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# ராணுவத்தினர் மீதுள்ள கரிசனையை அரசியல் கைதிகளிடமும் காட்டுங்கள்!

## ஜனாதிபதியிடம் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை



வவுனியா, செப். 23

**போர்க்குற்றச்சாட்டின் போது ஜனாதிபதி எவ்வாறு இராணுவத்தைப் பாதுகாப்பதில் அக்கறை கட்டினாரோ அதேபோன்று, அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பிலும் அக்கறை செலுத்தவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

**அனுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிட்ட பின்னர் அங்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு – கிழக்கில் ஆயிரம் பௌத்த விகாரைகளை அமைக்கவும், மகாவலி என்ற பெயரில் வடக்கில் சிங்களக் குடியேற்றங்களை கொண்டு வரவும் பெருந்தொகையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால் தமிழ் மக்களின் கோரிக்கைகள், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் காணாமற்போனவர்கள் விடுதலை தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தாம் கலந்துரையாடுகின்றனர் எனவும், அரசியல் கைதிகளில் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தருவர் எனவும் கூறி மக்களின் பிரதிநிதிகள் எம்மை ஏமாற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன யுத்த குற்றம் தொடர்பில் இராணுவத்தினர் மீது காட்டும் அக்கறையை, தமிழ் அரசியல் கைதிகள் விடயத்திலும் செலுத்தி அவர்களுக்கான விடுதலை யையும் உறுதி செய்ய வேண்டும் – என்றார். (ஐ)

## வாகனங்களின் விலை உயர்வு

கொழும்பு, செப்.23

அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வெகுவாக உயர்வடைந்துள்ள நிலையில், புதிய வாகனம் ஒன்றின் விற்பனை விலையும் அதிகரித்துள்ளது.

அதன் படி வாகனம் ஒன்றின் விலை 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவால் அதிகரிப்பதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அதி சொகுசு வாகனங்களின் விலைகள் 6 லட்சம் ரூபாவிலிருந்து 8 லட்சம் ரூபா வரை அதிகரிப்பதாகவும் வாகன இறக்கமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் கூறினார்.

நாளுக்கு நாள் இடம்பெற்று வரும் டொலரின் விலை உயர்வு காரணமாகவே இந்த வாகன விலை அதிகரிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## வடக்கு, கிழக்கு, மத்தியில் இன்று தொடக்கம் மழை

கொழும்பு, செப்.23

வடக்கு, கிழக்கு, மத்திய மாகாணங்களில், இன்று முதல் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வானிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது.

அத்துடன் மத்திய, சப்ரகமுவ, மேல் மாகாணங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகம் அதிகரித்து வீசுவதால், மீனவர் மற்றும் கடல்சார் ஊழியர்களை அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# டொலர் பெறுமதி அதிகரிப்பினால் ஏற்பட்ட நெருக்கடி சமாளிக்கப்படும்

அமெரிக்கா டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளதால், ஏற்பட்டுள்ள நிதி நிலை நெருக்கடியை வெற்றிகரமாக எதிர்கொள்ள தேவையான நடவடிக்கை களை எடுப்பார் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்துள்ளார்.

உலகில் அமெரிக்காவின் டொலர் வலுவாக இருப்பதால், ஏனைய நாடுகளின் பணத்தின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார் பிரதமர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நின்று கூட்டமைப்புக்குப் பேதி கொடுத்தவர் பிரகாஷ்.

திருவுளச்சீட்டுத் தெரிவில் தான் தலைவர் பதவி அவரின் கைக்குக் கிட்டாமல் போனது.

அவரைக் கட்சியிலிருந்தும் அதன் மூலம் பிரதேச சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் அகற்றுவதற்குத் தமிழரசுக் கட்சி நடவடிக்கை எடுத்திருந்தது.

அதற்கு எதிராக நீதிமன்றுக்குப் போன பிரகாஷ், தமிழரசுக்கட்சியின் முடிவுக்கு மாறாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து இடைக்காலத் தடை உத்தரவும் பெற்றுக் கொண்டார்.

அவரைக் கட்சியிலிருந்து வெளியேற்றும் தமிழரசுக் கட்சியின் தீர்மானத்துக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இது சிக்கலான கேஸ். தமிழரசுக் கட்சிக்குத் தலையிடி தரக்கூடிய வழக்கு என்று இப்பத்தியில் குறிப்பிட்டு அதற்கான காரணங்களையும் சுட்டிக்காட்டி விளக்கியிருந்தேன்.

பிரதேச சபைத் தலைவர்கள் என இன்னார் இன்னாரைத் தெரிவு செய்வது என்று தீர்மானிக்கும் தமிழரசுக் கட்சியின் உரிய குழுவின் கூட்டத்தின் அறிக்கைப் புத்தகத்திலிருந்து பல விடயங்களை தமிழரசுக் கட்சி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டியிருக்கும் என்பதில் தொடங்கி, இவ்வழக்கை விசாரிக்கப் புறப்பட்டால் எத்தனை பூதங்கள் கிளம்பும் என்பதை இப் பத்தியில் ஏற்கனவே கோடிகாட்டியிருந்தேன்.

அது, கூட்டமைப்பின் உயர் சட்ட வட்டாரங்களுக்கு புரிந்திருக்கும் போல...

பிரகாஷுக்கு சமரசத் தூது விடுக்கப்பட்டதாகத் தெரிகினறது.

“இப்போது வழக்கையும் வாபஸ் பெற்று, பிரதேச சபை உறுப்பினர் பதவியைக் கைவிட இணங்குங்கள். விரைவில் உரிய காலம் வரும். நீங்கள் சரியாகக் கவனிக்கப்படுவீர்கள். அதற்கு நான் பொறுப்பு” – என்று கூட்டமைப்பின் ‘எல்லாமானவர்’ பிரகாஷை அழைத்து, உறுதி கூறி, சமாளித்திருக்கின்றார்.

தான் உறுதியளித்தால், ஒற்றைக் காலில் நின்றாவது அதைச் சாதித்துக் காட்டுவார் என்று அந்தத் தலைவர் குறித்து ஓர் உறுதிப்பாடு இருப்பதால் அவரது கோரிக்கைக்கு பிரகாஷ் இணங்கி – அடங்கி – போய்விட்டார் என்று தகவல்.

தம்மைத் தமிழரசுக்கட்சியில் இருந்தும், அதன் மூலம் பிரதேச சபை உறுப்பினர் பதவிலிருந்தும் வெளியேற்றும் தமிழரசுக் கட்சியில் செயலாளரின் நடவக்கைை எதிராக பிரகாஷ் தாக்கல் செய்த வழக்கு மீண்டும் செவ்வாயன்று யாழ். நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது.

அச்சமயத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் முன்னிலையாவார்.

பிரகாஷ் ஏற்கனவே உறுதியளித்தப்படி தமது வழக்கைத் தாம் விலக்கிக் கொள்கிறார் என அன்று நீதிமன்றத்தில் கூறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரகாஷுக்காக இந்த வழக்கைத் தாக்கல் செய்து, நன்றாக வாதிட்டு, தமிழரசுக் கட்சிக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவையும் பிரகாஷுக்கு வாங்கிக் கொடுத்த சட்டத்தரணி மணிவண்ணன்தான் பாவம்.

மோதுப்பட்டு, முரண்டுபட்ட தமிழரசுக் கட்சிக்காரர்கள் தங்களுக்குள் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துக் கொண்டு விட்டனர்; கூடிக் குலாவ இணங்கிவிட்டனர்.

இனி, தமிழ் மக்கள் முன்னணியின் அமைப்பாளரும், சட்டத்தரணியுமான மணிவண்ணனுக்கு என்ன வேலை?

பிரகாஷின் வழக்குக்காக யாழ். நீதிமன்றில் செவ்வாயன்று பிரசன்னமாகும். சுமந்திரன், அன்றைய தினம் திலீபன் தூபி நினைவேந்தல் தொடர்பான விவகாரத்திலும் நீதிமன்றத்தில் வாதாடுவார் எனத் தெரிகின்றது.

- மின்னல் -

# மாகாண சபைத் தேர்தலை தாமதிக்காது நடத்துங்கள்

## பிரதமரிடம் சபாநாயகர் கோரிக்கை

கொழும்பு, செப்.23

கூடிய விரைவில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கையெடுக்கவேண்டுமென பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம், சபாநாயகர் கரு ஜெயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

மாகாண சபைகள் தேர்தலுக்கான எல்லை நிர்ணயம் தொடர்பான மீளாய்வு அறிக்கையைக் கையளிப்பதற்குப் பிரதமர் தலைமையிலான ஐவர் அடங்கிய குழுவினர் மேலும் 2 மாத கால அவகாசத்தை சபாநாயகரிடம் கோரியுள்ளனர்.

அத்துடன், எல்லை நிர்ணய மீளாய்வுக் குழுவின் அறிக்கை மேலும் தாமதமாகுவதற்கு இருக்கும் சூழ்நிலை தொடர்பாக அமைச்சரவையில் விளக்கமளிக்கப்படும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

சபாநாயகரைச் சந்தித்திருந்த மீளாய்வுக் குழு உறுப்பினர்கள், எல்லை நிர்ணயம் தொடர்பாக மேலும் விரிவாக ஆராய்ந்து இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளதாகவும், இதனால் தமது அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக மேலும் 2 மாத காலம் தாமதம் ஏற்படலாம் எனவும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இது தொடர்பாக ஆராய்வதற்காகச் சபாநாயகர் நேற்று முன்தினம் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டியிருந்தார். இந்தக் கூட்டத்தின் போது, மீளாய்வுக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு மேலும் கால அவகாசம் தேவையென்றால் அது தொடர்பாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

எப்படியாவது கூடிய விரைவில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமெனப் பிரதமர் உள்ளிட்ட கட்சித் தலைவர்களிடம் சபாநாயகர் வலியுறுத்தினார். (ஐ)

# விவசாயத்தில் இலங்கைப் பெண்களின் எண்ணிக்கை கணிசமானதாக உள்ளது

## ஐக்கிய நாடுகள் விவசாய ஸ்தாபனம் தெரிவிப்பு

இலங்கையின் விவசாய தொழிற்படையில் பெண்களின் எண்ணிக்கை கணிசமானதாக இருப்பதாக ஐக்கிய நாடுகள் விவசாய ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் உணவு மற்றும் விவசாயத் துறைகளில் பரந்த பால்நிலை இடைவெளி இருப்பதாகவும் அது தெரிவித்துள்ளது.

இந்தவிடயம் தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது,

அதன் படி இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான குழு பிரதிநிதி நினா பிரான்ஸ்ரப் கருத்து வெளியிடுகையில் –

இங்குள்ள பால் நிலை தரங்களும், பாரபட்சங்களும் காரணமாக பெண்கள் ஆகக்கூடுதலான வேலைப்பளுவை எதிர்கொள்வதுடன், அவர்களது பெரும்பாலான உழைப்பு திறன் அற்றதாக, சம்ப ளமோ அதிகம் கிடைக்காததாக உள்ளது என்று தெரிவித்தார்.

இலங்கையில், அத்தியவாசிய ஆக்கத்திறன் மூலவளங்களையும் சேவைகளையும், தொழில்நுட்பத்தையும், சந்தைத் தகவல்களையும், நிதிச் சொத்துக்களையும் பெறுவதில் ஆண் விவசாயிகளை விடவும், பெண் விவசாயிகள் கூடுதலான தடைகளை எதிர்கொள்கின்றார்கள்.

தாம் சிறிய குடும்பப் பண்ணைகளில் அல்லது சிறிய உணவு நிறுவனங்களில் வேலை செய்கையில் பெண்கள் எதிர்கொள்ளும் இத்தகைய சிறிய தடைகள், விவசாயத்துறையின் உற்பத்தித் திறனில் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## குழப்பியது கூட்டணியா?

**மங்கள முனசிங்கவின் தீர்வுத் திட்ட அறிக்கைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி அன்று ஆதரவு தெரிவித்திருந்தால் இலங்கையில் புதியதொரு வரலாறு பிறந்திருக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கின்றார்.**

**காலம் சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்கவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீது உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறியிருக்கின்றார். மங்கள முனசிங்கவின் நல்லதோர் முன்முயற்சியை மெச்சுவதற்காக இந்தப் பாணியில் பிரதமர் கூறியிருக்கூடும். ஆனால் அதற்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணி மீது குற்றச்சாட்டைப் போடுவது மிக அபத்தமாகும்.**

**ஜனாதிபதி பிரேமதாஸாவின் காலத்தில் எதிர்க்கட்சியில் இருந்த மங்கள முனசிங்கவின் தலைமையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. தொண்ணூறுகளின் முற்பகுதியில் அந்தத் தெரிவுக்குழு முன்வைத்த யோசனையை, அப்போது நாடாளுமன்றத்தில் தமிழர்களை அதிகம் பிரதிநிதித்துவம் செய்த தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரித்திருந்தால், அது நடைமுறைக்கு வந்திருக்கும், வரலாறு மாறியிருக்கும் என்ற தொனியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேசியிருக்கின்றார்.**

**கடந்த கால அரசியல் சரிதம் மறந்து அவர் பேசுகின்றாரா அல்லது வேண்டும் என்றே அவ்வாறு அபத்தமாக மொழிகின்றாரா என்பது தெரியவில்லை.**

**விடுதலைப் புலிகளின் போராட்ட வலிமை உச்சம் பெற்றிருந்த காலம் அது.**

**தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை மீதான நியாயம், குண்டுச் சத்தங்களின் அதிர்வுகள் காரணமாக சர்வதேச சமூகத்தின் காதுகளில் பலமாக விழுந்த காலமும் அதுதான்.**

**தமிழர்களின் உரிமைகளுக்கான விடுதலைப் போராட்டம் தமிழ்ப் போராளிகளின் உயிர்த் தியாகம் மீது உச்சமாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் மங்கள முனசிங்கவின் தீர்வுத் திட்ட யோசனைக்குத் தலையாட்டி, தமிழர்களின் உரிமைப் போரைக் கொச்சைப்படுத்தும் அரசியல் யதார்த்தம் அப்போது தமிழர் தரப்பில் நிலவவில்லை. அது மட்டுமல்ல, அந்த யோசனைக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டும் பச்சைக் கொடி காட்டியிருந்தாலும் கூட புதிய அதிசயங்கள் எதுவும் நிகழ்ந்திருக்கப் போவதுமில்லை.**

**அப்படிப் பார்த்தால், இலங்கையில் புதிய வரலாறு பிறந்திருப்பதற்கான வாய்ப்பை எட்டி உதைத்துப் புறந்தள்ளியர்களில் பிரதானமானவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கதான். தமிழர் விடுதலைக் கூட்டணி அல்ல.**

**நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக முன்வைக்கப்பட்ட யோசனைத் திட்டங்களில் மிகவும் சிறந்தது – உசிதமானது – 2000 ஆம் ஆண்டில் சந்திரிகா அரசு நாடாளுமன்றில் சமர்ப்பித்த அரசமைப்பு யோசனைத் திட்டமாகும் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம்.**

**'பிராந்தியங்களின் ஒன்றியம்' என்ற ஆட்சி முறைக் கட்டமைப்பைக் கொண்டிருந்த அந்த அரசமைப்பு நகல் இப்போதும் பலராலும் சிலாகித்து விதந்துரைக்கப்படுகின்றது.**

**அந்தத் திட்ட நகலை நாடாளுமன்றத்தில் வைத்து எரித்து, அத்திட்ட முயற்சியையே நாசமாக்கியவர்கள் ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.கட்சியினர்தான். இவ்வளவும் நடக்கும்போது, அதைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பவர் போல நாடாளுமன்றத்தில் அமைதியாகப் பார்த்துக்கொண்டு – வாளா – இருந்தவர் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்தான்.**

**இரண்டு ஆண்டுகள் கழித்து, தாம் பிரதமராக இருந்த சமயம், தீவிரமடைந்த புலிகளின் தாக்குதலைச் சமாளிப்பதற்காக அவர்களுடன் ஒப்பந்தம் போட்டு, யுத்த நிறுத்தம் செய்து, சர்வதேச மட்டப் பேச்சுகளில் அவர்களுக்கு சம அந்தஸ்து வழங்கி, ஒரே தரத்தில் இருந்தவாறு கலந்துரையாடி, தமிழர்களுக்கு அவர்களின் வடக்கு, கிழக்குத் தாயகத்தில் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வைத் தர இணங்கியவரும் அவர்தான்.**

**இப்படித் தீர்வுக்கான பொறிமுறையின் தரம் ஏறியும் இறங்கியும் காலத்துக்குக் காலம் யதார்த்தபூர்வ அரசியலுக்கேற்ப மாறுபட்டும் கொண்டிருந்தபோது, ஏதோ ஒரு கட்டத்தில் வந்த ஒரு தீர்வுக்கு இணங்கியிருந்தால் இந்த நாட்டில் புதிய வரலாறு படைக்கப்பட்டிருக்கும் என்று பிரதமர் இன்று புலம்புகின்றமை அரசியல் அபத்தமின்றி வேறில்லை.**

**அன்றைய கால கட்டத்தில், விடுதலைப் புலிகளின் நியாயமான எதிர்பார்ப்பை நிறைவுசெய்யும் நீதியான தீர்வுத் திட்டம் தவிர வேறு எதுவும், யார் முன்வைத்தாலும் அது சாத்தியப்படக்கூடியதாக அமையாது என்பதுதான் அன்றைய கால கட்டத்தின் அரசியல் யதார்த்தமாகும். அது புரியாமல் வேறு யாரோ தரப்புகள் மீது பொறுப்பில்லாத குற்றச்சாட்டுக்களை பிரதமர் சுமத்துகின்றமை ஏற்கக்கூடியதல்ல.**

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் தொடர்பில் மாநகரசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப். 23

எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாநகர சபையினால் நடத்தப்படவுள்ள தியாகி திலீபனின் நினைவேந்தல் ஏற்பாடுகள் தொடர்பாக நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற மாநகர சபை உறுப்பினர்களுக்கான விசேட கூட்டத்தில் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி, நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு வட கிழக்கு மூலையில் – தியாகி திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த இடத்தில், அவர் உயிர் நீத்த காலை 10.48 மணிக்கு அகவணக்கம் செலுத்திய பின்னர், நல்லூர் சிவன் ஆலயத்தின் பின் புறமாக – பருத்தித்துறை வீதியில் தியாக தீபம் திலீபன் நினைவுத் தூபி அமைந்திருந்த இடத்தில் அஞ்சலி நிகழ்வை நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

நினைவேந்தல் நிகழ்வின் போது, பொதுச் சுடரேற்றல், ஈகச் சுடரேற்றல், தியாகி திலீபனின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்தல் முதலியவற்றை மாவீரர் குடும்ப அங்கத்தவர்களைக்கொண்டுசெய்வதுஎன்றும், அதன் பின்னர் வருகை தரும் அனைவரும் எதுவித பேதங்களுமின்றி மலர் சூடி அஞ்சலி செய்வதற்கு ஒழுங்குபடுத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. நினைவேந்தல் நிகழ்வில் எவரெருவரும் பேசுவதற்று அனுமதிப்பதில்லை என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை –

நினைவேந்தல் நிகழ்வு இடம் பெறும் இடம்பெறும் இடத்துக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், நிகழ்வு இடம்பெறும் நேரத்தில் – காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை பருத்தித்துறை வீதியில் நல்லூர் சிவன் கோவிலுக்குப் பின்புறமான போக்குவரத்துக்காக மாற்றுப் பாதை ஒழுங்கை அறிவிப்பதெனவும் யாழ். மாநகர முதல்வர் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை

## பிரதேச சபையில் தீர்மானம்

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட இடங்களில் தமிழ்மொழிக்கு முதன்மை வழங்கப்பட வேண்டும் என வலி. மேற்குப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பிரதேச சபையின் அமர்வு கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றபோது, உறுப்பினர் ந.பொன்ராசா கொண்டுவந்த மேற்படி பிரேரணை அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

உறுப்பினர் பொன்ராசா பிரேரணையை முன்வைத்து உரையாற்றும்போது, தமிழினத்தின் இருப்பை இல்லாதொழிக்கும் நோக்கத்துடன் தமிழர் தாயகப் பிரதேசத்தில் தமிழ் மொழிக்கான முதன்மை நிலை திட்டமிட்டு இல்லாமல் செய்யப்பட்டு வருகின்றது எனக் குற்றம்சாட்டினார்.

தமிழ் எமது மொழி சைவம் எமது வழி என வாழ்ந்த தமிழர் பரம்பரை இன்று இந்த இரண்டையும் இழக்கும் நிலைக்குச் சென்றுகொண்டிருப்பது வேதனையானது எனவும் அவர் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் தமிழ் மொழிக்கு இருந்துவந்த முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டிய அவர், 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் தமிழ் மொழி திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

உலகில் உள்ள மொழிகள் அனைத்திலும் முதன் மொழியாகவும் தொன்மை மொழியாகவும் விளங்குகின்ற தமிழ் மொழி தமிழர்களின் தாய் மொழியாகும். எமது உயிரினும் மேலான தமிழ் மொழிக்கு எமது தாயகப் பிரதேசத்தில் முக்கியத்துவம் வழங்கப்படுவது அண்மைக் காலமாகக் குறைந்து வருகின்றது.

மாற்று இனத்தவர்கள் ஒரு புறம் எமது மொழியை மறுதலிக்கின்ற அதேவேளை, தமிழ் மக்களே தமது மொழியில் பற்றுக் குறைந்தவர்களாக மாறிவருகின்றனர். தெரிந்தோ தெரியாமலோ இடம்பெற்றுவரும் இவ்வாறான சம்பவங்களைத் தடுத்து நிறுத்தி எமது தாய்மொழியைப் பாதுகாக்கவேண்டிய தேவை எம் அனைவருக்கும் உண்டு.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில், வடக்கு – கிழக்கு தமிழர்தாயகத்தில்தமிழ்மொழிக்கு அதி முக்கியத்துவம் வழங்கப்பட்டது. எனினும், 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் அந்த நிலை சடுதியாக மாற்றம் பெற்றிருக்கின்றது. எங்கு பார்க்கினும் ஆங்கில மொழியின் ஆதிக்கம் அரங்கேறிக்கொண்டிருக்கின்றது.

பெரும்பாலான அலுவலகங்களில் அதிகாரிகளின் பெயர்கள், அவர்களின் அலுவலகங்கள் போன்றன ஆங்கில மொழியிலேயே அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன. வர்த்தகநிலையங்களில் ஆங்கிலப் பெயர்களுடன் விளம்பரப் பலகைகள் காட்சிப்படுத்தப்படுகின்றன. போக்குவரத்து பேருந்துகளில் கூட ஆங்கிலத்திற்கே முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான நிலைதொடருமாயின் எமது உயிரினும் மேலான தமிழ் மொழி எதிர்காலத்தில் வழக்கொழிந்துவிடும். தமிழ் எமது மொழி சைவம் எமது வழி என வாழ்ந்த தமிழர் பரம்பரை இன்று இந்த இரண்டையும் இழக் கும் நிலைக்குச் சென்றுகொண்டிருப்பது வேதனையானது.

கல்வியும் மொழியும் பண்பாடும் நிலமும் தமிழ் இனக் கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்களாக இருக்கின்றன. தமிழினத்தின் இந்த அடையாளங்களை இல்லாதொழிக்கும் பணி மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

பாடப் புத்தகங்களில் தமிழர்களின் வரலாறு திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுகின்றது. தமிழர் தாயகத்தில் தமிழ் மொழி இரண்டாம் தர மொழியாகப் பார்க்கப்படுகின்றது. தமிழ்ப் பண்பாடு சீரழிக்கப்படுகின்றது. எமது நிலத்தில் திட்டமிட்ட ரீதியில் குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான நிலையில், நாம் அமைதியாக இருந்தால் தமிழ் இனம் எதிர்காலத்தில் தனது இருப்பை நிலைநாட்டுவதற்கு பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்ளவேண்டிஏற்படும். எனவே, எமது இனத்துவ அடையாளங்களைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும்.

தமிழர் தாயகத்தில், வலி. மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில் தமிழ் மொழிக்கு முதன்மை நிலை வழங்கப்பட வேண்டும். இங்குள்ள வர்த்தக நிலையங்கள், பொது நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள், விளம்பரப் பலகைகள் அனைத்தும் தமிழ்மொழிக்கு மாற்றப்படவேண்டும். இது தொடர்பாக வியாபார நிறுவனங்களின், வர்த்த நிலைய உரிமையாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்தல் விடுக்க வேண்டும்.

எமது தமிழர்களின் இருப்பை பாதுகாப்பதற்காக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி நடைமுறைப்படுத்த வேண்டும். – என்றார்.

# இலங்கை வேந்தன் மண்டபத்தில் நாளை ஆடற்கலை கருத்தரங்கம்

தமிழ் ஆடற்கலை மன்றத்தின் ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணி முதல் யாழ்ப்பாணம், நீராவியடி, இலங்கை வேந்தன் மண்டபத்தில் ஆடலரசி பால சரஸ்வதியின் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கம் நடைபெறவிருக்கின்றது.

சமூக ஆய்வாளர் தெ.மதுசூதனன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக நடனத்துறை முது நிலை விரிவுரையாளர் அருட்செல்வி கிருபைராஜா தொடக்கவுரை நிகழ்த்துவார்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணப்பாளர் முனைவர் சி.ஜெயசங்கர், மூத்த ஆடற்கலைஞர் வே.வேல் ஆனந்தன், இலங்கை வேந்தன் கல்லூரி நிறுவுநர் க.ராதகிருஷ்ணன், யாழ் பல்கலைக்கழக நடனத் துறை முன்னாள் தலைவர் கிருஷாந்தி ரவீந்திரா, திலக நர்த்தனாலய இயக்குநர் யசோதாவிவேகானந்தன், முன்னாள் நடன ஆசிரியர் பத்மினி தெய்வேந்திரகுமார் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

ஆய்வாளர்முனைவர்ஜெ.அரங்கராஜ், 'தமிழ் ஆடல் மரபில் பால சரஸ்வதி' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றுவார். பாலசரஸ்வதியின் விவரணப் படம் காட்சிப்படுத்தலும் இடம்பெறும்.

(உ)

## நாளை

24.09.2018
திங்கட்கிழமை

நட்சத்திரம் : பூரட்டாதி பி.இ 12.53 வரை
திதி: சதுர்த்தசி மு.ப 7.42 வரை
சுபநேரம் : 12.02 – 1.32 வரை
இராகுகாலம் :7.32 – 9.02 வரை

# தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் வழிக்கு வந்தார் பொலிஸ் மா அதிபர்

பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் தனித்துவமான செயற்பாட்டை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஈடுபட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபராக பூஜித ஜயசுந்தர நியமிக்கப்பட்டமை தொடக்கம் அவர் ஒருபோதும் தேசிய பொலிஸ் ஆணைக் குழு வின் சிபார்சுகளை நடைமுறைப் படுத்த முன்வந்ததில்லை. ஆணைக்குழுவின் பரிந்து ரைகளை கிடப்பில் போட்டுவிட்டு தன் இஷ்டப்படியே அவர் கடந்த மூன்றுவருடங்களாகசெயற்பட்டுக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் பொலிஸ் மா அதிபரின் செயற்பாடுகள் குறித்து தேசிய பொலிஸ் ஆணைக்குழு சபாநாயகர் கரு ஜயசூரிய தலை மையிலான அரசமைப்புக் குழு வுக்கு முறைப்பாடு செய்திருந் தது.

முறைப்பாட்டை விசாரித்த அரசமைப்புக்குழு பூஜித ஜய சுந்தர வைக் கண்டித்ததுடன் பொலிஸ் ஆணைக்குழுவின் சிபாரிசுகளை 14 நாள்களுக்குள் நிறைவேற்றுமாறும் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருந்தது.

நேற்று முன்தினம் இந்த காலக் கெடு முடிவடைந்த நிலையில் தனது பதவிக்காலத்தில் என்றும் இல்லாதவாறு பொலிஸ் ஆணைக் குழுவின் சிபாரிசுகளை நடை முறைப்படுத்தத் தாம் தொடங் கியிருக்கின்றார் என பொலிஸ் மா அதிபர் எழுத்து மூலம் அறியப்ப டுத்தியுள்ளார்.

இதற்கு முன் பல தடவைகள் நினைவூட்டல் கடிதங்களை அனுப் பினாலும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் எந்தவொரு கடிதம் தொடர்பிலும் பொலிஸ் மா அதிபர் பதிலளித்ததில்லை என் பது குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் அதிபர்கள், ஆசிரியர்கள் அமைச்சர் ரிஷாத்துடன் பேச்சு





வவுனியா மாவட்ட முஸ்லிம் பாடசாலைக ளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை அமைச் சர் ரிஷாத் பதியுதீன் சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற் றுள்ளது.

இதன்போது முஸ்லிம் பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச் சி னைகள், முஸ்லிம் அதி பர், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சனை கள், பாடசாலைகளின் தரத்தை உயர்த்துதல் போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரை யாடப்பட்டுள்ளன.

இதில், வட மாகாணசபை உறுப்பினர் ஜயதி லக, வவுனியா நகரசபை உறுப்பினர் பாரி மற் றும் லரீப் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தனர்.

# சாதாரண தர, உயர்தர பரீட்சைகளை ஒன்றாக டிசெம்பரில் நடத்தத் திட்டம்

க.பொ.த சாதாரண தர பரீட்சை மற்றும் உயர்தர பரீட்சை என்பவற்றை டிசம்பர் மாதத் திலேயே நடத்துவதற்கு கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ள து என தெரியவருகிறது.



கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியசம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித கூறுகையில், க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பின் உயர் கல்வியை தொடர்வதற்காக நீண்ட காலம் காத்திருக்க வேண்டியுள்ளது. இந்த நிலையிலேயே இரு பரீட்சைகளையும் டிசம்பரில் நடத்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, பரீட்சை விடைத்தாள் மதிப் பீட்டு பணிகளுக்காக மூடப்படும் பாடசாலைக ளின் எண்ணிக்கையை இயலுமான வரை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தி எய்திய பின்னர் பல்கலைக்கழக பிரவேசத் திற்காக காத்திருக்கும் மாணவர்கள் இடைப்பட்ட காலத்தை பயனுள்ளதாக கழிக்க விசேட வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என வும் அமைச்சர் அகிலவிராஜ் கூறியுள்ளார்.

# கிணற்றுக்குள் சிக்கிய மிகவும் நீளமான பாம்பு வனவிலங்கு அதிகாரிகளால் காப்பாற்றப்பட்டது!

கிணற்றுக்குள் சிக்கிய மிகவும் நீளமானபாம்பு ஒன்று வனவிலங்கு அதிகாரிகளினால் காப்பாற்றப்பட் டுள்ளது.

கிணற்றுக்குள் பாம்பு சிக்கி யுள்ளமையை அவதானித்த சிறுமி ஒருவர் வழங்கிய தகவலுக்கு அமைய மீட்பு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

திம்புலாகல, மனம்பிட்டிய பிர தேசத்தில் கைவிடப்பட்ட கிணறு ஒன்றிலிருந்து பாம்பு மீட் கப்பட்டுள்ளது. உயிருடன் மீட்கப் பட்ட பாம்பு, மனம்பிட்டிய காட்டுக் குள் அதிகாரிகளால் விடப்பட்டுள் ளது.

நேற்று முன்தினம் மாலை மேற் கொள்ளப்பட்ட இரண்டு மணித் தியால மீட்பு நடவடிக்கையின் பின் னர் பாம்பு கிணற்றில் இருந்து உயிருடன் வெளியேற்றப்பட்டது.

திம்புலாகலை வனவிலங்கு அலுவலக அதிகாரிகள், பிரதேச சபை அதிகாரிகள் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து இந்தப் பாம்பை காப்பற்றியுள்ளனர்.

8 அடி நீளமான இந்த பாம்பை சிறுமி ஒருவரே முதலில் அவதானித் துள்ளார் என்றும் அதனாலேயே பாம்பு காப்பாற்றப்பட் டுள்ளது எனவும் பிரதேச மக்கள் தெரிவித் துள்ளனர்.

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு வாழ்த்து தெரிவித்த நாமல் ராஜபக்ஷ!



கொழும்பு,செப்.23

பிரான்ஸ் நாட் டின் அதியுயர் கௌரவ விருதை பெற்றுக் கொண்ட முன்னாள் ஜனாதி பதி சந்திரிக்கா பண் டாரநாயக்க குமார துங்கவுக்கு நாமல் ராஜபக்ஷ எம்.பி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகப்பூர்வ டுவிட்டர் தளத்தில் தனது வாழ்த்தை நாமல் பதி விட்டுள்ளார்.

அரசியல் ரீதியாக வேறுபாடுகள் காணப்பட்டாலும், விருதை பெற்றுக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி குமாரதுங் கவுக்கு வாழ்த்துக்கள் என குறிப்பிட்டுள் ளார்.

பிரான்ஸ் அர சு வழங்கும் அதியுயர் விருதான 'கொமாண்தியர் டி லா லிஜியோன் தொனர்' எனும் விருது இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்கவுக்கு வழங்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# போலி கடவுச்சீட்டில் இலங்கை ஊடாக லண்டன் செல்ல முயற்சித்த ஈரான் நாட்டு தாய், மகள் கைது!

கொழும்பு, செப்.23

போலி கடவுச்சீட்டில் இலங்கை ஊடாக லண்டன் நோக்கி செல்ல முயற்சித்த ஈரான் நாட்டு தாய் மற்றும் மகள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில், சுங்கப் பிரிவு அதிகாரி க ளால் கைது செய் யப்பட்ட தாய் மற்றும் மகள் ஈரானுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர். ஈரான் நாட்டை சேர்ந்த 65 வயதான தாய் மற்றும் 37 வயதான மகள் நேற்று முன்தினம் அதிகாலை 4.15 மணியளவில் அபுதாபி நகரில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்த டைந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் பிரித்தானிய நாட்ட வர்கள் எனத் தெரிவித்துபோலி கடவுச்சீட்டை அதிகாரிளிடம் சமர்ப்பித்துள்ளனர். எனினும் கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள், கடவுச்சீட்டில் இருந்த சிறிய மாற்றம் ஒன்றை கண்டுபிடித்துள்ளனர்.

இருவரும் போலிக் கடவுச்சீட்டை பயன்ப டுத்தியுள்ளமை தெரிய வந்தமையினால் மீண்டும் அபுதாபி நோக்கி அவர்கள் இரு வரையும் நாடு கடத்த அதிகாரிகள் நடவ டிக்கை மேற்கொண்டுள்ளனர்.

# மத நல்லிணக்க பரிமாற்றத் திட்டம் மன்னாரில் சிறப்புற நிறைவடைவு





மன்னார் வாழ்வுதயம் (கரித்தாஸ்) நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த உறவுப் பரிமாற்ற வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் மாலை நிறைவு பெற்றுள்ளது.

மதங்கள் மற்றும் இன ரீதியில் மக்கள் மத்தியிலான பிரிவினையை நீக்கி நல்லிணக்கத்தையும், ஒற்று மையும் ஏற்படுத்தும் வகையில் மூன்று நாள்களுக்கு இந்த வேலைத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மன்னார் மாவட்டத்தின் அள வக்கை, வட்டக்கண்டல், ஆண்டாங் குளம் போன்ற கிராமத்தில் உள்ள மக்களுடைய உள்ளடக்கிய பரி மாற்று வேலைத்திட்ட குழு கடந்த புதன்கிழமை காலை பதுளை நோக்கி பயணமானது.

இதன்போது பதுளையில் உள்ள சமய நல்லிணக்க குழுவுடன் இணைந்து பல்வேறு நிகழ்ச்சி திட் டங்கள் இந்தக் குழுவால் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

அத்துடன், பதுளை மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற இந்து கோவில், பௌத்த விகாரை மற்றும் முஸ்லிம் அரபு கல்லூரிகள் பார்வையிடப்பட் டன, 2018ஆம் ஆண்டுக்கான பொது ஹஜ் விழாவும் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் மூன்று வாகனங்கள் விபத்து; படுகாயமடைந்த நபர் பரிதாப உயிரிழப்பு!



கிளிநொச்சி ஏ9 வீதியில் கரடிபோக்கு சந்திக்கு அண்மை யில் மூன்று வாக னங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத் திற்குள்ளாகிய சம்ப வத்தில் படுகாயம டைந்தவர்களில் ஒரு வர் நேற்று முன்தி னம் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி ஏ9 வீதியில் கடந்த திங்கட் கிழமை மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்திற்குள்ளாகியமையில் ஐவர் காயமடைந்திருந்தனர். இவர்களில் ஒருவர் நிலை கவலைக்கிடமாக இரு க்கிறார் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நபர் நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளார் என வைத் தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின் றன.

இதில் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய எலி யாஸ் தேவ ராசா என்பவரே உயிரிழந் துள்ளார்.

# ஆசியக் கிண்ணக் கிரிக்கெட்டில் பாகிஸ்தானை வீழ்த்திய இந்திய அணி




ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வரும் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் புதன்கிழமை நடந்த லீக் போட்டியில், பாகிஸ்தான் அணியை 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா வெற்றி பெற்றது

நீண்ட இடைவெளிக்கு பிறகு நடந்த இந்திய – பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி இது என்பதால், இந்தப் போட்டியின் மீது அதிக எதிர்பார்ப்பு நிலவியது.

இந்த போட்டியில் இந்தியாவின் சிறப்பான வெற்றிக்கு என்னென்ன காரணங்கள் என்பது இக்கட்டுரை விளக்குகிறது.

**தொடக்கம் முதலே இந்தியா ஆதிக்கம்**

இந்தியா – பாகிஸ்தான் போட்டிகளில் முதல் நிமிடம் முதலே பரபரப்பு தொற்றிக் கொள்ளும். இந்த போட்டியிலும் அப்படித்தான்.

இப் போட்டியில் இந்திய அணியில் ஷர்துல் தாகூர், கலீல் அகமது நீக்கப்பட்டு ஹர்திக் பாண்டியா, பூம்ரா ஆகியோர் சேர்க்கப்பட்டனர்.

போட்டி தொடங்கிய முதலே சிறப்பாக ஆடத்தொடங்கிய இந்தியா, பாகிஸ்தானின் இரண்டு விக்கெட்டுகளை அந்த அணி 3 ஓட்டங்கள் சேர்ப்பதற்கு முன்பே கைப் பற்றியது. இதன் மூலம் ஆட்டத்தில் தொடக்கம் முதலே இந்தியாவின் கரம் ஓங்கியது.

**பாக். வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டம்**

புதன்கிழமை நடந்த போட்டியில் முதலில் பேட் செய்த பாகிஸ்தான் 43.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 162 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதற்கு முக்கிய காரணம் பாகிஸ்தான் துடுப்பாட்டர்களின் மோசமான ஆட்டம்தான்.

பாபர் அஸாம் மற்றும் சோயீப் மாலிக் தவிர வேறு எந்த துடுப்பாட்ட வீரன்நிலைத்து ஆடாதது அந்த அணிக்கு பெரும் பாதிப்பை உண்டாக்கியது. பல துடுப்பாட்ட வீரர்கள் தேவையற்ற ஷொட்கள் ஆடி தங்கள் விக்கெட்டை இழந்தனர்.

**அசத்திய கேதர் ஜாதவ்**

இந்திய வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்குமார் 3 விக்கெட்டுகளையும் மற்றொரு வேகப்பந்து வீச்சாளர் பூம்ரா 2 விக்கெட்டுகளையும் எடுத்தனர்.

ஆனால், இப் போட்டியின் மிகப் பெரிய திருப்புமுனை கேதர் ஜாதவ் என்று கூறலாம்.

**கேதர் ஜாதவ்**

பகுதிநேர சுழல் பந்துவீச்சாளரான கேதர் ஜாதவ், பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 9 ஓவர்கள் பந்துவீசி 23 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை எடுத்தார். இதில் பாகிஸ்தான் முக்கிய துடுப்பாட்ட வீரர்



களும் அடங்குவர்.

**துடுப்பாட்டத்தில் ஜொலித்த இந்தியா**

பந்துவீச்சை போலவே பேட்டிங்கிலும் இந்திய அணி தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தியது.




இந்திய தொடக்க ஆட்டக்காரர்களான ஷிகர் தவான் மற்றும் கேப்டன் ரோகித் சர்மா ஆகிய இருவரும் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர்களை சிறப்பாக எதிர்கொண்டனர்.

குறிப்பாக ரோகித் சர்மா பவுண்டரி மற்றும் சிக்ஸர்கள் விளாசி 39 பந்துகளில் 52 ஓட்டங்கள் எடுத்தார். தவான் 46 ஓட்டங்கள் எடுத்தார்.

இருவரும் ஆட்டமிழந்த நிலையில், தினேஷ் கார்த்திக் மற்றும் ராயுடு ஆகிய இருவரும் பொறுப்பாக விளையாடி இந்தியாவை வெற்றி இலக்குக்கு எடுத்து சென்றனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியில் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது எப்படி என்பது குறித்து கிரிக்கெட் வீரர் ரகுராமன் உரையாடினார்.


“2017 சாம்பியன்ஸ் கோப்பை இறுதி போட்டிக்கு பிறகு நடக்கும் இந்தியா – பாகிஸ்தான் போட்டி என்ற ரீதியில் இந்த போட்டி அதிக கவனம் பெற்றது. இந்த போட்டியில் தொடக்கம் முதலே இந்தியா சிறப்பாக விளையாடியது. மாறாக பாகிஸ்தான் ஒரு கத்துக்குட்டி அணி போல விளையாடியது” என்று தெரிவித்தார் அவர்.

”கோலி இல்லாத நிலையில் அணியின் தலைமை பொறுப்பை ஏற்ற ரோகித் சர்மா அணித்தலைமை மற்றும் துடுப்பாட்டம் ஆகிய இரண்டிலும் சிறப்பாக பங்களித்தார். அதேபோல் இந்திய அணியின் பந்துவீச்சாளர்கள் புவனேஷ்வர் குமார் மற்றும் பூம்ரா ஆகிய இருவரும் சிறப்பாக பந்துவீசினர்” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

”பாகிஸ்தான் அணியினர் தங்களது துடுப்பாட்டத்தில் எந்த இலக்கும் இல்லாமல் விளையாடினர். பல துடுப்பாட்ட வீரர்கள் தங்களது தேவையற்ற ஷொட்களால்தான் ஆட்டமிழந்தனர்” என்று அவர் மேலும் கூறினார்.

2017 சாம்பியன்ஸ் கோப்பை லீக் போட்டியில் பாகிஸ்தானை வென்ற இந்தியா இறுதிப்போட்டியில் தோற்றது குறித்து கேட்டதற்கு, ”அதேபோல் இப்போது நடக்கும் என்று கூறமுடியாது. இங்கிலாந்து ஆடுகளங்களும், இந்த ஆடு களங்களும் வெவ்வேறானவை. இந்த தொடரை இந்தியா வெல்வதற்கு வாய்ப்புகள் அதிகம்” – என்று ரகுராமன் குறிப்பிட்டார்.



## தலைமுடி அழகால் கலக்கும் சிறுமி

குழந்தைகள் என்றால் அழகு, அதிலும் சற்று வித்தியாசமாக இருந்துவிட்டால் விட்டு விடுவோமா என்ன?. அப்படி தான் தற்போது Mia Aflalo எனும் சிறுமி அனைவரையும் தன் பக்கம் ஈர்த்துள்ளார்.

இஸ்ரேல் நாட்டை சேர்ந்த இந்த சிறுமி தனது நீளமான முடியைக் கொண்டு பல்வேறு சிகை அலங்காரங்களை இணையம் மூலம் அறிமுகம் செய்து வருகின்றார்.

இதற்காக இவரது சிகை அழங்கார நிபுணர் Sagi Dahari இவருக்கு உறுதுணையாக இருந்து வருகின்றார்.

தனது புன்னகையால் அனைவரையும் கவர்ந்து விடும் Mia Aflalo இதுவரை யாரிடமும் பிரச்சினைகள் செய்ததில்லை. மிகவும் அமைதியான பெண். இதன் காரணமாக அவரது குழந்தை தன்மை இயல்பாக வெளியாகி பார்ப்பவர்களை அனைவரையும் கவர்ந்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir





முருகன் ▲ சாந்தன் ▲ பேரறிவாளன்
நளினி ▲ ரவிச்சந்திரன் ▲ ராபர்ட் பயஸ் ▲ ஜெயகுமார்

# ராஜிவ் காந்தி குற்றவாளிகளுக்கு விடுதலை மத்திய அரசு மனம் வைத்தால் மட்டுமே!

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் 27 ஆண்டுகளாக இருக்கும் 7 பேரையும் விடுவிக்கும் நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்கலாம் என்று உச்சநீதிமன்றம் சமீபத்தில் கூறி இருந்தது.

அதன்படி, தமிழக அமைச்சரவை கூடி, 'பேரறிவாளன், முருகன், நளினி உள்ளிட்ட 7 பேரையும் விடுதலை செய்ய வேண்டும்' என்று தீர்மானம் எடுத்தது. இதுகுறித்து தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் முறையான அறிவிப்பு வெளியிட வேண்டும்.

இந்நிலையில், அந்த 7 பேரையும் விடுவிக்க வேண்டும் என்றால் மத்திய அரசின் அனுமதி வேண்டும் என்று சில அதிகாரிகள் கூறியுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. 7 பேரின் விடுதலைக்கு சிலர் எதிர்ப்பும் தெரிவித்துள்ளார்கள்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் மூத்த வழக்கறிஞர் கே.எஸ்.ராதாகிருஷ்ணன், சில கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

எழுவர் விடுதலை குறித்து உச்சநீதிமன்றமே 'மாநில அரசு விடுதலை குறித்து முடிவு எடுக்கலாம்' என்று சொன்ன பிறகு, சில மூத்த அதிகாரிகளுக்கு மூக்கைத் துழைவதற்கு வேலையே கிடையாது. தமிழக அரசின் அமைச்சரவைதத் தீர்மானத்தை ஆளுநர் அப்படியே ஏற்றுக் கொள்வதுதான் அவரது கடமை. அவ்வாறில்லாமல் இதில் குறுக்குவேலை செய்வது யாராக இருந்தாலும் அவர்கள் கடுமையான கண்டனத்துக்கு உரியவர்களாவர். ராஜீவ் படுகொலை என்பது யாரும் ஏற்றுக் கொள்ள முடியாத ரணமான செயல்தான். ஆனால், அந்த வழக்கின் புலன் விசாரணை, விசாரணையே சரியாகச் செய்யப்படாமல் உண்மையான குற்றவாளிகள் தப்பித்து விட்டார்களோ என்று சந்தேகங்களும் எழுந்துள்ளன.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையே இந்த மண்ணின் சட்டமாகவும் கருத வேண்டும். அந்த அடிப்படையில் தமிழக அரசு, இந்த எழுவரையும் விடுதலை செய்ய தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளது. அதில், ஏன் இந்த மூத்த அதிகாரிகள் தலையிடுகின்றனர்? இந்தியா என்ன ஜனநாயக நாடா அல்லது குறிப்பிட்ட சிலரின் விருப்பத்திற்கேற்றவாறு இயங்கும் வரம்பற்ற முடியாட்சி நாடா? – என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் 7 தமிழர்களை விடுதலை செய்வது குறித்து முடிவெடுக்கும்படி தமிழக ஆளுநர் மத்திய அரசுக்கு பரிந்துரை கடிதம் அளித்துள்ளார்.

முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் அண்மையில் அமைச்சரவை கூட்டம் நடந்தது. இதில் துணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் மற்றும் அமைச்சர்கள் பங்கேற்றனர். இதில் ராஜீவ் கொலை வழக்கில் சிறையிலுள்ளவர்கள் பற்றி ஆலோசனை நடந்தது.

ஆலோசனையின் முடிவில் பேரறிவாளன் உட்பட 7 பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழக அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக ஆளுநருக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

இதுகுறித்து தற்போது ஆளுநர் முடிவெடுத்து இருக்கிறார். சரியாக ஒருவாரம் கழித்து ஆளுநர் இதில் நேற்றுமுன்தினம் மிக முக்கிய முடிவு எடுத்துள்ளார். பேரறிவாளன் உட்பட 7 பேரின் விடுதலை தொடர்பாக ஆளுநர் மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். தமிழக அமைச்சரவையின் பரிந்துரையை அடுத்து மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார். ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் மத்திய அரசுக்கு அனுப்பிய பரிந்துரை கடிதத்தை மத்திய அரசுதான் முடிவெடுக்க வேண்டும். இதனால் இதில் விரைவாக முடிவு தெரிய வரும் என்று கூறப்படுகிறது.

# தென்னாபிரிக்கப் பாறையில் மிகப் பழமையான ஓவியம்



மனித குலத்தின் மிகப் பழமையான ஓவியத்தை தென்னாப்பிரிக்காவிலுள்ள மிகச் சிறிய பாறை துண்டின் மீது கண்டறிந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 73,000 ஆண்டுகள் பழமையான ஓவியமாக கருதப்படும் இது, ஒரு கல்லின் மீது குறுக்குக்கோடு போன்று சிவப்பு நிற களிமண் கலவையை கொண்டு வரையப்பட்பட்டுள்ளது.

தென்னாப்பிரிக்காவின் தெற்கு கடலோர பகுதியிலுள்ள ப்லோம் போஸ் என்ற குகையில் கிட்டத்தட்ட ஹேஸ்டேக் (#) வடிவில் காணப்படும் அந்த ஓவியத்தின் சிறு துண்டை கண்டறிந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த கண்டுபிடிப்பு மனித குலத்தின் நவீன அறிவாற்றலின் ஒரு பிரதான உதாரணம் என்று விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் பல்வேறு இடங்களில் பழமையான ஓவியங்களை விஞ்ஞானிகள் கண்டறிந்தாலும், தற்போது கண்டறியப்பட்டுள்ள ஓவியம்தான் ஆதிகால அருவ ஓவியம் என்று 'நேச்சர்' சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாறையின் மீது இந்த ஓவியத்தை வரைவதற்கு களிமண்ணால் செய்யப்பட்ட நிறமியை வண்ணம் தீட்டும் கோல் கொண்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக அந்த கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பூமியில் இயற்கையாக காணப்படும் ஒச்ரே என்னும் களிமண் நிறமியை சுமார் 2,85,000 ஆண்டுகளாக மனிதர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த ஓவியம் மிகவும் சிக்கலானதாக இருந்ததாக ராய்ட்டர்ஸ் செய்தி முகமையிடம் பேசிய தொல்பொருள் ஆய்வாளர் கிறிஸ்டோபர் ஹென்ஷில்வுட் கூறினார்.

கண்டெடுக்கப்பட்ட கல்லின் மீதுள்ள குறுக்குக்கோடுகள் ஒழுங்கன்றி முடிவடைவது இந்த ஓவியத்தின் பரப்பு மிகப் பெரிய அளவில் இருந்திருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது என்று அவர் மேலும் கூறுகிறார்.


இந்தத் தொல்பொருள் ஆராய்ச்சி குழுவின் தலைவரான கிறிஸ்டோபர், நார்வே மற்றும் தென்னாப்பிரிக்காவிலுள்ள பல்கலைக்கழங்களில் பணிபுரிந்து வருகிறார்.

ராய்ட்டர்ஸிடம் பேசிய விஞ்ஞானிகள், இந்த ஓவியத்தை கலை என்று அழைக்கவே தயங்குவதாகவும், ஆனால் ஏதோ ஓர் அர்த்தத்துடனே இதை உருவாக்கியிருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

தென்னாப்பிரிக்காவின் கேப்டவுன் நகருக்கு கிழக்கே சுமார் 300 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள ப்லோம்போஸ் குகையில் சிவப்பு நிற களிமண்ணால் சுற்றப்பட்ட மணிகள், செதுக்கப்பட்ட களிமண் துண்டுகள் ஆகியனவும், ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு மேல் பழமையான சாயம் தயாரிக்கும் தொகுப்பும் கண்டறியப்பட்டுள்ளது.

அறிவியலில் ஹோமோசெபியன்ஸ் என்றழைக்கப்படும் தற்கால மனிதர்கள், தற்போதைய ஆஃப்பிரிக்காவில் 3லட்சத்து 15ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றினர் எனப் பல்வேறு ஆராய்ச்சிகளின் முடிவில் கூறப்படுகிறது.

# செயல் வீரர் இராஜவிஜயன்



**கொழும்பு ஸ்கந்தா பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் இராசநாயகம் இராஜவிஜயன் கடந்த ஒகஸ்ட் 10 ஆம் திகதி காலமானார். அவரைப் பற்றிய நயப்புரை இது.**

உலகில் பிறந்த எல்லோருமே ஒரு நாள் மறையத் தான் வேண்டும். மரணம் சாசுவதமானது. ஆனால் வாழும் காலத்தில் நாம் செய்கின்ற காரியங்கள் வழியாக நாம் விட்டுச் செல்கின்ற மரபுகள் தான் முக்கியமானவை. அந்த வகையில் இராசநாயகம் இராஜவிஜயன் (வயது 57) மனித நேயத்துடன் நட்பு கலாசாரத்தை பேணுபவராகவும் மற்றவருக்கு உதவி செய்கின்ற மனப்பான்மை கொண்ட செயல் வீரனாகவும் விளங்கினார்.

ஐயனார் வீதி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அவர் அண்மை காலமாக கொழும்பு பம்பலப்பிட்டி தொடர் மாடியில் வசித்தவர்.

பாடசாலை காலப் பகுதியில் இவர் மிக துடிப்பானவராகக் கல்வியில் தனது திறமையை வெளிப்படுத்தி இருந்தார். அதே நேரத்தில் மெய்வன்மை நிகழ்ச்சிகளிலும் துடுப்பாட்டத்திலும் பங்குபற்றி இருந்தார்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் பின்னர் உயர்தரக் கல்வியை மகாஜனக் கல்லூரியில் பெற்றவர். கணிய அளவையியலாராக தொழிற் கல்வியை கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் பெற்றார்.

லிபியா நாட்டுக்குச் சென்று 2 வருடங்கள் கடமையாற்றினார். பின்னர் இலங்கை திரும்பி யாழ்ப்பாணத்தில் கட்டட ஒப்பந்தகாரராகத் தனது சொந்தத் தொழிலை ஆரம்பித்து அதனை தென்பகுதியிலும் மன்னாரிலும் நடத்தி வந்தார்.

தான் படித்த ஸ்கந்த வரோதயக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் 1986 இல் முன்னை நாள் அதிபர் ஒரேற்றர் சுப்பிரமணியத்தின் வழிகாட்டலில் புனரமைப்புச் செய்யப்பட்டபோது இவரும் அதில் ஆயுள்கால அங்கத்தவராக இணைந்தார். 1990 வரை பழைய மாணவர்சங்கம்ஊடாகபலசெயல்திட்டங்களை செய்வதற்கு உறுதுணையாக இருந்து நிர்வாக சபையில் உறுப்பினராகவும் இருந்தார்.

கொழும்பில் இயங்காத நிலையில் இருந்த ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தை 1990 இல் புனரமைப்புச் செய்யப் பல வழிகளிலும் உதவினார். நிர்வாக சபை உறுப்பினராகவும், தலைவர் உட்பட பல பதவிகளையும் வகித்தார். இக் காலத்தில் ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம் கொழும்பு கிளை ஊடாக பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தினார். 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இறக்கும் வரை தலைவராக இருந்த காலத்தில் கொழும்பு பழைய மாணவர் சங்க வெள்ளி விழாவையும் ஸ்கந்தா மைந்தர்களின் சங்கமத்தையும் வெற்றிகரமாக நடத்தி முடித்தார்.

கொழும்பு பழைய மாணவர் சங்க உறுப்பினராக இருந்த காலப்பகுதியில் ஸ்கந்தா மாணவர்கள் கொழும்பு செல்லும் சமயங்களில் மாணவர்களின் தங்குமிடம், உணவு, போக்குவரத்து போன்ற வசதிகளை முன்னின்று செய்து கொடுத்தார்.

வருடா வருடம் ஸ்கந்தாவில் மருத்துவ முகாமை முன்னின்று நடத்தி வந்தார். இதற்கு தேவையான வைத்தியர்களையும் மருந்துகளையும் ஒழுங்குபடுத்தி முகாம் சிறப்பாக நடத்த வழி சமைத்தார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களை லண்டன், கனடா, ஆஸ்திரேலியா, நோர்வே போன்ற நாடுகளில் ஆரம்பிக்க உதவி செய்து அதனூடாக கல்லூரிக்குத் தேவையான உதவிகளைப் பெறுவதற்கும் முயற்சிகள் எடுத்து வந்தார்.

மகேந்திரலிங்கம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்கந்தா நம்பிக்கை நிதியத்தை செயற்படுத்துவதற்கு அரும்பாடுபட்டார்.

இவர் நேர்மையாக செயற்படுபவர். பின்வாங்காது முன்னின்று செயற்பட்டவர். ஒரு செயல் வீரர். அவர் ஆத்மா சாந்தியடைவதாக!

காலைக்கதிர் Kalaikkathir



# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

23.09.2018 – 29.09.2018

சந்திராஷ்டம நாள் - புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

2018 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 7ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை சதுர்த்தித்திதி முழுவதும். நட்சத்திரம்.சதயம் இரவு 9.49 மணி வரை. பின்னர் பூரட்டாதி. சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை 4.34 மணி முதல் 6.04 மணி வரை

**சுபநேரம்** - காலை 9.01 மணி முதல் 10.31 மணி வரை

இன்று நடேச அபிஷேகம்.

**திவசம் செய்ய வேண்டிய திதி**- புரட்டாதி மாத வளர்பிறை சதுர்த்தசி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - சதயம்.

**கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)**

## மேஷம்:

நன்மையான வாரம். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வார்கள். உத்தியோகத்தர்களின் பணியில் சிறப்பான செயற்பாடுகள் இருக்கும். போட்டி இல்லாத தொழிலில் முதலீடு செய்து ஆதாயம் பெறுவார்கள். கொடுக்கல், வாங்கலில் ஆதாயம் கிட்டும். கலைத் துறையினருக்கு வாய்ப்புக்கள் கிட்டும். பெண்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும். சுய தொழில் சிறப்பாக நடக்கும். மாணவர்களின் கல்வித் தரம் உயரும்.

## ரிஷபம்:

சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதார நிலையில் வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவு ஆதாயம் குறையும். கொடுக்கல், வாங்கலில் சிரமம் வந்து சேரும். பெண்களுக்கு குடும்பப் பொறுப்புக்கள் அதிகரிக்கும். சுய தொழில் சுமாராக இருக்கும். மாணவர்கள் தலை வலியால் சில நேரம் கவனம் மாறிச் செயற்படுவார்கள். காணி சம்பந்தமான பிரச்சினைகளைத் தள்ளிப் போடுவது நல்லது. வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நன்று. யாருக்கும் பிணை போகக் கூடாது.

## மிதுனம்:

மேன்மையான வாரம். பொருளாதாரம் ஏற்றமடையும். தந்தை வழியால் நன்மை அடைவார்கள். காணி சம்பந்தமான பிரச்சினைகள் நல்ல முடிவைத் தரும். அரசு வழிச் சலுகைகள் கிட்டும். மனவலிமையும் செயற் திறனும் இவர்களை உற்சாகப் படுத்தும். சகோதரர்களின் பிரச்சினைகளைச் சுமுகமாகப் பேசித் தீர்பார்கள். பெண்கள் சுய தொழில் முன்னேற்றம் அடைவார்கள். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்களுக்கு தடைப்பட்ட கல்வி மீண்டும் அமையும். கடன் சுமை குறையும்.

## கடகம்:

துயரமான வாரம். பணப் பற்றாக்குறையாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் தடைப்படும். விரயச் செலவுகள் வரும். மன ரீதியான அழுத்தம் வந்து மறையும். தொழிலில் கவனக் குறைவு உண்டாகும். அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாக நேரும். வியாபாரத்தில் போட்டிகள் உண்டாகும். அதிக முதலீடு செய்வதைத் தவிர்க்கவும். பெண்கள் சில விடயங்களில் அவசரப்படுவதால் பல பிரச்சினைகளை சந்திக்க வேண்டி வரும். வரவுக்கு மீறிய செலவுகளால் கடன் படும் நிலை உண்டாகும்.

## சிம்மம்:

சஞ்சலமான வாரம். வர வேண்டிய பணம் வரத்தாமதமாகும். மனம் குழம்பிய படி இருக்கும். குடும்பத்தில் அமைதி குன்றும். பொருளாதாரப் பற்றாக்குறையால் வாழ்க்கைச் செலவுகள் சமாளிக்க முடியாமல் தடுமாற்றம் உண்டாகும். அடுத்தவர்கள் விடயத்தில் அதிக ஈடுபாடுகளைக் குறைத்துக் கொள்வதன் மூலம் தீய பலன்களைத் தடுக்கலாம். யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம். அதிக அலைச்சல், தூக்கம் இன்மை, உடல் உபாதைகள் என்பன உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.

## கன்னி:

சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரத்தில் வரவும் செலவும் சமமாக இருக்கும். உடல் உபாதைகள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகள் உண்டாகும். பெண்களுக்கு தங்க நகையால் தர்மசங்கடமான சிக்கல் வரும். மாணவர்கள் பரீட்சையில் எதிர்பார்த்த மதிப்பெண்களைப் பெறுவதற்கு சிரமப் படுவார்கள். சொத்து சம்பந்தமான பிரச்சினைகளால் மன வேதனை உண்டாகும். வியாபாரத்தில் புதிய முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது. கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

## துலாம்:

சுபீட்சமான வாரம். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து சுபீட்சம் உண்டாகும். வியாபாரிகள் திறமையால் முன்னுக்கு வருவார்கள். பெண்களுக்கு சுய தொழில் சிறப்பாக அமையும். மாணவர்களுக்கு எதிர்பார்த்த கல்வி கிட்டும். அரசாங்க காரியம் அனுகூலமாக அமையும். வங்கிக் கடன் வசதியும் கேட்ட இடத்தில் பணவரவும் கிட்டும். தொழில் துரித வளர்ச்சி அடையும். திறமைசாலிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் அமையும்.

## விருச்சிகம்:

சலனம் மிகுந்த வாரம். பணம் தட்டுப்பாடாக இருக்கும். வீட்டிலும், வெளியிலும் பல தரப்பட்ட சோதனைகள் வந்து மனக் குழப்பம் உண்டாகும். பொது விடயத்தில் யோசனை செய்து தலையிடு வது நல்லது. வியாபாரிகளுக்கு புதிய செலவுகள் வந்து மறையும். யாரையும் முழுமையாக நம்பாமல் இருப்பது நல்லது. கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும். சொத்து சம்பந்தமான பிரச்சினையால் மன வேதனை உண்டாகும். மாணவர்கள் கல்வியில் அக்கறை செலுத்த வேண்டும்.

## தனுசு:

சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். கடன் மற்றும் கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உடல் நலனில் கவனம் தேவை. குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் தலை தூக்கும். உத்தியோகத்தர்கள் பொறுப்புக்களில் கவனம் செலுத்த வேண்டும். புதிய பொறுப்புக்களைத் தள்ளிப் போடுவது நல்லது. உணவு விடயங்களில் கவனமாக இருப்பது மருத்துவ செலவுகளைக் குறைக்கும். வியாபாரத்தில் சம லாபம் கிடைக்கும்.

## மகரம்:


ஆக்கபூர்வமான வாரம். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வியாபாரத்தில் குறுகிய பொருள்களை வைத்து அதிக ஆதாயம் பெறுவார்கள் எதிர்பார்த்த காரியம் கைகூடும். பெண்களின் சுய தொழில விருத்தியைத் தரும் வெளிநாட்டு செய்திகள் அனுகூலமாக அமையும். செய்யும் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். கலைஞர்கள் பாராட்டுக்களையும் பொருளாதார வளர்ச்சியையும் பெறுவார்கள். சகோதர உறவு வலுவடையும். விட்டுப் பிரிந்த உறவுகள் மீண்டும் இணையும்.

## கும்பம்:

யோகமான வாரம் பண வரவு மனநிறைவைத் தரும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும் உறவினர்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள நேரும். சொந்த வீடு, வாகனம் வாங்கும் யோகம் சிலருக்கு உண்டாகும். தொழிலாளர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதுடன் பொருளாதார வளர்ச்சியும் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு உயர் பதவிகள் தடையின்றிக் கிடைக்கும். படித்து முடித்த சிலருக்கு அரசாங்க வேலை கிட்டும். பெண்கள் சிலருக்கு திருமண வாய்ப்புக்கள் வந்து சேரும்.

## மீனம்:

குழப்பமான வாரம். வருமானம் பற்றாக்குறையாக இருக்கும். தொழிலில் போட்டிகள் உண்டாகும். வீட்டில் உள்ள பெரியவர்களின் மருத்துவ செலவுகளைத் தவிர்க்க முடியாது. அலுவலகத்தில் பணி புரியும் பெண்கள் தங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டும். குடும்பத்தில் கடன் பிரச்சினைகள் தலை தூக்கும். உற்றார், உறவினர்களின் தொல்லைகள் அதிகரிக்கும். வழக்குகள் இழுபறியில் இருக்கும். மாணவர்களுக்கு கல்வித் தடங்கல் உண்டாகும்.



# முன்னாள் நீதியரசர்: அடி சறுக்கிய யானை!

- கருணாகரன் -

ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும். வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும் என்று சொல்வார்கள். நீதிமன்றங்களில் விசாரணைக்காக எத்தனையோ பேர் எழுந்து நின்றதைப் பார்த்த நீதியரசர் விக்கினேஸ்வரனுக்கு, தானே நீதிமன்றத்தில் எழுந்து நின்று விசாரணைக்கு முகம் கொடுக்கும் நிலை வந்திருக்கிறது. இதை விக்கினேஸ்வரன் ஒரு போதும் எதிர்பார்த்திருக்கவே மாட்டார்.

விக்கினேஸ்வரனுக்கு இந்த நிலை வந்திருப்பது, அவர் எப்போதும் தன்னை ஒரு நீதியரசராகவே கருதிக் கொள்ளும் நீதித்துறையினால் அல்ல. அவர் பின்னாளில் பங்கேற்றுக் கொண்டிருக்கும் அரசியலினாலேயே. அதுவும் அவருடைய தரப்பினரால். அதுவும் அவருடைய ஜுனியர்களினால். குறிப்பாக வடக்கு மாகாணசபையின் முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரனால். (இன்னொரு ஜுனியரான சுமந்திரன் தொடக்கம் ஆனோல்ட், சயந்தன் வரையில் இன்னொரு வகையில் விக்கினேஸ்வரனைச் சுற்றி முடக்கும் வியூகத்தை அமைத்திருக்கிறார்கள்).

**தமக்குத் தாமே உருவாக்கிய நெருக்கடி**

விக்கினேஸ்வரனுக்கு வந்த நெருக்கடி, அவரே உருவாக்கிக் கொண்டது. வடமாகாணசபையில் கல்வி அமைச்சராக இருந்த தம்பிராஜா குருகுலராஜா, விவசாய அமைச்சராக இருந்த பொன்னுத்துரை ஐங்கரநேசன் ஆகியோர்மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக இந்த இருவரையும் பதவி விலக்கியிருக்க வேண்டும். பதிலாக ஏனைய இரண்டு அமைச்சர்களான ப. சத்திய லிங்கத்தையும் பா.டெனீஸ்வரனையும் சேர்த்து நான்கு அமைச்சர்களையும் பதவி விலக்கியமையே.



இது முறையற்ற நடவடிக்கை. அநீதியானது. அரசியல் பழிவாங்கல். சுயகௌரவத்துக்கும் நீதி முறைக்கும் அரசியல் விதிமுறைக்கும் எதிரானது. என்று அப்பொழுதே பலரும் கூறியிருந்தனர். இதைக் கண்டித்து எதிர்க்குரல் எழுப்பினார் டெனீஸ்வரன். தான் பதவி விலக முடியாது என்று மறுத்தார்.

ஆனாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் மாற்று அமைச்சரவையை உருவாக்கினார் விக்கினேஸ்வரன்.

நீதி மறுக்கப்பட்டதால் தனக்கு வேறு வழியில்லை என டெனீஸ்வரன் நீதிமன்றத்தை நாடினார். டெனீஸ்வரன் இந்தளவுக்குப் போயிருக்கத் தேவையில்லை. ஒரு முதியவரை, நீதித்துறையில் உயர் பதவியில் இருந்தவரை, முதலமைச்சுப் பொறுப்பில் உள்ளவரை, பெருந்திரள் மக்களால் தேர்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதியை, இவ்வாறு நெருக்கடிக்குள்ளாக்கியிருக்க வேண்டாம். இது ஒரு வகையில் தமிழ் மக்களின் அரசியலைப் பலவீனப்படுத்துவதாக இருக்கிறது. விக்கினேஸ்வரனின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களை அவமதிப்பதாக உள்ளது. அவரை எதிரியாகக் கருதுவதால் வந்த பிரச்சினை இது எனச் சிலர் விக்கினேஸ்வரனின் நிலை தொடர்பாகக் கருத்துரைக்கின்றனர். ஏறக்குறைய இதே தொனியை கடந்த வாரம் அரசியல் ஆய்வாளர் நிலாந்தனும் தன்னுடைய பத்தியொன்றில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

**இரக்கம் கிட்டுமா?**

மேலோட்டமாகப் பார்க்கும்போது இது ஒரு வகையில் முதிய வயதில் உள்ள விக்கினேஸ்வரனின் மீது இரக்கத்தையும் அதன் வழியான அனுதாபத்தையும் உண்டாக்கும். ஆனால், அரசியலில் இது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. அரசியலில் விடப்படும் தவறுகளுக்கு முகத்துக்கு நேரே எதிர்ப்பு வரும். கண்டனம் எழும். அதை எதிர்கொண்டே ஆக வேண்டும். இல்லையெனில் அந்தக் களத்துக்கு வரவே கூடாது.

இங்கே விக்கினேஸ்வரன் இரண்டு வகையில் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறார். ஒன்று சட்ட ரீதியாக – அவருடைய நீதித்துறையினால். மற்றது – அரசியலினால். அதுவும் அவர் இன்று பெற்றிருக்கும் அரசியல் அந்தஸ்தினால், உயர் பதவியினால். ஆகவே இரண்டிலும் அவருக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி என்பது அவர் சம்பந்தப்பட்ட விடயங்களினாலேயே. அதிலும் அவர் நேரடியாக மேற்கொண்ட நடவடிக்கைகளினால். ஆகவே இதை அவர் எப்படி நீதிமன்றத் திலும் அரசியல் களத்திலும் எதிர்கொண்டு வெற்றியடையப்போகிறார் என்பதே இனி நாம் கவனிக்க வேண்டியது.

ஆனால், விக்கினேஸ்வரன் தன்னை நிதானப்படுத்தும் நிலையில் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால், முதலில் தன்னிடமிருந்து பறிக்கப்பட்ட அமைச்சுப் பொறுப்பை மீள வழங்க வேண்டும் என்று கேட்ட டெனீஸ்வரன், நீதி மன்றத் தீர்ப்பின்படி பதவியை ஏற்றவுடன் அதைத் துறக்கிறேன் என்று தெரிவித்தார். ஆனால், இதை விக்கினேஸ்வரன் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தாக்கல் செய்தார் டெனீஸ்வரன். இந்த வழக்கே விக்கினேஸ்வரனை நிற்க வைத்திருக்கிறது.

**சிவஞானம் முயற்சி**

இதற்குப் பிறகு இந்த விடயத்தில் வடமாகாணசபையின் முதல்வர் சி.வீ.கே. சிவஞானம் தலையிட்டு நிலைமையைச் சுமூகமாக்குவதற்கு முயற்சித்தார்.

> “இங்கே விக்கினேஸ்வரன் இரண்டு வகையில் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறார். ஒன்று சட்ட ரீதியாக – அவருடைய நீதித் துறையினால். மற்றது – அரசியலினால். அதுவும் அவர் இன்று பெற்றிருக்கும் அரசியல் அந்தஸ்தினால், உயர் பதவியினால். ஆகவே இரண்டிலும் அவருக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி என்பது அவர் சம்பந்தப்பட்ட விடயங்களினாலேயே.



இந்தச் சமரச முயற்சிக்கு டெனீஸ்வரனும் இணக்கம் தெரிவித்திருந்தார். டெனீஸ்வரனுடைய ஒரே கோரிக்கை தன்மீதான குற்றச்சாட்டை மறுப்பதே யாகும். அதன்படி மீளப் பதவி வழங்க வேண்டும். ஆனால் அந்தப் பதவி கிடைத்தவுடன் தான் அதைத் துறந்து விடுவேன் என்பதாகும். இதை அவர் மாகாணசபையின் அமர்வில் பகிரங்கமாகவே தெரிவித்தும் இருந்தார்.

ஆனால் இதற்கும் விக்கினேஸ்வரன் இணங்கவில்லை. அப்படி டெனீஸ்வரனுக்குப் பதவி வழங்கினால் அவர் இடைப்பட்ட காலத்துக்குரிய நிலுவைச் சம்பளத்தைக் கோருவார். அப்படிக் கோரினால் அதை வழங்க வேண்டும். அதை வழங்கவேண்டி வந்தால் அந்த இடைப்பட்ட காலத்தில் அமைச்சுப் பொறுப்பிலிருந்த ஏனையவர் களின் நிதியைத்தான் எடுக்க வேண்டி வரும். அதெல்லாம் சிக்கலாகி விடும் என்று கருதியிருக்கிறார் விக்கினேஸ் வரன். இதை அவர் தனக்கு நெருக்கமான உறுப்பினர்களிடம் சொல்லியுள்ளார் என நம்பகரமான செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால், தான் ஒரு போதுமே அப்படி சபையில் சம்பளத்தைக் கோரப்போவதில்லை என்று சொல்லியிருக்கிறார் டெனீஸ்வரன். ஆனாலும் விக்கினேஸ்வரன் இதையிட்டு கவனம் கொள்ளவே இல்லை. இதன் விளைவே அவர் நீதிமன்றத்தில் நின்றது.

**நீதித் துறையில் சிக்கலுக்குள் சிக்காதவர்**

ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நீதித்துறையில் செயற்பட்டு அதன் உச்சம்வரை சென்றவர் விக்கினேஸ்வரன். இலங்கையில் இனங்களுக்கிடையிலான சமத்துவம் மறுக்கப்பட்டு, நீதி மறுக்கப்பட்டு, அரச ஒடுக்கு முறையும் இனவாதமும் தலைவிரித்தாடிய காலத்தில், ஒடுக்கப்பட்ட சமூகமொன்றிலிருந்து நீதித்துறையில் உயர்ந்து சென்றவர். ஆனாலும் அவர் ஒரு போதுமே நீதித் துறையின் சிக்கல்களுக்காளானதில்லை. அவரைப் பற்றிய விமர்சனங்கள் நீதித் துறையிலிருந்து வந்ததில்லை. விக்கி னேஸ்வரனுடைய நீதித்துறைச் செயற் பாடுகள் பற்றி அரசியல் ரீதியாகவும் சிக்கல்களோ விமர்சனங்களோ பெரிதாக எழுந்ததில்லை.

விக்கினேஸ்வரனைப்போல உயர் பதவிகளில் இருந்த சரத் என் சில்வா, ஷிராணி பண்டாரநாயக்க போன்றவர்கள் கடுமையான விமர்சனங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளானார்கள். அதிலும் ஷிராணியின் பதவியே ஒரு கட்டத்தில் அரசியல் பிரச்சினைகளால் பிடுங்கப்பட்டது.

விக்கினேஸ்வரனோ எப்போதும் பாதுகாப்பாகவே இருந்திருக்கிறார். 1995 ஆம் ஆண்டில் உயர்நீதிமன்ற நீதியரசராக தமிழ்மொழியில் பதவிப்பிரமாண உறுதிமொழி எடுத்துக் கொண்ட விக்னேஸ்வரன், அந்த நிகழ்வில் தமிழர்கள் இலங் கையில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்து ஆற்றிய உரை முக்கியமானதாகும். இப்படிக் கடுமையாக அவர் அரசாங்கத்தை விமர்சித்த போதும் அவருக்கு எந்த நெருக்கடிகளும் ஏற்பட்டதில்லை.


அப்படி நீதித்துறையில் பெயரைக் கெடுத்துக் கொள்ளாமல் (தமிழ்த்தரப்பில் ஒரு தொகுதியினரிடம் விக்கினேஸ்வரனின் நீதிச் செயற்பாடுகளைப் பற்றிய விமர்சனங்கள் உண்டு என்பது கவனத்திற்குரியது. குறிப்பாக புலிகளின் காலத்தில் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளின் நீதிமன்ற விசாரணைகள், அளிக்கப்பட்ட தீர்ப்புகளையிட்ட விமர்சனம் இது) தன்னைப் பாதுகாத்துக் கொண்ட விக்கினேஸ்வரனை அவருடைய அரசியல் மடக்கி விட்டது. இப்பொழுது அவருடைய நான்கு ஆண்டுகால அரசியல் அவரை நீதிமன்றத்தில் நிற்க வைத்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

காலைக்கதிர் Kalaikkathir



# உக்கிர யுத்தத்துக்கு இடையே உயர்ந்த மருத்துவ சேவை



**இறுதிப் போர் இடம்பெற்ற காலத்தில் வன்னிக்குள் தங்கியிருந்து அங்கிருந்த மக்களுக்கு மகத்தான மருத்துவப் பணி புரிந்தவர் மருத்துவர் வரதராஜா. போர் வலயத்துக்குள் மக்களோடு மக்களாக இருந்து அங்கு போரினால் பெரும் அழிவுகளை எதிர்கொண்ட மக்களுக்கு தன்னால் முடிந்த வைத்திய சேவைகளை வழங்கியதன் மூலம் இன்றும் அந்த மக்களின் மனதில் நிலைத்திருப்பவர். வன்னியில் நடந்த பேரவலங்களை உலகுக்கு வெளிக்கொணர்ந்தவர்களில் ஒருவர். அமெரிக்காவில் தற்போது வசிக்கும் அவர் அண்மையில் ஜூனியர் விகடன் இதழுக்கு வழங்கிய நேர்காணல் வருமாறு:–**

**- அ.முத்துலிங்கம்**

சிலநாள்களுக்கு முன்னர், 'யூட்யூ'பில் முள்ளிவாய்க்கால் போர் நாள்களில் அங்கே பணிபுரிந்த மருத்துவர் டி.வரதராஜாவுடைய செவ்வியைப் பார்த்தேன். அது போர் மும்முரமாக நடந்த இறுதி நாள்களில், 2009 மே 15 அன்று எடுக்கப்பட்டது. போர் முடிவுக்கு வருவதற்கு மூன்றே நாள்கள் இருந்தன. முள்ளிவாய்க்காலில் அவர் கொடுத்த கடைசி நேர்காணல். அதிலே ஒரு கேள்வி. "உங்களுக்குச் சாவுக்குப் பயமில்லையா?" அவர் பதில் சொல்கிறார், "சாவுக்குப் பயமில்லாமல் இருக்குமா? நேற்று இரவு நான் வழக்கம்போல பதுங்கு குழிக்குள் இரவைக் கழித்தேன். சாவு எந்த நேரமும் வரலாம். அடுத்த 10 நிமிடத்தில் ஒரு குண்டு விழுந்து நான் இறக்கலாம். இன்று இரவை நான் காண்பேனோ தெரியாது." இந்தச் செவ்வியைக் கொடுத்த மருத்துவர் வரதராஜாவுக்கு என்ன ஆனது? அவர் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன். அரசின் எச்சரிக்கையை மீறி, போர் நிலைவரங்களைக் களத்திலிருந்து பி.பி.சிக்கும், ஐ.நாவுக்கும் அவ்வப்போது தொடர்ந்து அறிவித்தவர் இவர்தான். முள்ளிவாய்க்கால் பேரவலம், மனித உரிமை மீறல்கள், இன அழிப்பு, போர்க்குற்றம் பற்றியெல்லாம் பின்னாளில் ஐ.நா பொதுச் சபையில் சாட்சியம் சொன்னவர், ஜெனிவா மனித உரிமை கண்காணிப்பகம் நடத்திய மாநாட்டில் பங்களித்தவர். நோபல் சமாதானப் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டவர். எப்படியோ அவரைத் தொடர்புகொண்டு சந்தித்தேன். முதல் கேள்வியாகக் கேட்டேன்.

"நீங்கள் முள்ளிவாய்க்காலில் 15 மே 2009இல் கடைசியாகக் கொடுத்த நேர்காணலுக்குப் பின்னர் என்ன நடந்தது?"

"நான் சொன்னதுபோலவே நடந்தது. அந்த நேர்காணல் முடிந்த 10ஆவது நிமிடத்தில் என்மேல் குண்டடிக்காயம் பட்டு அறிவிழந்து நிலத்தில் விழுந்தேன். பெரிய வெளிச்சம்தான் ஞாபகம் இருக்கிறது. என்னை ராணுவம் கைது செய்தது. என்னுடைய வலது கை, குண்டுபட்டு முற்றிலும் செயலிழந்துபோனது. எனக்குத் தகுந்த சிகிச்சையளிக்காமல் தாமதப் படுத்தினார்கள். நான் அரசாங்கத்தின் எதிரியாகவே கருதப்பட்டேன். நான் முல்லைத்தீவு மாவட்டம் பிராந்திய சுகாதாரச் சேவை பணிப்பாளர், அரச மருத்துவர். அப்படியிருந்தும் என்னை புலிகளின் ஆள் என்று சந்தேகப்பட்டார்கள். பேருந்தில் ஏற்றி என்னை வவுனியாவுக்குக் கொண்டுபோக முயற்சித்தபோது, பஸ்காரன் சொல்கிறான், 'இவனுக்கு மேலே பஸ் ஏற்றுவேனே ஒழிய இவனை பஸ்ஸில் ஏற்றமாட்டேன்.' என்னைக் கொழும்புக்கு அழைத்துச்சென்று விசாரணை என்ற பெயரில் கொலை மிரட்டல் செய்தார்கள். பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் என்னை நான்கு வருடம் சிறைக்கு அனுப்பப் போவதாக பயமுறுத்தினார்கள்.

பின்னர், ஊடகவியலாளர் மாநாட்டைக் கூட்டி, அதில் நான் அன்று வரை கொடுத்த நேர்காணல்கள் எல்லாம் பொய்யானவை என்று சொல்ல வேண்டும் என என்னை நிர்ப்பந்தித்தார்கள். அப்படி செய்தால் எனக்கு விடுதலை கிடைக்கும். அப்படியே செய்தேன். உயிர் வாழ்ந்தால்தானே உண்மையை உலகத்துக்குச் சொல்லமுடியும். அமெரிக்கத் தூதரகத்தில் அரசியல் தஞ்சம் கோரினேன். அவர்களும் என் கதை முழுக்கக் கேட்டார்கள். 2011 நவம்பர் மாதம் அமெரிக்கா வந்து சேர்ந்தேன்.

முள்ளிவாய்க்கால் வாழ்க்கையில் உங்கள் மனதைத் தாக்கிய சம்பவம் ஒன்றைக் கூறமுடியுமா?

ஒன்றல்ல, நிறைய இருக்கின்றன. ஒரு தாய் தன்னுடைய இரண்டு பிள்ளைகளுடன் ஆஸ்பத்திரிக்கு வந்தார். அவருக்கு வேறு ஒருவரும் இல்லை. அந்த இரண்டு மகன்கள்தான் அவரிடமிருந்த சொத்து. ஒருவனுக்கு 10 வயது, மற்றவனுக்கு 8 வயது. 'என்ரை பிள்ளைகளைப் பாருங்கோ, என்ரை பிள்ளைகளைப் பாருங்கோ' என்று கதறியபடியே இருந்தார். புளியமரத்தின் கீழே உட்கார்ந்திருந்த அவர் மடியின் மீது எட்டு வயதுப் பையனின் தலைகிடந்தது. மூத்தவன் கீழே வெறும் தரையில் சரிந்து படுத்திருந்தான். மூத்த பையனை நான் முதலில் சோதித்தேன். அவன் எப்போதோ இறந்துபோயிருந்தான். அந்த அம்மாவிடம் பையன் இறந்துபோனதைச் சொன்னேன். 'ஐயோ, ஐயோ' என்று தலையிலடித்துக் கதறினார். 'இவனைப் பாருங்கோ' என்று மடியில் கிடந்த மற்றவனைக் காட்டினார். அவனுடைய தலையை ஒரு சன்னம் துளைத்து மறுபக்கம் போயிருந்தது. 'ஒன்றுமே செய்ய முடியாது. சிறிது நேரத்தில் இறந்துவிடுவான்' என்ற கொடூரமான வார்த்தைகளைச் சொன்னேன். இப்போது அதை நினைத்துப் பார்க்கும்போது என் மேலேயே வெறுப்பு ஏற்படுகிறது. ஓர் ஆறுதல் வார்த்தைகூடச் சொல்ல நேரமில்லை. ஒவ்வொரு நோயாளரையும் பார்த்து முடித்த பின்னர் உதவியாளர் 'அடுத்தது' (Next) எனக் கத்துவார். நோயாளி வருவார். அவர் போனதும் 'அடுத்தது' எனக் கத்துவார். இப்படி என் வாழ்க்கை யந்திரமயமாக மாறியிருந்தது.

உங்கள் இளமைக்காலம் பற்றிக் கூறுங்கள்?

ஒரு வார்த்தையில் சொல்வதானால் 'அலைச்சல்தான்'. 1975இல் தம்பலகாமம் எனும் ஊரில் பிறந்தேன். எனக்கு 10 வயது நடந்தபோது, ராணுவம் ஊரைச் சுற்றிவளைத்தது; சிலரைக் கைதுசெய்து ஒரு கடையினுள் அடைத்து அதற்குத் தீ வைத்தது. சின்ன வயதில் அந்தக் கருகிய உடல்களைப் பார்த்தேன். அந்தக் காட்சி என்மனதில் என்றென்றுமாக நிலைத்துவிட்டது. ராணுவத்தின் பிடியிலிருந்து தப்ப முல்லைத்தீவுக்குக் குடிபெயர்ந்தோம். அங்கே படிப்பை விட்டுவிட்டு ஒரு கடையில் பொட்டலம் கட்டும் வேலை பார்த்தேன். நான் ஏற்கெனவே ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததாகச் செய்தி வந்தது. எனக்குப் படிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. தம்பலகாமத்துக்கும் முல்லைத்தீவுக்குமாகப் பல தடவை அலைந்தோம். இறுதியில் முல்லைத்தீவுப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தேன். எப்படியும் படித்து ஆளாக வேண்டும் என்ற வெறி என்னுள் இருந்தது. பள்ளிக்கூடத்தில் பகலிலும் அதே பள்ளிக்கூடத்தில் அரிக்கன் லாம்பில் இரவிலும் படித்தேன். அங்கேயே பெஞ்சில் தூங்கினேன். அப்படித்தான் 94இல் மருத்துவப் படிப்புக்குத் தெரிவுசெய்யப்பட்டேன். போரினால் பல தடவை படிப்புக்கு இடையூறு ஏற்பட்டாலும் தொடர்ந்து படித்து 2004இல் மருத்துவப் பட்டம் பெற்றேன்.

உங்கள் மருத்துவச் சேவை முதலில் எங்கே தொடங்கியது?

திருகோணமலையில் உள்ள ஒரு சின்ன ஊர் ஈச்சிலம்பற்று. 70,000 பேர் அங்கே மருத்துவ வசதியில்லாமல் கஷ்டப்பட்டார்கள். தண்ணீர் இல்லை, மின்சாரம் இல்லை, ஆகவே ஒரு மருத்து வரும் அங்கே போகச் சம்மதிக்கவில்லை. நானாகவே போய் அந்த ஊருக்கு மாற்றல் கேட்டு மருத்து–வராகப் போனேன். எப்படியாவது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என நினைத்தேன்.

போர் காரணமாக மக்கள் குடிபெயர்ந்தபோது, நானும் அவர்களுடன் மட்டக்கிளப்புக்குப் போனேன். அங்கே எனக்கு எதிரிகள் பெருகிவிட்டார்கள். ராணுவமும் கருணா அணியும் என்னைக் கொல்ல தருணம் பார்த்திருந்தனர். பல தடவை மயிரிழையில் உயிர்தப்பினேன். ஒவ்வொரு தடவையும் நான் பிறந்ததற்கான கடமை இன்னும் தீர்க்கப்படவில்லை என நினைத்துக்கொள்வேன். 2007 டிசம்பரில் முல்லைத்தீவுக்கு என்னை மாற்றினார்கள். அங்கே மே 2009இல் போர் முடிவுக்கு வரும் வரைக்கும் சேவையாற்றினேன்.

முள்ளிவாய்க்காலில் சிசேரியன் அறுவை சிகிச்சை செய்ததாகச் சொல்லியிருந்தீர்கள். அதிலெல்லாம் உங்களுக்குப் பயிற்சி இருந்ததா?

மருத்துவக் கல்லூரியில் எல்லாவிதமான நோய்களுக்கும் காயங்களுக்கும் சிகிச்சை முறை கற்பித்திருந்தார்கள். பல துறைகளிலும் அடிப்படை அறிவை வளர்த்துக் கொண்டேன். குண்டுபட்டு துடித்துக் கொண்டிருக்கும் ஒருவரிடம் போய் எனக்கு அதில் பயிற்சி கிடையாது என்று சொல்ல முடியுமா? ஏதாவது செய்து அவர் உயிரைக் காப்பாற்ற வேண்டிய கடமை இருந்தது. ஒருவரையும் திருப்பி அனுப்ப முடியாது. இருக்கிற அறிவையும் உபகரணங்களையும் மருந்தையும் வைத்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்ய முயல்வோம்.

2009 பிப்ரவரி மாதம். புதுமாத்தளன் பாடசாலையில் ஆஸ்பத்திரி ஒன்று தொடங்க முடிவெடுத்தோம். மருத்துவ உபகரணங்கள், மருந்துகள், எக்ஸ்ரே, ஆய்வு வசதி ஒன்றுமே கிடையாது. மிக முக்கியமாக ஜெனரேட்டர் இல்லை. ஆகவே, மின்சாரம் கிடையாது. அப்போது, அந்தக் கர்ப்பிணிப் பெண்ணைக் கொண்டுவந்தார்கள். பிரசவம் ஆகாமல் மூன்று நாள் கடும் அவஸ்தையில் இருந்தார். எப்படியும் சிசுவை வெளியே எடுக்க வேண்டும். எடுக்காவிட்டால் பிள்ளை செத்துவிடும். தாயும் இறந்துவிடுவார்.

சிசேரியன் அறுவை சிகிச்சை செய்வதற்குத் தேவையான உயரமான கட்டில் இல்லை. சாதாரண கட்டிலில் உடலை வைத்துக் குனிந்துதான் செய்ய வேண்டும். உட்கார்ந்துகொண்டும் செய்ய முடியாது. பெண்ணின் இடுப்புக்குக் கீழே விறைக்கும் ஊசியைச் செலுத்திவிட்டுத் துணிந்து அறுவை சிகிச்சை செய்ய முடிவுசெய்தேன். ஒருவர் ரோர்ச் லைட்டை அடித்துப் பிடித்தார். குனிந்த நிலையில் வயிறைக் கிழித்து, கர்ப்பப் பையை வெட்டிச் சிசுவை வெளியே எடுத்தேன். சிறிது தாமதித்தாலும் குழந்தை இறந்திருக்கும். நஞ்சுக்கொடியையும் அகற்றிச் சுத்தம் செய்தோம். என் முதுகு தாங்க முடியாமல் வலித்தது. கர்ப்பப்பையைத் தைத்தபோது ரத்தம் பெருகிக்கொண்டேயிருந்தது. ஊசியும் தெரியவில்லை நூலும் தெரியவில்லை. ஐந்து மணி நேரம் கடந்துவிட்டது. என்ன செய்வது என்று புரியவில்லை. உதவியாளர் ஒருவர் 'ஒரு மடிப்பு விட்டுப்போயிருக்கலாம், தடவிப் பாருங்கள்' என்றார். உண்மைதான் விட்டுப்போன மடிப்பைச் சேர்த்துத் தைத்து ரத்தம் பாய்வதை நிறுத்தினேன். வயிற்றையும் தைத்து முடிக்க 8 மணி நேரம் ஆனது. எட்டு மணி நேரம் குனிந்து வேலை செய்ததால் தாங்க முடியாத முதுகு வலி. தாயையும் சேயையும் காப்பாற்றிய மகிழ்ச்சியில் அது மறைந்துபோனது.

போரில் ராணுவம் கொத்துக்குண்டு பாவித்ததா?

இலங்கை ராணுவம் (Cluster Bombs) கொத்துக் குண்டுகள் பாவிப்பதாக செய்திகள் வந்தன. ஏற்கெனவே அவை தடைசெய்யப்பட்டிருந்தன. ஆனால், எங்களிடம் அதற்கான ஆதாரம் கிடையாது.



மருத்துவர் வரதராஜா

2009 மே மாதம் போர் முடிவுக்கு வருவதற்கு இன்னும் சில நாள்களே இருந்தன. போர் உச்சத்தில் இருந்த காலம் அது. வழக்கம்போல அன்று காலை விடியும்போதே காயம்பட்டவர்களும் இறந்தவர்களும் நோயாளர்களும் அவர்கள் உறவினர்களும் மருத்துவமனையை நிறைக்கத் தொடங்கிவிட்டனர். ஆஸ்பத்திரி இயங்கியது புளியமரத்தின் கீழ்தான். பாயிலும், வெறும் தரையிலும், பிளாஸ்டிக் விரிப்பிலும் காயம்பட்டவர்கள் கிடந்தார்கள். 24 மணி நேரமும் ஒரு கூட்டு ஓலம் கிளம்பியபடியே இருந்தது. மருந்துகள் இல்லை; உபகரணங்கள் இல்லை; உதவி இல்லை. நூற்றுக்கணக்கானவர்கள் வெளியே வரிசையில் நின்றார்கள். மிகவும் ஆபத்துநிலையில் இருந்தவர்களுக்கு மாத்திரம் சேலைன் கொடுக்கப்பட்டது. அவை புளியமரத்துக் கிளைகளில் தொங்கின. பஞ்சு கூட இல்லை என்றபடியால் வேட்டியையும், சாரத்தையும் கிழித்து புண்களைத் துடைத்துச் சுத்தமாக்கினோம். இறந்துபோன உடல்களும் காயம்பட்ட உடல்களும் ஒரே வரிசையில் கிடந்தன. அறுவை சிகிச்சையில் வெட்டப்பட்ட கால்களும், கைகளும் மூலையில் ஒரு பெரிய பிளாஸ்டிக் வாளியில் குவிக்கப்பட்டிருந்தன. அன்று மாலை அவை பிணங்களுடன் புதைக்கப்படும். பார்வைக்கு இறைச்சிக் கடைபோலவே ஆஸ்பத்திரி இருந்தது. தரையில் எப்பவும் ரத்தம் ஓடும். ரத்தத்தில் தோய்ந்து என்னுடைய ஒரே சப்பாத்து உக்கி கிழிந்துவிட்டதால் கடைசி நாள்களில் நான் வெறும் காலுடனேயே நடந்து வேலை பார்த்தேன்.

55 வயது மதிக்கக்கூடியப் பெண்ணைத் தூக்கிவந்தார்கள். பெரிய காயம்பட்டு முழங்கால் சில்லு வெளியே தெரிந்தது. சதைகள் தொங்கி, ரத்தம் ஒழுகியது. அவருடைய புண்ணைச் சுத்தமாக்கச் சொல்லிவிட்டு அடுத்தவரைப் பார்த்தேன். பாதியில் எல்லோரும் வெளியே ஓடினார்கள். மருத்துவர்கள், உதவியாளர்கள், நோயாளர்கள் எல்லோரும் இடித்துப் பிடித்து வெளியேறினார்கள். காரணம், அந்தப் பெண்ணின் முழங்காலுக்குள் ஒரு குண்டு புதைந்துபோய்க் கிடந்ததுதான். டோர்ச் பாட்டரியிலும் பார்க்கக் கொஞ்சம் பெரிய குண்டு. கொத்துக்குண்டிலிருந்து புறப்பட்டப் பல குண்டுகளில் ஒன்று அவர் காலுக்குள் ஆழமாகப் புதைந்துவிட்டது. எந்த நேரமும் அது வெடிக்கலாம். அந்த பயத்தில் ஆள்களெல்லாம் வெளியேறி விட்டார்கள். காயம்பட்டப் பெண்ணுக்கு விசயம் தெரியாது. அவர் கத்தியபடியே கிடந்தார். தெரிந்தாலும் எங்கே ஓடுவது? அவர்தானே குண்டு.

வெளியே நானும் மற்ற மருத்துவர்களும் கூடி ஆலோசித்தோம். முதல் தடவையாக ராணுவம் கொத்துக்குண்டு பாவித்திருப்பதற்கானத் தடயம் எங்களுக்குக் கிடைத்திருந்தது. மருத்துவர்கள் பயத்தை வெளியே காட்டினால் மருத்துவமனையை மூட வேண்டி வரும். அறுவை சிகிச்சை மூலம் குண்டை அகற்றுவது முடியாத காரியம். எந்த நேரமும் குண்டு வெடிக்கலாம். அப்போது நோயாளியுடன் மருத்துவரும் இறந்துபோவார். 17 வயது இளம்பெண் ஒருவர்தான் ஆலோசனை சொன்னார். தொடைக்குக் கீழே, முழங்காலுக்கு மேலே அவருடைய காலை மெதுவாக அதிர்ச்சி தராமல் கம்பி வாளால் அறுத்தோம். வெட்டிய காலை வண்டியில் வைத்துத் தள்ளிச் சென்று தூரத்தில் புதைத்தோம். அந்தப் பெண்மணியின் உயிரைக் காப்பாற்றியது பெரிய சாதனையாக அமைந்தது. அவர் சுகமாக இருக்கிறார் என்ற செய்தி சமீபத்தில் எனக்குக் கிடைத்திருக்கிறது.

உங்களுக்குச் சவால் கொடுத்த சம்பவங்கள் ஏதாவது இருக்கின்றனவா?

மருத்துவ வாழ்க்கை முழுக்கச் சவால்தான். எல்லா அறுவை சிகிச்சைகளும் வெற்றியிலேயே முடிந்தன என்று சொல்ல முடியாது. ஆகக் குறைந்த வசதிகள், ஆகக் குறைந்த உபகரணங்கள், ஆகக் குறைந்த மருந்துகள் இவற்றை வைத்துக் கொண்டு சமாளித்ததுதான் பெரிய விசயம். ஒரு நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணை கொண்டு வந்தார்கள். அதைப்போல ஒரு காட்சியை நான் என் மருத்துவ வாழ்க்கையில் கண்டது கிடையாது. குண்டு, வயிற்றைத் துளைத்துப் பின்னர் கர்ப்பப் பையையும் துளைத்து வெளியேறியிருந்தது. குழந்தையின் கை, குண்டுத்துளை வழியாக வெளியே வந்துவிட்டது. நச்சுக்கொடியும் துவாரத்திலிருந்து வழிந்தது. குழந்தையில் குண்டு பட்டிருந்ததால் அது இறந்துவிட்டது. தாயைக் காப்பாற்றலாம் என்று பார்த்தால், அவருடைய உடலில் பல பாகங்கள் சிதைந்துபோயிருந்தன. அவரையும் காப்பாற்ற முடியவில்லை.

புலிகளுடன் உங்கள் உறவு எப்படி இருந்தது?

மருத்துவரீதியாக அவ்வப்போது உதவினார்கள். போர்முகத்தில் நான் வேலை செய்ததால், பல விநோதமான சம்பவங்கள் நேர்ந்தன. ஒரு நாளைக்கு 200 பேரைப் பார்க்க வேண்டும். 18 மணி நேரம் தொடர்ந்து வேலை செய்தாலும் முடிவுக்கு வருவதில்லை. யுத்த வலயத்தில் 3,00,000 பேர் சிக்கியிருந்தார்கள். ஆனால், 80,000 பேர்தான் என அரசாங்கம் ஊடகங்களுக்குத் தொடர்ந்து அறிவித்தது. 2,20,000 ஆள்கள் அழிந்தாலும் கணக்குக் காட்ட வேண்டிய அவசியம் கிடையாது. ஆஸ்பத்திரியில் நாங்கள் நோயாளர்களின் விவரங்களைக் கடைசி நாள் வரை பதிவுசெய்யத் தவறவில்லை.

அதிகாலை நேரம் ஒரு பெண்ணைக் கொண்டு வந்து இறக்கினார்கள். நடு இரவு பங்கரிலிருந்து வெளியே சிறுநீர் கழிக்கப் போயிருக்கிறார். அந்த நேரம் RPG (Rocket Propelled Grenade) அதாவது, நுனியில் குண்டு பொருத்திய ரொக்கட் ஆகாயத்திலிருந்து கீழிறங்கி அவருடைய ஒரு தொடையைத் துளைத்து மற்றொரு காலையும் துளைத்து வெளியேறமுடியாமல் அப்படியே நின்றுவிட்டது. அதிர்ஷ்டவசமாகக் குண்டு வெடிக்கவில்லை. ஏவுகணையின் நுனியில் பொருத்தியிருந்த குண்டு எந்த நேரமும் வெடிக்கலாம். ரொக்கெட்டை நடுவே வெட்டி இரண்டு பக்கமும் உருவி எடுத்துவிட்டுத்தான் சிகிச்சையை மேற்கொள்ளலாம். ஆனால், முதலில் குண்டைச் செயலிழக்கச் செய்ய வேண்டும். புலிப்படை வீரர் ஒருவர், செய்தி கேட்டு எங்கேயோயிருந்து வந்து, குண்டைச் செயலிழக்கவைத்தார். அதன் பின்னர்தான் நாங்கள் சிகிச்சையை ஆரம்பிக்க முடிந்தது. பெண்ணும் மரணத்திலிருந்து தப்பினார்.

நீங்கள் 2011இல் அமெரிக்கா புறப்பட்டபோது, இலங்கை அரசு அதைத் தடுக்க முயலவில்லையா? வேறு ஏதாவது விதத்தில் தொந்தரவு கொடுத்ததா?

நான் அமெரிக்கா புறப்படுவது அவர்களுக்குத் தெரியாது. முன்னரே தெரிந்திருந்தால் எப்படியும் தடுத்திருப்பார்கள். நான் இந்தியா சென்று அங்கேயிருந்து ரகசியமாக அமெரிக்காவுக்குப் பயணமானேன். ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராகப் பேசிவிடுவேன் என்று அவர்களுக்குப் பயமிருந்தது. 2014இல் இலங்கைக் குற்றப் புலனாய்வுத் துறை எனக்கு ஒரு கடிதம் அனுப்பியது. அதில், சித்திரவதைக் கூடம் என அறியப்பட்ட கொழும்பு 4ஆம் மாடிக்கு ஒரு குறிப்பிட்ட தேதியில் வரும்படி எனக்கு ஆணை பிறப்பித்திருந்தது. என் தங்கை 'அவர் இங்கே இல்லை' என்று சொன்னபோது... அவர்கள் சொன்னார்கள், 'அவர் இல்லாவிட்டால் என்ன? நீ வா... அது போதும்.'

இப்போது அமெரிக்காவில் என்ன செய்கிறீர்கள்?

அமெரிக்காவில் திரும்பவும் மருத்துவம் படித்து, பரீட்சைகள் எழுதி, எல்லாச் சோதனையும் பாஸ் பண்ணினேன். மருத்துவப் பணிக்குப் பல ஆஸ்பத்திரிகளுக்கு விண்ணப்பித்திருக்கிறேன். அன்றாடம் சாப்பாட்டுக்குத் தொழில்நுட்ப உதவியாளர் வேலைசெய்கிறேன். தினம் நல்ல செய்தி வருகிறதா என்று குறுஞ்செய்தியையும் மின்னஞ்சல்களையும் வீட்டுத் தபால்பெட்டியையும் பார்க்கிறேன். அடுத்தது என்னவென்று காத்திருக்கிறேன்.

# விசேட தேவையுடையோர் மற்றும் விசேட வகைப்படுத்தலுக்குள் அடங்கும் பெண்கள்

## இவர்கள் தொடர்பில் ஆய்வறிக்கை விரைவில் வடக்கு சுகாதார அமைச்சு அறிவிப்பு

வடமாகாணத்திலுள்ள விசேட தேவை உடையோர் மற்றம் விசேட வகைப்படுத்தலுக்குள்உள்ளடங்கும்பெண்கள்தொடர்பான தகவல்களை திரட்டும் ஆய்வு கணக்கெடுப்பின் முடிவுகள் தொடர்பாக அண்மைக் காலத்தில் சில வலைத் தளங்களில் வெளியிடப்பட்ட செய்திகள் தொடர்பாக இந்த ஆய்வினை மேற் கொள்ளும் அமைச்சு என்ற வகையில் எமது கருத்தை வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆய்வு நடத்துகின்ற அமைச்சுடன் எவ்வித தொடர்பாடலையும் மேற் கொள்ளாது அத்தகைய செய்திகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. – என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்துள்ளார்.

நீண்ட காலப் போரின் பின்னர் வட மாகாணத்தில் வாழும் மக்கள் பல்வேறு வகைப்பட்ட சமூகப் பிரச்சினைகளுடனும் மாற்று வலுவுடையோர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர. இவர்கள் நலன்கள் மற்றம் தேவைகளைக் கண்டறிதும் பேணுவதும் சமூகத்தினதும் அரசினதும் பொறுப்பாகும்.

இந்த வகையில் வட மாகாணத்திலுள்ள விசேட தேவை உடையோர் வகைப்படுத்தலுக்குள்ளடங்கும் பெண்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டும் நோக்குடன் 2015 ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையின் கீழ் அனுமதித்த கருத்திட்டத்தின் பயனாக வடமாகாண சுகாதார அமைச்சினால் இந்த ஆய்வானது முன்னேடுக்கப்பட்டது.

திறனாற்றல் குறைபாட்டின் வகைகளை இனம் காணல், விசேட தேவை உடையோர் மற்றும் விசேட வகைக்கு உட்படுத்தக் கூடிய பெண்களின் நிலைகளைக் கண்டறிதல், இவர்களின் தேவைகளை அவர்கள் சார்பில் புரிந்து கொள்ளல், இவர்களுக்கு வழங்கப்படும் சேவைகளில் காணப்படும் இடைவெளிகளை இனம்காணம், இவர்களின் தேவைகளை முன்னுரிமைப்படுத்தி விரிவான மற்றும் ஒருங்கிணைந்த சேவை வழங்கலை திட்டமிடுதல் என்பன இந்த ஆய்வின் குறிக் கோளாகும். ஆரம்பத்தில் அச்சிடப்பட்ட வினாக் கொத்தின் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்ட போதிலும் ஆசியா மன்றத்தின் உதவியுடன் தகவல் சேகரிப்பானது கணினிப் பலகையின் (Tablet Pe) மூலம் பெறப்பட்டு இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டது. இதன் மூலம் பெறப்படும் தகவல்கள் உடனுக்குடன் ஆய்வுக்கு உட்படுத்தக் கூடியதாக உள்ளது.

இந்த ஆய்வானது இரு கட்டங்களைக் கொண்டதாகும். முதற் கட்டத்தில் விசேட தேவை உடையோர் அடையாளம் காணப்படுகின்றனர். இதற்கான தகவல் சேரிப்பானது சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் சசுமார் 350 குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. முதலாம் கட்டத்தில் அடையாளர்கள் காணப்பட்ட விசேட தேவை உடையோரின் திறனாற்றல் குறைபாடுகள் இரண்டாம் கட்டத்தில் மருத்துவ உத்தியோகத்தர்களின் உதவியுடன் உறுதிப்படுத்தப்படும்.

முதலாம் கட்ட ஆய்வானது கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இது வரை பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட முதலாம் கட்ட ஆய்வின் தகவல்கள் கடந்த 2016.10.20 ஆம் திகதி கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் ஆரம்பத் தகவல்கள் திரட்டுக்களின் பகிர்வு நிகழ்வில் ஆர்வலர்களுக்குப் பகிரப்பட்டன.

மேலும் தொடர்புடைய அமைச்சுக்களுக்கு அவர்கள் சம்பந்தப்படும் விடயங்கள் தொடர்பாக தகவல் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என அமைச்சுக்களுக்கும் எம்மால் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே முதலாம் கட்டம் மட்டுமே நிறைவுற்ற நிலையில் அதன் முடிவுகள் எம்மால் வெளியிடப்பட்டிருந்த போதும் அது பற்றி அறிந்திராத முறையிலேயே மேற்படி செய்தி பிரசுரிக்கப்ட்டுள்ளது.

முதலாம் கட்ட ஆய்வினை வட மாகாணத்தில் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களிலும் இரண்டாம் கட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளவதற்கு நிதிப் பற்றாக்குறை பெரும் சவாலாக இருந்தது. ஆய்வு நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்து நிதி வழங்கலை மேற் கொள்வதற்கு அண்மையில் மாகாணதிறைசேரியிடம் இருந்து கிடைக்கப் பெற்ற அனுமதிக்கமைவாக நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் தகவல் சேகரிப்புப் பணிகள் குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களால் அவர் தம் வழமையான கடமைகளுக்கப்பால் மேற்கொள்ளப்பட்டு வருவதானால் ஆய்வினை நிறைவு செய்வதில் தாமதம் நிலவி வருகின்றது.

எவ்வாறாயினும் இவ் ஆய்வானது வெகு விரைவில் பூர்த்தி செய்யப்பட்டு பெறப்பட்ட தகவல்களை பகிர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பின்தொடரும் வாத்துகள்!



தென் கொரியாவின் சியோல் நகரில் வசிக்கும் ஒருவரை, 21வாத்துக் குஞ்சுகள் பின்தொடர்ந்து கொண் டிருக்கின்றன. பொதுவாக முட்டைகளில் இருந்து வெளிவரும் குஞ்சுகள், தாயைத்தான் பின்தொடரும். ஆனால், மனிதரைப் பின் தொடர்வதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியமடைகிறார்கள்.

நான் 21வாத்து முட்டைகளைப் பொரிக்க வைத்தேன். ஓட்டை உடைத்துக்கொண்டு வெளியே வர சிரமப்பட்ட குஞ்சுகளுக்கு ஓடுகளை உடைத்து, உடலைத்தடவிகொடுத்து, பத்திரமாகப் பார்த்துக்கொண்டேன். முட்டைக்குள்ளிருந்து வெளிவந்தவுடன் என்னைப் பார்த்ததாலோ என்னவோ அத்தனை வாத்துக் குஞ்சுகளும் நான் சொல்வதைக் கேட்கின்றன. நான் எங்கே சென்றாலும் பின்னாலேயே வருகின்றன. வீட்டில்தான் இப்படி என்று காட்டுக்குள் சென்றேன். அங்கும் இவை என்னுடனே வந்துகொண்டிருந்தன. நான் நின்றால் அவையும் நின்றன. ஓரிடத்தில் அமர்ந்து, பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றினேன். அனைத்தும் ஆனந்தமாகக் குடித்தன. நான் மெதுவாக அந்த இடத்தை விட்டு நகர ஆரம்பித்தேன். உடனே தண்ணீர் கூடக் குடிக்காமல் என் பின்னால் வர ஆரம்பித்துவிட்டன. அந்த வழியே வந்தவர்கள் எல்லாம் இந்தக் காட்சியைக் கண்டு ஆச்சரியமடைந்தனர்.

# முன்னாள் நீதியரசர்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பிடரியில் பிடித்து ஆட்டுகிறது அரசியல்**

விக்கினேஸ்வரனுக்கு அரசியல் புதிது. பழக்கமில்லாத அரசியல் அவரைப் (பிடரியில்) பிடித்து ஆட்டுகிறது. நீதித்துறையில் அவர் சேகரித்துக் கொண்ட அடையாளங்களை எல்லாம் அவர் தேர்வு செய்த அரசியல் கரைத்துக் கொண்டிருக்கிறது. இதனால் இன்று அவர் தான் என்ன கதைக்கிறேன், என்ன செய்கிறேன் என்றே தெரியாத குழப்ப நிலைக்குள் ளாகியிருக்கிறார். இதனையிட்டு அவரை ஆழமாக நேசிப்போர் கவலைப்படுகிறார்கள். அவருடைய அரசியல் எதிரிகள் சந்தோசப்படுகின்றனர். எல்லாவற்றுக்கும் அப்பால் விக்கினேஸ்வரனை வரலாறு எப்படி மதிப்பிடப்போகிறது என்பதே முக்கியமானது.

வரலாற்றுக்கு மட்டுமல்ல, சமகாலத்துக்கும் தேவைப்படுவது, விக்கினேஸ்வரன் பொது அரங்கில் பேசும் அரசியலையும் அதன் உள்ளடக்கத்தையும் நடை முறைப்படுத்துவதற்கான கட்டமைப்பும் பொறிமுறையும் அதனுடைய செயல் விளைவுகளுமே. இவற்றை அவர் எப்படி உருவாக்கிச் செயற்படுத்தப் போகிறார் என்பதாகும்.

சமகாலத்திற் செய்யப்படும் பங்களிப்புகளே ஒருவருடைய அல்லது ஒரு அமைப்பினுடைய வரலாற்றுப் பெறுமானங்களை உண்டாக்குவன. ஆகவே, விக்கினேஸ்வரன் மொழிகின்ற அல்லது பிரகடனப்படுத்துகின்ற அரசியலை நடைமுறைப்படுத்துவதற்கான கட்ட மைப்பும் பொறிமுறையுமே அவருடைய வரலாற்றடையாளமாகவும் பெறுமானமாகவும் இருக்கும். இதைப்பற்றிய அறிவுரைகள், ஆலோசனைகள், வழிகாட்டல்கள் பலவும் விக்கினேஸ்வரனின் முன்னால் பலராலும் வைக்கப்பட்டுள்ளன. அவருக்கான ஆதரவும் அவர் எதிர்பார்த்ததற்கும் மேலாகக் கிடைத்திருக்கிறது. கட்சிகள் எதனோடும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளாமலிருக்கும் விக்கினேஸ்வரன் என்ற தனி அடையாளத்துக்குக் கிடைத்திருக்கும் மிகப் பெரிய ஆதரவுத் தளம் இது. இன்னொரு வகையில் சொன்னால் தனிக் கட்சிகளுக்கே இந்தளவு ஆதரவுத்தளம் இன்று இல்லை என்று சொல்லலாம். அந்தளவுக்குப் பெரிய தொரு பலம் அவருக்குண்டு. ஆனாலும் விக்கினேஸ்வரன் மிகப் பலவீனமாகவே இருக்கிறார்.

**களத்தில் இறங்கினார்தான் உண்மை நிலை தெரியும்**

அவர் களத்தில் – பந்தயத்தில் – இறங்கட்டும். அப்பொழுது பாருங்கள், அவருடைய குதிரை எந்தளவு சக்தி மிக்கது என்று தெரியும் என்கின்றனர் சிலர். இது விக்கினேஸ்வரனைப் பலமான சக்தியாகக் கருதும் தரப்பு. இவர்களைப் பொறுத்தவரை இன்று விக்கி னேஸ்வரனுக்கு நிகரோ மாற்றோ இல்லை என்பது முடிவு.

இதையே மறுதரப்பும் சொல்கிறது. ஆமாம், அவர் பந்தயத்தில் இறங்கட்டும். அப்போது விளங்கும் அவருடைய குதிரையின் பலம் எப்படியானது என. இவர்களுடைய கணிப்பில் விக்கினேஸ்வரன் சும்மா வாயினால் கம்பு சுத்துகிற பேர் வழியே என்பதாகும்.

இதையெல்லாம் கடந்து விக்கினேஸ்வரன் எப்படி நிற்கப்போகிறார் என்பதே இன்றைய கேள்வி. இதேவேளை நீதிமன்றத்தில் விக்கினேஸ்வரனை நிற்க வைத்திருக்கும் டெனீஸ்வரனுடைய தனிப்பட்ட அபிப்பிராயத்தையும் இங்கே நோக்க வேண்டும். டெனீஸ்வரன் சொல்கிறார், என்மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டினை மறுக்க வேண்டியது எனக்குத் தவிர்க்க முடியாதது. அதை நான் முதலமைச்சருக்குத் தெளிவுபடுத்தியிருந்தேன். அவர் அதனைப் புரிந்து கொண்டிருந்தால் இன்று இந்த நிலை வந்திருக்காது. முதல் தடவை நீதிமன்றத்துக்குப் போக வேண்டியிருந்தது, என்னுடைய பதவி முறையற்று – முறையற்ற குற்றச்சாட்டிற்காக – பறிக்கப்பட்டதற்காக. இரண்டாவது தடவை நீதிமன்றத்தை நாட வேண்டியிருந்தது நீதிமன்றத்தீர்ப்பை அவமதித்ததற்காக. நீதித்துறையிலும் அரசியல்துறையிலும் செயற்படும் ஒரு மூத்தவர் இப்படித் தவறுகளை இழைப்பது வருத்தத்திற்குரியதே. ஆனாலும் அவரை நான் அரசியல் ரீதியாகவோ தனிப்பட்ட ரீதியிலோ எதிராகப் பார்க்கவில்லை. அவருக்கான மதிப்பை அளிக்கிறேன் என.

**அடி சறுக்கிய யானை**

ஆகவே இங்கே பிரச்சினை, விக்கினேஸ்வரன் அரசியல் விடயங்களை அதற்கான பொறுப்புணர்வோடும் சரியாகவும் மேற்கொள்ளவில்லை என்பதனால் ஏற்பட்ட விளைவுகளே. இதை அவர் ஏன் செய்கிறார்? அவருக்கு இது விளங்காதா? என்றால், அப்படியும் சொல்ல முடியாது. அரசியலில்தான் அவர் புதியவர். அனுபவம் குறைந்தவர் என்றால், நீதித்துறையிலும் அனுபவம் குறைந்தவர் என்று சொல்ல முடியாது.

நீதித்துறையில் அவரையும் விட இளையவரான ஜுனியர் ஒருவரிடமே இன்று விக்கினேஸ்வரன் தோற்றிருக்கிறார். இதைக்குறித்து விக்கினேஸ்வரனும் அவரை ஆதரிப்போரும் கவனம் கொள்வது அவசியம்.

அரசியலில் நேர்மையோடு புத்திசாலித்தனமும் துணிச்சலும் மக்களுடனான உறவும் (மக்கள் என்பது அவருடைய பிள்ளைகளை அல்ல. பொதுசனங்களையே) அவர்கள் மீதான கரிசனையும் அர்ப்பணிப் பான செயற்பாடுகளும் அவசியம். இவையே ஒருவரை அரசியலில் தலைமைச் சக்தியாக்கும். இவை இல்லை என்றால், நின்று பிடிப்பது கடினம்.

என்னதான் உயரக் கத்தினாலும் தனிக்குரலுக்கு ஓர் எல்லைக்கு அப்பால் எந்த வலிமையும் இருப்பதில்லை. ஏறக்குறைய விக்கினேஸ்வரனின் நிலை இன்று இதுதான். அவர் ஏராளமாகப் பேசுகிறார். பல நியாயங்களை எடுத்துரைக்கிறார். அவற்றிற்கு இன்று ஒரு வெகு ஜனக் கவனம் உண்டு. ஆனால், அவர் தொடர்ந்து எல்லாவற்றைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கும் ஒருவரா கவே இன்று அடையாளமாகி வருகிறார். செய்ய வேண்டிய, கவனிக்க வேண்டிய பல விடயங்களில் அவர் கோட்டை விட்டி ருக்கிறார் என்ற விமர்சனம் கடுமையாக இருக்கிறது.

இது அவரையிட்ட நம்பிக்கையீனங்களையும் கவர்ச்சியையும் குறைக்கிறது. இந்த இடத்தில்தான் அவர் மீதான குற்றச்சாட்டுகளுக்காக அவர் நீதி மன்றத்தில் எழுந்து நிற்க வேண்டி வந்திருக்கிறது. இது விக்கினேஸ்வரனுக்குப் பெரியதொரு அடி சறுக்கலே.

காலைக்கதிர் Kalaikkathir



## காலமும் 10 கணங்களும்

# இல.வானொலி தமிழ் சேவையின் வாத்தியார் பல்கலை வேந்தன் சில்லையூர் செல்வராசன் (1933– 1995)

- முருகபூபதி - ஆஸ்திரேலியா -

*“தேனாகப் பொன்நிலவு திகழ்கின்ற*
*ஓரிரவில் தெய்வத்துள் தெய்வம்*
*என் தாயானாள் எம் மனைமுற்ற*
*மணல் திருத்தி அன்பொடுதன்*
*அருகணைத் தென் விரலைப்பற்றி*
*‘ஆனா’ என்றோரெழுத்தை*
*அழித்தழித்தும் மணல்மீது அன்றெழு*
*தப் பயிற்ற இன்றோ பேனாதனைப்*
*பிடித்தெழுதும் உரையெழுத்தும் கவி*
*யெழுத்தும் தலையெழுத்தாய்ப்*
*பிழைப்பாய்க் கொண்டென்*
*நானான போதும் தம்நாளாந்தச் சோற்*
*றுக்கும்*
*ஆடைக்கும் நலிவோர்க்காய்ப் பொருத*
*என்வாளானாளே தமிழ்*
*என்றிங்கன்பரெல்லாம் போற்றுகின்ற*
*ஆச்சி உனை*
*முதலில் அடிபணிந்தேன் போற்றி”*

பல்கலைவேந்தன் சில்லையூர் செல்வரா சன் மேடையில் தோன்றினால் முதலில் இந்தப்பாடலை ராகத்துடன் பாடிய பின்னரே தனது பேச்சைத் தொடங்குவார். அவர் கவியரங்குகளுக்கு தலைமை யேற்றாலும் தப்பாமல் பாடுவார் இக்கவிதையை.

கணீரென்ற கம்பீரமான குரல் அவருக்குக் கிடைத்த வரம்.



கமலினியும் மகன் அதிசயனும்

அடிக்கடி உறக்கத்தில் கனவு காணும் எனக்கு 1980களில் ஒரு நாள் வந்த கனவில் நண்பர் சில்லையூர் இறந்துவிட்டார். திடுக்கிட்டு எழுந்து நேரத்தைப் பார்க்கின்றேன். அதிகாலை 3 மணி கடந்துவிட்டது. அதன்பிறகு உறக்கம் நழுவிப்போய்விட்டது. காலை எழுந்து வேலைக்குப் புறப்படும்பொழுது அம்மாவிடம் நான் கண்ட கனவு பற்றிச்சொல்லிக் கவலைப்பட்டேன். எனது அம்மாவுக்கு சில்லையூரை நேரில் தெரியாது. ஆனால் அவர்களுக்கு சில்லையூரின் குரல் நல்ல பரிச்சியம்.

வானொலியில் சில நிகழ்ச்சிகளில் சில்லையூரின் மதுரமான குரலை ரசிப்பார்கள். அவர் எனது நண்பர் என்ற தகவல் தெரிந்து மகிழ்ச்சியடைந்தார்கள். தொலைக்காட்சியின் அறிமுகம் இல்லாத அந்தக்காலத்தில் இலங்கை வானொலியின் தமிழ் தேசிய சேவையும் வர்த்தக சேவையும் இலங்கையில் மட்டுமல்ல தமிழகத்திலும் நன்கு பிரபல்யம் அடைந்திருந்தன.

## கலைத்தாகம் மிக்க தம்பதியரின் தணியாத தாகம்...!

மயில்வாகனம், செந்திமதி மயில் வாகனம், சில்லையூர் செல்வராசன், கே.எஸ். ராஜா, அப்துல்ஹமீத், ராஜேஸ்வரி சண்முகம், சற்சொரூபவதி நாதன், சுந்தா சுந்தரலிங்கம், புவனலோஜினி வேலுப்பிள்ளை, சரா இம்மானுவேல், ஜோக்கிம் பெர்ணான்டோ, ராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம், ஜோர்ஜ் சந்திர சேகரன் , வி.என். மதியழகன், சண்முகநாதன் வாசுதேவன் முதலான பலரதும் குரல் நாடெங்கும் பிரசித்தம். இவர்கள் தமிழ் வானொலி நேயர்களை வானொலியின் அருகே அழைத்து கட்டிப்போட்டவர்கள் என்று சொல்வதுகூட மிகையான கூற்று அல்ல.

இக்காலத்தில் தொலைக்காட்சி நாடகங்களை அலுப்புச்சலிப்பின்றி பார்த்து ரசிக்கும் எண்ணிறைந்த மக்களைப் போன்று அந்நாட்களில்தமது ரஸனைக்கு விருப்பமான தொடர் நிகழ்ச்சிகள் நாடகங்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும் வேளைகளில் தமது அன்றாடக் கடமைகளையும் ஒருபுறம் வைத்துவிட்டு வானொலிக்கருகே வந்துவிடுவார்கள்.

அல்லது குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை செவிமடுப்பதற்கு ஏற்றவாறு தமது வீட்டுப் பணிகளுக்கு நேரவரையறை செய்துகொள்வார்கள்.

மக்கள்வங்கிவிளம்பரத்தில் ‘அத்தானே அத்தானே எந்தன் ஆசை அத்தானே கேள்வி ஒன்று கேட்கலாமா உனைத் தானே?’ என்ற சில்லையூர் – கமலினி இணைந்து பாடிய பாடலை மிகவும் ரசித்துக்கேட்ட வானொலி ரசிகர்கள் ஏராளம்.

“எங்கள் சில்லையூர் இறந்துவிட்டார் எனக் கனவு கண்டேன் அம்மா. மிகவும் கவலையாக இருக்கிறது”– என்றுசொன்னதும் “இதிலென்ன கவலைப்பட இருக்கிறது?. நல்ல கனவுதான். அவருக்கு நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் இருக்கும். உனக்கு கவலையாக இருந்தால் அவரைப்போய் பார். அல்லது வேலைக்குப் போனதும் அவருக்கு தொலைபேசி எடுத்து சுகத்தை விசாரித்துக்கொள்!” என்று அம்மா எனக்கு ஆறுதல் சொன்னார்.

அம்மா சொன்னவாறு சில்லையூரை தொலைபேசியில்தொடர்புகொண்டு சுகம் விசாரித்தேன். அவர் மறுமுனையிலிருந்து பெருங்குரலெடுத்துச் சிரித்தார்.

“என்மீதான அக்கறைக்கு மிக்க நன்றி நண்பரே. உமது அம்மா சொன்னவாறு நல்ல கனவுதான். நான் நன்றாக இருக்கிறேன். பிறகு சந்திப்போம்.”– என்றார். இச்சம்பவம் நடந்து சுமார் 15 ஆண்டுகளின் பின்னர்தான் 1995 இல் சில்லையூர் மறைந்தார். அப்பொழுது நான் அருகிலும் இல்லை. கனவும் காணவில்லை.



சில்லையூர் - கமலினி

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கொழும்பு பொரளையில் கனத்தை மயானத்தில் அமைந்துள்ள சில்லையூரின் நினைவுக்கல்லறை யையும் கமலினி செல்வராசன் தந்த அவரது கவிதைத்தொகுப்பின் முதலாவது பாகத்தையும் தான் பார்த்தேன்.



சில்லையூர் செல்வராசன்

தாயின் கரத்தால் மண்ணிலே எழுதப் பழகி, கவிஞனாக உயர்ந்து’ பல்கலை வேந்தனாக வலம்வந்து, தனது பூர்வீக ஊரை இலக்கிய உலகத்தில் நிரந்தரமாக பதிவுசெய்துவிட்டு நினைவுகளை தந்து மறைந்துவிட்ட சில்லையூர் செல்வராசன் சுவாரஸ்யமான நண்பர்.



சில்லையூர் செல்வராசன் நினைவுத்தூபி முன்பாக மேயருடன் கமலினியும் அதிசயனும்

## அத்தானே அத்தானே எந்தன் ஆசை அத்தானே... கேள்வி ஒன்று கேட்கலாமா உனைத்தானே...!



கோமாளிகள் திரைப்படத்தில் கலைத்தம்பதி

தமிழகத்தில் வாத்தியார் என்றால் அது மக்கள்திலகத்தையே குறிக்கும். இலங்கையில் வானொலி வட்டாரத்தில் வாத்தியார் என்றால் அது எங்கள் சில்லையூர் செல்வராசனையே குறிக்கும்.

வானொலி ஊடகத்தின் நுட்பங்கள் பலவற்றை குறிப்பாக விளம்பரம், நாடகம், ஒலிச்சித்திரம் முதலான துறைகளில் அவர் பலருக்கு அங்கு வாத்தியாராகவே திகழ்ந்தார். காரணம் நல்ல குரல்வளம் நடிப்பாற்றல் அதற்கும் அப்பால் படைப்பாளுமையும் கற்பனைத் திறனுமுள்ள கவிஞர்.

எழுத்தை முழுநேரத்தொழிலாக கொண்டிருந்து வாழ்ந்தவர்களை பார்த்திருக்கின்றோம். சில்லையூர் தனது குரலையே மூலதனமாக வைத்து வாழ்ந்தவர்.

அவர் இருக்கும் இடம் எப்பொழுதும் கலகலப்பானதுதான். அவருக்கு அருகில் பாடும் ஆற்றல் உள்ள ஒருவர் இருந்தால் உடனுக்குடன் பாடல் புனைந்து கொடுத்து பாடவைத்துவிடுவார். இது பற்றி பிரான்ஸில் வதியும் நண்பர் இளங்கோவனின் பதிவொன்றையும் கண்ணுற்றேன்.

பாரதி நூற்றாண்டுகாலத்தில் எங்கள் ஊரில் நாம் நடத்திய பாரதிவிழாவுக்கு சில்லை யூரை கவியரங்கிற்கு அழைத்திருந்தோம். அத்துடன் எம். ஏ. குலசிலநாதனையும் இசை நிகழ்ச்சி நடத்துவதற்கு அழைத்தோம். விழா முடிந்ததும் மன்றத்தின் தலைவர் மயில்வாகனன் மாமா இல்லத்தில் நடு இரவு 1 மணி வரையில் கச்சேரிதான். சில்லையூர் புதிதாக பாடல்கள் இயற்ற குலசீலநாதன் அதற்கு மெட்டமைத்துப்பாடினார். பொழுது சென்றதே தெரியவில்லை. அதன்பிறகு தமது மோட்டார் சைக்கிளில் சில்லையூர் தமது மகனுடன் கொழும்புக்குப் புறப்பட்டுச் செல்லும்பொழுது அதிகாலையாகிவிட்டது.

பாரதி நூற்றாண்டு காலத்தில் வீரகேசரி வாரவெளியீட்டில் சில்லையூரும் புதுவை ரத்தினதுரையும் நடத்திய கவிதைச்சமர் தொடர் இலக்கிய சுவைஞர்களுக்கு விருந்து படைத்தவை. 1983 அமளியின் பொழுது இடப்பெயர்வில் தொலைத்துவிட்ட அந்த அச்சுப் பிரதிகளை தேடிக்கொண்டிருக்கின்றேன்.

1980 களில் தலவாக்கல்லையில் முழுநாள் பாரதிவிழாவை ஒழுங்குசெய்து என்னையும் சில்லையூரையும் அவரது மனைவி கமலினியையும் அழைத்திருந்தார் நண்பர் இ.தம்பையா. (இவர் தற்பொழுது கொழும்பில் பிரபல சட்டத்தரணி. மனித உரிமை செயற் பாட்டாளர்) இரவு நானு ஓயா எக்ஸ்பிரஸ் ரயிலில் புறப்பட்டோம். தம்பையா – சில்லையூர் தம்பதியருக்கு முதலாம் வகுப்பில் இருக்கைகள் பதிவுசெய்திருந்தார். நானும் தம்பையாவும் மூன்றாம் வகுப்பில் பயணித்தோம்.

நடு இரவில் சில்லையூர் எழுந்து எம்மைத் தேடிக்கொண்டு வந்துவிட்டார். எங்கள் இருவரையும் மூன்றாம் வகுப்பில் விட்டுவிட்டு தானும் கமலினியும் முதல் வகுப்பில் சௌகரியமாக பயணம் செய்வது குற்ற உணர்வாக இருக்கிறது என்று சொல்லி வருந்தினார்.

கமலினி ஆழ்ந்த உறக்கம். எங்களுடன் உரையாடிக்கொண்டு வருவதற்கே விருப்பமாக இருக்கிறது என்றார். அதிகாலை தல வாக்கல்லையில் இறங்கும் வரையில் சில்லையூர் இலக்கிய புதினங்களையும் தனது வானொலி திரைப் பட அனுபவங்களையும் எம்முடன் பகிர்ந்து கொண்டிருந்தார்.




தலவாக்கல்லையில் அரசியல் தலைவர் சந்திரசேகரனின் (பின்னாளில் மலையக மக்கள் முன்னணியை உருவாக்கிய முன் னாள் அமைச்சர்) இல்லத்தில் சில்லையூர் – கமலினி தம்பதியர் தங்கினர். நானும் தம்பையாவும் ஒரு நண்பர் இல்லத்தில் தங்கினோம். தலவாக்கல்லை தமிழ் மகா வித்தியாலயத்தில் பாரதிவிழா. காலை முதல் இரவு வரையில் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

(19 ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரன் அலெக்சாண்டரின் படைவீரர்களின் வம்சாவளியினர்

## இமயமலையில் ஆச்சரியமான ஒரு கிராமம்



தன்னிலை மறந்து ஞானத்தை தேடி அலைபவர்களின் சொர்க் கபுரி பார்வதி பள்ளதாக்கு. அப்படி தான் இமாச்சல பிரதேச பகுதியில் இருக்கும் இப்பகுதி அறியப்படுகிறது. ஆனால், உண்மையில் இது மட்டும் அந்த மலானா கிராமத்தின் அடையாளம் அல்ல. ஆம், அந்த பகுதியை குறித்து சுவாரஸ்யமான கதைகள் பல உலா வருகின்றன.

**விடுபடுதலுக்கான வழி**

இமயமலையில் அமைந்திருக்கும் அந்த மலானா கிராமத்தை சுற்றி எங்கும் பனி படர்ந்திருக்கிறது. ஏறத்தாழ 1700 பேர் வசிக்கும் இந்த கிராமத்திற்கு உலகம் முழுவதிலிருந்தும் சுற்றுலா பயணிகள் வருகிறார்கள். பனி, குளிர்காற்று வீசும் இந்த பகுதிக்கு அவர்கள் வருவதற்கு ஒரு காரணம் 'கஞ்சா'வும் கூட. உள்ளூர் மக்கள் அதனை புனித மூலிகையாக கருதுகிறார்கள். ஆனால், வெளியிலிருந்து வருபவர்களுக்கு 'விடுபடுதல்'க் கான வழி இந்த மூலிகை.

ஆனால், இந்த கிராமத்திற்கு நான் பயணிக்க காரணம் இவை எதுவும் இல்லை என்கிறார் மெக் சக்ரோபர்தி.

அவர் பார்வையிலிருந்து விரியும் கதை மிக சுவாரஸ்யமான ஒன்றாக உள்ளது. அலெக்சாண்டர் காலத்திலிருந்து இந்த கதை விரிகிறது.



**அலெக்சாண்டர் காலம்**

போரஸ் மன்னருடன் அலெக்சாண்டர் போரிட்ட வரலாறு ஒன்று உண்டல்லவா? கிறிஸ்து பிறப்பதற்கு 326 ஆண்டுகளுக்கு முந்தைய அந்த போரின் போது காயம்பட்ட அலெக்ஸாண்டர் படை வீரர்கள் இந்த கிராமத்தில் தங்கி இருக்கிறார்கள். இப்போது மாலானா கிராமத்தில் வாழும் மக்களின் மூதாதையர்கள் அந்த அலெக்சாண்டர் படை வீரர்கள் எனக் கூறப்படுகிறது.

அந்த காலக்கட்டத்தை சேர்ந்த கலைப் பொருள்கள் எல்லாம் அந்த கிராமத்தில் கிடைக்கிறன்றன. ஆனால், இவர்கள்தான் அந்த படை வீரர்களின் சந்ததி என்பதற்கான எந்த உறுதியான சான்றும் இல்லை. மரபணு ஆய்வு உட்பட எந்த அறிவியல்பூர்வமான ஆய்வும் நடைபெறவில்லை.

அந்த கிராமத்தில் பலருடன் உரையாடினேன். ஆனால், இந்த அலெக்ஸாண்டர் கதை எந்தப் புள்ளியில் தொடங்கியது என்று யாருக்கும் தெரியவில்லை.

மலானா கிராமத்தில் பல தசாப்தங்கள் தங்கி ஆய்வு செய்த திரைப்பட கலைஞர் அம்லான் தத்தா, இந்த மக்கள் தாங்கள் அலெக்சாண்டர் படையை சேர்ந்த மக்களின் வழி வந்தவர்கள என ஆழமாக நம்புகிறார்கள். அவரின் படையைசேர்ந்தது என்று நம்பப்படும் சில ஆயுங்களும் இங்கு உள்ளன. ஆனால், உறுதியான எந்த ஆதாரங்களும் இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன்.- என்கிறார்.

இந்த கிராமத்தில் வசிக்கும் பழங்குடிகளுடன் ஒப்பிடுகையில் இவர்களின் தோற்றம், உடல்வாகு வேறுவிதமாகதான் உள்ளது. அவர்கள் கனஷி எனும் ஒரு மொழி பேசுகிறார்கள். இந்த மொழியை அவர்கள் புனிதமானதாக கருதுகிறார்கள். இதனை அவர்கள் வேறு யாருக்கும் கற்பிப்பதும் இல்லை.

**மொழி ஆய்வு**

கனஷி மொழியை சுவீடன் பல்கலைக்கழகத்தை சேர்ந்த மொழியியல் அறிஞர் அஞ்சு சக்ஸேனே ஆய்வு செய்து வருகிறார். அவர், கனஷி மொழி அழிவின் விளிம்பில் இருக்கிறது, இம்மொழியை யாரும் இப்போது எழுதுவதும் இல்லை, விவரிக்கப்படாத மொழி இது என்கிறார்.

இந்த கிராமத்தை சுற்றி அனைவரும் இந்தோ – ஆர்ய மொழி பேசும்போது இந்த கனஷி மக்கள் மட்டும் சைனோ – திபெத்திய மொழியை பேசுகிறார்கள். இது பல சுவாரஸ்யமான கேள்விகளை எழுப்புகிறது என்கிறார்.

**எப்படி பயணிப்பது?**

புதிரான ஒரு விடயத்துக்குப் பயணிப்பது போலதான் உள்ளது இந்த மலானா கிராமத்திற்கு பயணிப்பதும். இந்த கிராமத்திற்கென்று முறையான சாலை வசதி இல்லை. பார்வதி பள்ளதாக்கில் உள்ள ஜாரி கிராமத்திலிருந்து நான்கு மணி நேரம் மலையில் நடந்து இந்த கிராமத்தை வந்தடைந்திருக்கிறார் மெக் சக்ரோபர்தி.

அந்த பயணம் குறித்து அவர் விவரிக்கும் போது, இந்த பயணமானது அவ்வளவு சுலபமானதாக ஒன்றும் இல்லை என்கிறார். அவர், மலையில் ஏறிக் கொண்டிருக்கும் போதே, வழியெங்கும் மலானா மக்களை சந்திக்க தொடங்கிவிட்டேன்.



அவர்களின் தோற்றம் முற்றும் முழுவதுமாக வேறுமாதிரி இருந்தது. இளம் பழுப்பு நிற முடி, அதே நிறத்தில் விழிகள், நீளமான மூக்கு என எனக்கு அவர்கள் ஹிமாச்சல் மக்கள் போல தெரியவில்லை. அவர்கள் மத்திய தரைக்கடல் மக்கள் போலதான் இருந்தனர் என்கிறார்.



**நாங்கள் ஆரியர்கள்**

லே பகுதிக்கு பயணம் செய்த தமிழகத்தைச் சேர்ந்த ஜெகநாதனும் இப்படியான கதை ஒன்றை விவரிக்கிறார்.

இந்தியா முழுவதும் தொடர்ந்து பயணம் செய்து வருகிறார் ஜெகநாதன். பிபிசி தமிழின் செய்தியாளர் நியாஸ் அகமதிடம் பேசிய அவர், காஷ்மீர் லே பகுதியிலிருந்து மேற்காக உள்ள தா, ஹனு, கர்கல் ஆகிய பகுதிகளுக்கு அண்மையில் பயணம் செய்தேன். அங்குள்




ளவர்கள் தங்களை ஆரியர்கள் என்றும், அலெக்சாண்டர் படை வீரர்களின் வம்சாவளியினர் என்றும் கூறிக் கொள்கிறார்கள் என்கிறார்.

மேலும் அவர், அவர்கள் தோற்றம் முற்றும் முழுவதுமாக வேறாக இருக்கிறது. அவர்களின் உடை, பண்பாடும் தனித்துவமானதாக இருக்கிறது. சரளமாக சமஸ்கிரதம் பேசுகிறார்கள். ஒரு நெடிய ஆய்வு மேற்கொள்ளப்படும்பட்சத்தில் பல சுவாரஸ்யமான தகவல்கள் வர வாய்ப்புள்ளது என்கிறார்.

அந்த கிராமத்தில் ஆரியர்களின் கோயில் ஒன்றும், அருங்காட்சியகம் ஒன்றும் உள்ளதாகத் தெரிவித்தார் ஜெகநாதன். *

# விலங்குகளுடன் வசிக்கும் விசித்திர மனிதர்



பெரும்பாலானவர்கள் முதலை, பாம்பு என்றவுடன் அஞ்சி நடுங்குவர். ஆனாலும் சிலருக்கு இரண்டு மீற்றர் நீளமான முதலையுடன் அறையைப் பகிர்ந்து கொள்வது கனவாகக் கூட இருந்திருக்கிறது. அவர்கள் விலங்குகளின் காதலர்களாக இருப்பர்.

பிரான்ஸைச் சேர்ந்த பிலிப் கிலட் என்கின்ற 67 வயதுடைய நபர் இரண்டு முதலைகள், இராட்சத ஆமை, நல்ல பாம்பு, கொடிய விஷம் கொண்ட கட்டுவிரியன் பாம்பு என 400 வகையான விலங்குகளுடன் ஒரே வீட்டில் வாழ்ந்து வருகின்றார்.

லூரே நதிக்கரையிலுள்ள கிராமத்தில் வசிக்கும் இவருடைய தேனீர் மேசையில் நாகபாம்பும் வீட்டுத் தோட்டத்தில் இராட்சத ஆமையும், முதலையும் என வீடு முழுவதும் ஊர்வனவே வாழ்கின்றன.

இவற்றில் பெரும்பாலானவை நன்கொடையாக அல்லது கைவிடப்பட்ட நிலையில் தன்னை வந்து சேர்ந்தன என்று கூறுகிறார் கிலட்.

மத்திய ஆபிரிக்காவில் சிறுவயதை கழித்த கிலட், அதன்பின்னர் வேட்டைக்காரர்களுக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறார். இதனால் அவருடைய வீட்டின் சுவர்களில் விலங்குகளின் சின்னங்கள் தொங்குகின்றன.

இந்த மிருகங்களை வளர்ப்பதற்குத் தேவையான அத்தனை அனுமதிகளையும் அவர் பெற்றுள்ளார் எனவும், இந்த நண்பர்களைக் கவனித்துக் கொள்வதற்காக வீட்டில் 20 பேர் பணியாற்றுகின்றனர் எனத் தெரிவிக்கிறார்.

இவ்வாறு விலங்குகளை வளர்க்கவும், அவற்றை வெளியூர்களுக்கு அழைத்துச் செல்லவும் பிரான்ஸ் அரசாங்கம் பிலிப்புக்கு அனுமதி வழங்கியுள்ள போதிலும் அயல் வீட்டார் அவருடைய வீட்டுக்கு செல்வதானாலும் முன் அனுமதி இன்றிச் செல்ல வேண்டாம் என எச்சரிக்கையும் வழங்கியுள்ளது.

# கர்ப்பிணிகள் பீட்ரூட் சாப்பிடுவது சிசுவுக்கு நல்லது

கர்ப்பிணிகள் பீட்ரூட் சாப்பிடுவதன் மூலம் இரத்தசோகை ஏற்படுவது தடுக்கப்படுவதோடு ஆரோக்கியமான குழந்தைகள் பிறக்கும் என்று மகப்பேறு மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இதில் உள்ள நார்ச்சத்து உடலில் உள்ள கெட்ட கொழுப்பை குறைத்து நல்ல கொழுப்பினை அதிகரிக்கிறது.

இதனால் ரத்த நாளங்களில் கொழுப்பு படிவது தடுக்கப்படுகிறது. பீட்ரூட்டில் உள்ள போலிக் அமிலம் கர்ப்பிணிகளுக்கு ஏற்றது. கருவில் வளரும் குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு அவசியமானது. கர்ப்பினிகள் பீட்ரூட் ஜூஸ் சாப்பிடுவதன் மூலம் குழந்தையின் முதுகெலும்பு நன்றாக வளர்ச்சியடையும், குழந்தைக்கு நரம்பு தொடர்பான நோய்கள் ஏற்படுவது தடுக்கப்படும்.

கர்ப்ப காலத்தில் ஹீமோகுளோபின் பற்றாக்



குறை ஏற்படுவது இயல்பு. இதனால் இரத்தசோகை ஏற்பட்டு பிரசவகாலத்தில் சிக்கலாகிவிடும். இதனை தடுக்க கர்பிணிகளுக்கு கொடுக்கும் உணவில் பீட்ரூட் அதிகம் சேர்த்துக் கொடுக்கவேண்டும். உற்சாகத்தை அதிகரிக்கும்: இது மனதிற்கு உற்சாகம் தரும் காய்கறி. சற்றே சோம்பலாகவோ, மன அழுத்தம் ஏற்படுவதுபோல உணர்ந்தாலோ பீட்ரூட் ஜூஸ் சாப்பிடலாம்.

இது மனதை உற்சாகப்படுத்தும், மகிழ்ச்சி ஏற்படும். இதில் உள்ள பீட்டா கரோட்டின் கண்களை பாதுகாக்கும். குழந்தைகளுக்கு கண்நோய் ஏற்படாமல் தடுக்கும். கர்ப்பிணிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். எனவே கர்ப்பிணிகளுக்கு சாலட், ஜூஸ், சூப் போன்றவைகளை செய்தும் கொடுக்கலாம்.

# கருவளையத்தை போக்கும் வழிகள்




கண்களை சுற்றி கருவளையம் இருந்தால் பார்க்கவே நன்றாக இருக்காது.

முகம் முழுவதும் சீரான சருமம் இருந்தாலும், கண்களை சுற்றி கருவளையம் இருந்தால் பார்க்கவே நன்றாக இருக்காது. சரியாக தூங்காமல், அதிக நேரம் கணினியில் வேலை செய்பவர்களுக்கு கண்களை சுற்றி கருவளையம் இருக்கும். அதை எளிய முறையில் நிரந்தரமாகப் போக்கிட சில இயற்கை சிகிச்சைகள் உள்ளன. அவற்றை இங்கு பார்க்கலாம்.

**ஹோம்மேட் ஹனி ஐ கிரீம்**

வெள்ளரி துண்டு – 3
உருளை துண்டு – 3
தேன் – 1 தேக்கரண்டி
கற்றாலை ஜெல் – 1 தேக்கரண்டி

வெள்ளரியையும் உருளைக்கிழங்கையும் நன்றாக கழுவி தனி தனியாக மிக்ஸியில் அரைத்து ஜூஸ் எடுத்துக் கொள்ளவும்.

இதில் தேனும், கற்றாலை ஜெல் கலந்து நன்கு கலக்கவும். இப்போது ஹனி ஐ கிரீம் ( home made honey eye cream) ரெடி.

இந்த கிரீமை கண்களை சுற்றி தடவுவதற்கு முன், பன்னீரால் கண்களை சுற்றி சுத்தமாக துடைத்த பின் இந்த கீரிமை போட வேண்டும். மறுநாள் காலை கழுவி விடலாம். இந்த தினமும் போட்டு வரவேண்டும். தொடர்ந்து 2 வாரங்கள் செய்து வந்தால் நல்ல வித்தியாசம் தெரிவதை காணலாம்.

# கூந்தல் வெடிப்பை தடுக்கும் வீட்டு வைத்தியம்



கூந்தலின் முனைகளில் வெடிப்புக்கள் இருந்தால், முடியின் வளர்ச்சி தடைபடும்.

சிலருக்கு கூந்தலின் முனைகள் பிளவுபட்டு இருக்கும். இப்படி முடியின் முனைகளில் வெடிப்புக்கள் இருந்தால், முடியின் வளர்ச்சி தடுக்கப்படும். குறிப்பாக இப்பிரச்சனையால் பெண்கள் தான் அதிகம் பாதிக்கப்படுவார்கள். இதற்கு நிறைய காரணங்கள் உள்ளன.

அதில் ஹேர் ட்ரையர் கொண்டு ஈரமான முடியை உலர வைத்தல், கெமிக்கல் கலந்த பொருள்களை அதிகம் பயன்படுத்துதல், ஷாம்புக்களை அதிகமாக உபயோகித்தல், கடுமையான முறையில் தலைமுடியை சீவுதல் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

இந்த முடியின் வெடிப்புக்களை ஒருசில ஹேர் மாஸ்க்குகளின் மூலம் தடுக்கலாம்.

நன்கு கனிந்த ஒரு வாழைப்பழத்தை மசித்து, அத்துடன் 2 மேசைக்கரண்டி தயிர், சிறிது எலுமிச்சை சாறு மற்றும் ரோஸ் வாட்டர் சேர்த்து கலந்து, ஸ்கால்ப் முதல் முடியின் முனை வரை தடவி 1 மணிநேரம் ஊற வைத்து, பின் அலச வேண்டும். இப்படி வாரம் ஒருமுறை ஹேர் பேக் போட்டு வந்தால், முடியின் முனையில் வெடிப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

ஒரு முட்டையை நன்கு அடித்து, அத்துடன் பால் சேர்த்து கலந்து, தலையில் நன்கு தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் அலச வேண்டும். இப்படி செய்வதனால், முடி வெடிப்புக்கள் மட்டுமின்றி, முடியின் மென்மைத் தன்மையும் அதிகரிக்கும்.

பப்பாளியை அரைத்து, அத்துடன் தயிர் சேர்த்து கலந்து தலைமுடியில் தடவி 45 நிமிடம் ஊற வைத்து அலச, முடி வெடிப்புக்கள் மட்டுமல்லாமல், முடியின் மென்மை மற்றும் வலிமை அதிகரிக்கும்.

பீர் உடலுக்கு மட்டுமின்றி, தலைமுடிக்கும் நல்லது. குறிப்பாக முடியின் வெடிப்புக்களைத் தடுக்க பீர் மிகவும் உதவியாக இருக்கும். அதற்கு பீரை தலைமுடியில் நன்கு தடவி சிறிது நேரம் ஊற வைத்து அலச வேண்டும். இப்படி வாரத்திற்கு ஒருமுறை செய்து வர, முடியில் வெடிப்புக்கள் ஏற்படுவது தடுக்கப்படும்.

ஆலிவ் ஆயில், விளக்கெண்ணெய் மற்றும் பாதாம் எண்ணெயை சரிசமமாக எடுத்துக் கொண்டு, அவற்றை வெதுவெதுப்பாக சூடேற்றி, தலைமுடியை நீரில் அலசி, பின் ஈரமான தலையில் இந்த எண்ணெய் கொண்டு நன்கு மசாஜ் செய்து 1 மணிநேரம் ஊற வைத்த பின் அலச வேண்டும். இப்படி வாரம் ஒருமுறை செய்து வந்தால், தலைமுடிக்கு வேண்டிய சத்துக்கள் கிடைத்து, முடி நன்கு ஆரோக்கியமாகவும், வெடிப்புக்களின்றியும் இருக்கும்.

# பெண்களே உறவுகளின் உன்னதம் அறிவோம்



உறவுகள் என்பது நம்மை பாதுகாக்கும் அழகிய வலை. நாம் அதனை அறுத்தெறியும் போது அபாயகரமான பாதிப்பை சந்திக்க நேரிடுகிறது. இதனால் ஏற்படும் மன அழுத்தமும், தனிமையும் தற்கொலைக்கு கூட தூண்டுகோலாக மாறிவிடுகின்றன. இதில், குடும்ப பிரச்சினைகளால் தற்கொலை செய்து கொள்ளும் விடயம் தற்போது விஸ்வரூபம் எடுத்துள்ளது.

கல்வி, வேலைவாய்ப்பு, வாழ்க்கை முறை என அனைத்திலும் ஆணுக்கு பெண் நிகராக இருந்து வரும் நிலையில் புரிதல் என்பது அதிகமாக இருக்க வேண்டும். இதுதான் படித்த சமுதாயத்தின் சரியான போக்காக இருக்க முடியும். ஆனால் தற்போது, கணவன் – மனைவிக்கு இடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் பெற்ற குழந்தைகளையே கொன்றுபோடும் அளவுக்கு வக்கிரமாகிவிட்டது. எப்போது, விட்டுகொடுக்கும் மனப்பான்மை குறைந்துபோகிறதோ, அப்போதே உறவுகளை சிதைக்கும் விரிசல் என்ற வியாதி தாக்கத் தொடங்கிவிடும்.

கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது இயல்பு. கரம் பிடித்தவர்களுக்குள் பிரச்சினைகள் இருந்தால், அந்த காலத்தில் இதனை சமரசம் செய்து வைக்க பெரியவர்கள் வருவார்கள். குடும்பத்தின் கௌரவத்தை நான்கு சுவர்களுக்குள் கட்டி காப்பாற்ற முடிந்தது. பிரிவுகள் தவிர்க்கப்பட்டன.

ஆனால், இன்று பெரும்பாலும் கூட்டுக் குடும்பத்தை யாரும் விரும்புவதில்லை. கணவன், மனைவி, குழந்தைகள் என அவர்களின் மகிழ்ச்சியும், துக்கமும் அவர்களுக்குள்ளேயே முடங்கி விடுகிறது. இக்கூட்டுக்குள், வேறுஉறவுகள் யாரையும் இவர்கள் அனுமதிப்பதில்லை. இதனால் தனிமை சிறைக்குள் குடும்பமே தவிக்கும் நிலை.

மகிழ்ச்சி பறிபோய் பல குடும்பங்கள் மனஅழுத்தத்தில் தவிக்கின்றன. பெற்றோரே பிள்ளைகளைக் கொன்று தாங்களும் தற்கொலை செய்யும் நிகழ்வுகள் அதிகரித்து விட்டன. பத்திரிகைகளின் எந்த பக்கம் திருப்பினாலும், எந்த செய்தி தொலைக்காட்சியை பார்த்தாலும் குழந்தைகளோடு பெற்றோர் தற்கொலை என்ற செய்தியை பார்க்க முடிகிறது.

இது நம் சமூகத்தில் பெருகி வரும் தடுத்த நிறுத்தப்பட வேண்டிய ஓர் அபாயகரமான போக்கு. கண்முன் நிற்கும் சவால்களை, பிரச்சினைகளை எதிர்கொள்ள பயந்து தங்கள் உயிரை மாய்ப்பதோடு, வாழ பிறந்த பிள்ளைகளின் இறுதிநாளையும் தீர்மானிப்பது தவறானது. ஒன்றும் அறியாத பிஞ்சுக்குழந்தைகள் பலி ஆவது ஆறா துயரம்.

நல்ல நண்பர்கள், ஆரோக்கியமான சூழல், துயரத்தின்போது நம்மை தாங்கி தோள் கொடுக்கும் உறவுகள் இருந்தால், உயிரை மாய்த்துக்கொள்ளும் சிந்தனை நிச்சயம் வராது. ஆனால் எந்திர காலத்தில் உறவுகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

நம் குழந்தைகளுக்கு உறவினர்களின் உறவுமுறை கூட சரியாக தெரிவதில்லை. சித்தி, சித்தப்பா, அத்தை, மாமா என எந்த உறவுமுறையும் அவர்களுக்கு தெரிவதில்லை. முழுஆண்டு தேர்வு விடுமுறைக்கு கிராமத்துக்கு சென்று உறவுகளை காணும் வழக்கம் குறைந்துவிட்டது. கிராமத்தில் எந்த வசதியும் இல்லை என்று விடுமுறைக்கு செல்வதை தடுத்து விடுகிறார்கள். வசதிகள் குறைவான கிராமத்தில்தான் உறவுகளின் உன்னதத்தை கற்க முடியும்.

குல தெய்வ வழிபாடு, பங்காளி திருமணம் என குழந்தைகளை அழைத்து கொண்டு மாமா, அத்தை என உறவுகளிடம் உறவாடும் பழக்கம் கானல் நீராகி விட்டது.

இன்று, தாத்தாவும், பாட்டியும் மாடி வீட்டில் வெளிநாட்டில் இருந்து வரும் பணத்தை வாங்கி கொண்டு தொலைக்காட்சியில் வரும் சீரியல் கதாபாத்திரங்களை தங்களுடைய உறவாக நினைத்துக் கொண்டு வாழ்கிறார்கள்.

அன்பு மட்டும் இருந்தால், எந்த ஒரு உறவையும் ஆரோக்கியமாக வைத்து கொள்ளலாம். கூட்டுக் குடும்ப வாழ்க்கை வாழ முடியாவிட்டாலும் பரவாயில்லை. குறைந்தபட்சம் அனைத்து உறவுகளுடனும் தொடர்பிலாவது இருங்கள். உறவினர்களின் இல்ல விழாக்களில் தோன்றுங்கள். கோவில் விழாக்களில் குடும்பதோடு கலந்துகொள்ளுங்கள். உறவுகள் பலப்படும்.

உறவுகள் வலுப்பெற்றால், எத்தகைய சவால்களையும் சந்திக்கும் துணிவு வரும். பிரச்சினைகளை எதிர்கொள்ளும் தைரியம் கிடைக்கும். எதையும் எதிர் நின்று போராடலாம் என்ற எண்ணம் பிறக்கும். தற்கொலை எண்ணம் தவிடு பொடியாகும். எனவே உறவுகளை நேசிப்போம்.

## அன்னை தெரேசாவே எங்களுக்காக மன்றாடுவீர்

அமைதியை உன் வாழ்வால், புன்சிரிப்பால், பிறரன்புச் சேவையால் மற்றவர்களுக்கு வழங்க அதை உங்களுடன் ஏந்திச் செல்லுங்கள். புனித அன்னை தெரேசாவே எங்களுக்காக மன்றாடுவீர் என திருத்தந்தை பிரான்சிஸ் டுவிட்டர் செய்தி வெளியிட்டுள்ளார். இரக்கத்தின் சிறப்பு யுபிலி 2016ஆம் ஆண்டு சிறப்பிக்கப்பட்டபோது இரக்கத்தின் தூதராக வாழ்ந்த அருளாளர் அன்னை தெரேசாவை அவர் செப்டம்பர் 4அன்று புனிதராக உயர்த்தினார்.

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## அன்னை தெரேசா பற்றிய புதிய நூல்

'அன்னைதெரேசா–கடவுள்நம்பிக்கையற்றவருக்கும் திருமணமான வர்களுக்கும் புனிதர்'– என்ற தலைப்பில் இத்தாலிய மொழியில் அன்னையைப் பற்றி வெளியாகும் இந்நூல் 1980 ஆம் ஆண்டு முதல் பாப்பிறை இல்லத்தின் மறையுரையாளராக பணியாற்றிவரும் காந்தலமெஸ்ஸா அடிகளார் 2003ஆம் ஆண்டு அன்னை தெரேசா அருளாளராக உயர்த்தப்பட்ட நிகழ்வையொட்டி வழங்கிய ஆன்மீக உரைகளின் தொகுப்பாகும்

# 125 ஆவது ஆண்டு நிறைவில் திருகோணமலை மறைமாவட்டம்





1893ஆம்ஆண்டுஅன்றைய திருத்தந்தை 13ஆம் லீயோவால் அவர்களால் பிரகடனப்படுத்தப் பட்ட திருகோணமலை மறை மாவட்டமானது 2018 ஆம் ஆண்டு தனது 125 ஆண்டு நிறைவை கோலாகாலமாக கொண்டாடியது. 25 ஒகஸ்ட் 2018 அன்று திருகோணமலை பேராலயத்தில் நடைபெற்ற மேற்படி விழாவை இலங்கையில் தற்போதுள்ள யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு ஆகிய நான்கு தமிழ் மறைமாவட்டங்களும் இணைந்து கொண்டாடியமை சிறப்பாகும். திருகோணமலை மறை மாவட்டத்தின் மண்ணின் மைந்தரான முதல் ஆயராக பணியாற்றும் மேதகு கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை, யாழ் மறைமாவட்ட ஆயர் யஸ்ரின்பேணாட்ஞானப்பிரகாசம் ஆண்டகை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பொன்னையா யோசவ் ஆண்டகை. ஓய்வுநிலை ஆயர் மேதகு கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் விக்டர் சோசை அடிகளார். அமல மரித்தியாகிகளின் வடமாகாண முதல்வர் எட்வின் வசந்தராஜா அடிகளார் ஆகியோருடன் ஏராளமான குருக்கள், இறைமக்கள், பிரமுகர்கள் என பலர் மேற்படி விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

25.08.1893ஆம் ஆண்டு அன்றைய திருத்தந்தை 13ஆம் லீயோ அவர்களால் திருகோணமலைமறைமாவட்டமானது இலங்கையின் ஐந்தாவது மறைமாவட்டமாக அறிவிக்கப்பட்டது. இம்மறைமாவட்டம் திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்டமென 23.10.1967 ஆம் ஆண்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இறுதியாக யுத்த காலத்தில் மிகுந்த தேவையாக கருதப்பட்ட திருகோணமலை, மட்டுநகர் பிரிப்பானது 03.07.2012 இல் சாத்தியமாகி திருமலை – மட்டுநகர் மறைமாவட்டத்திலிருந்து மட்டக்களப்பு புதிதாகப் பிரித்தெடுக்கப்பட்டு இலங்கையின் 12ஆவது மறைமாவட்டமாக உதயமாகியது.

இன்றைய திருமலை மறைமாவட்டத்தில் மொத்தமாக இருபத்திமூன்று மறைமாவட்ட சுதேச குருக்களும், அத்துடன் துறவறசபைக் குருக்களும், இருபால்துறவியரும் பணியாற்றுகின்றார்கள். திருமலை மறைமாவட்டத்தில் பதினாறு பங்குகளும் ஏனைய பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. திருமலை மறைமாவட்டத்தில் கத்தோலிக்கர் மொத்த சனத்தொகையில் 6.6 வீதம் உள்ளனர். கத் தோலிக்க விசுவாசிகளில் பெரும்பான்மையாகத் தமிழர்களும், குறிப்பிடத்தக்களவு சிங்களவர்களும், பறங்கியர்களும் காணப்படுகின்றார்கள். தமிழ், சிங்கள, முஸ்லிம் என மக்களையும் ஓரளவுக்குச் சமமாக கொண்டுள்ள திருமலை மறைமாவட்டத்தின் ஆன்மீகப் பணி, சமயப்பணி, சமூகப்பணி சவால்கள் நிறைந்ததே. போரின் வடுக்களையும், இழப்புக்களையும், இடப்பெயர்வுகளையும் அதிகம் சந்தித்த திருமலை மறைமாவட்டமானது தனது 125 ஆவது யூபிலி பயணத்தினூடாக புதிய வீறுநடைபோட வாழ்த்துகின்றோம். 125 ஆண்டுகளைக் கடந்து திருகோணமலை மறைமாவட்டத்தின் ஆறாவது ஆயராகவும் முதல் மண்ணின் மைந்தராகவும் பணியாற்றும் மேதகு கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை வழிகாட்டலில் வெற்றி நடைபோடும் திருகோணமலை மறைமாவட்டம் மேலும் சீருடனும் சிறப்புடனும் வளர்ந்து இறைபணியாற்ற காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்போம்.

(மட்டக்களப்பில் இருந்து கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரி வுரையாளர் அ. நவரெத்தினம் அடிகளார்)

## ரொறென்ரோ ஆரோக்கிய அன்னையின் பெருவிழாவில் யாழ் குருமுதல்வர்

ரொறென்ரோ பெரும்பாகத்தின் தமிழ் கத்தோலிக்க பங்கான புனித ஆரோக்கிய அன்னை தமிழ் பங்கின் திருவிழா யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரெட்ணம் அடிகளார் தலைமையில் 09 செப்ரெம்பர் 2018 அன்று வெகு விமரிசையாக நடைபெற்றது என ரீ.சி.என்.எல் செய்தியாளர் ரி.குயின்ரஸ் கனடாவில் இருந்து செய்தி அறிக் கையிடுகிறார்.

யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரெட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற மேற்படி திருப்பலியில் கனடா ரொறென்ரோ தமிழ் கத்தோலிக்க ஆன்மிக பணியக புதிய இயக்குநராக பணி ஏற்கவுள்ள சாள்ஸ் கொலின்ஸ் அடிகளார், பணி ஓய்வுபெற்றுச் செல்லும் பீற்றர் ஜிற்ரேந்திரன் அடிகளார், மன்னார் மறைமாவட்ட முரளி அடிகளாருடன் மேலும் பல குருக்களும் இணைந்து திருவிழா திருப்பலியைச் சிறப்பித்தனர். திருப்பலியின் நிறைவில் திருச்சுரூபப் பவனி, புதிதாக உருவாக்கப்பட்ட பாதையூடாக மிகச் சிறப்பாக எடுத்துச் செல்லப்பட்டது.

(கனடாவில் இருந்து ரி. குயின்ரஸ்)

## உண்மையின் எண்ணங்கள்

திருகோணமலை மறைமாவட்டத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவை இலங்கையில் தற்போதுள்ள யாழ்ப்பாணம் திருகோணமலை, மன்னார் மட்டக்களப்பு ஆகிய நான்கு தமிழ் மறைமாவட்டங்களும் இணைந்து கொண்டாடியமை சிறப்பாகும். யாழ்ப்பாணம் திருகோணமலை மன்னார் மட்டக்களப்பு ஆகிய நான்கு தமிழ் மறைமாவட்டங்கள் இணைந்து இலங்கை நாட்டில் இன்னுமொரு கத்தோலிக்க ஆயர் பேரவை உருவாக ஆவன செய்யப்பட வேண்டும் எனக் காலைக்கதிர் கிறிஸ்தவச் செய்தி இதழ் கோரிக்கையை விடுக்கிறது.

## மொன்றியல் தமிழ் கத்தோலிக்கருக்கு நற்கொடையாகும் அருட்சகோதரி

அருட் சகோதரி கார்மேல் ஜோன் புள்ளே அவர்கள் தமது அர்ப்பண வாழ்வின் 50 வருட நிறைவை (1968–2018) கனடா மொன்றியல் மீட்பின் அன்னை மறைத்தளத்தில் செப்டம்பர் 8ஆம் திகதி நிறைசெய்தார். மன்னார் மறை மாவட்டத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர்கள் அல்பேட் விக்ரர் ஜோன்புள்ளே மற்றும் மேபல் ஹெலன் பஸ்தியாம்பிள்ளை தம்பதிகளின் 5 ஆவது செல்லப்பிள்ளையாகக் கடந்த 1949 ஜனவரி 3 ஆம் திகதியில் குழந்தை கார்மேல் பிறந்தார். கடந்த 1965 இல் தனது 16 ஆவது வயதில் உரோமையிலுள்ள திருக்குடும்பக் கன்னியர் சபையின் மேலாளர்களிடம் அனுமதி பெற்று யாழ் பண்டத்தரிப்பிலுள்ள திருக் குடும்ப கன்னியர் சபையில் இணைந்தார்.

மொன்றியல் மீட்பின் அன்னை மறைத்தளம் கடந்த 2008 ஜனவரியில் கிறிஸ்து அரசர் ஆலயக் கொள்வனவோடு சுயாதீன நிர்வாகத்தில் ஆன்மீகக் கடமைகள் மற்றும் நிர்வாகப் பணிகளை நிறைவேற்ற முனைந்தது. பாவித்த பொருட்கள் மற்றும் உடுப்புக்கள் விற்பனை செய்யும் வியாபார தளத்தில் அருட்சகோதரி கார்மேல் முழுநேரப் பணியாளராகக் கடமையாற்றிய 08 வருட காலத்தில் ஒவ்வொரு வருடமும் 40 ஆயிரம் கனடிய டொலர்களுக்கு மேற்பட்ட தொகையை இலாபமாகப் பெறக்கூடிய சிறந்த நிர்வாகியாகப் பணியாற்றினார். ஒரு அருட்சகோதரிக்கான ஆன்மீகப் பணி தவிர புலம்பெயர் அகதிகளாக மொன்றியல் மாநகரில் குடியேறும் தமிழ் மக்களுக்கும் பல்வேறு விதத்தினில் உதவும் தன்னார்வத் தொண்டராகத் தனது சேவைகளை அயராது ஆற்றி வருகின்றார். குறிப்பாக அகதி விண்ணப்பதாரிகளை வைத்தியசாலைகள், பல்வேறு அலுவலகங்கள் மற்றும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களுக்கு அழைத்துச்செல்லுதல், அகதி விண்ணப்பங்கள் நிராகரிக் கப்பட்டோருக்கு மேன்முறையீடு செய்தல் போன்ற பல கருமங்களில்



ஒத்துழைப்பு வழங்கும் தன்னார்வத் தொண்டராகவும் பணியாற்றுகிறார். பொன்விழாக் காணும் அருட்சகோதரி கார்மேல் அவர்களது துறவறப்பணி மேலும் சிறந்து மேலோங்க இறையாசீர் வேண்டிடுவோம்.

(கனடாவிலிருந்து சுசைமுத்து அல்பிரட் ஞானராஜா)

காலைக்கதிர்
Kalaikkathir
ஞாயிற்றுக்கிழமை 23.09.2018





480 நாள்களுக்குப் பின்னர் மீண்டும் ஒருநாள் போட்டிகளில் களமிறங்கி சாதித்தமையானது மகிழ்ச்சியளிப்பதாக, இந்தியக் கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான ரவீந்திர ஜடேஜா தெரிவித்துள்ளார்.

ஆசியக் கிண்ணத் தொடரின் நேற்றுமுன்தினம் போட்டியில், பங்களாதேஷ் அணியை எதிர்கொண்ட இந்தியா அணி, 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றியை பதிவுசெய்தது.

இதில் இந்திய அணிக்காக சிறப்பாக பந்து வீசி 4 விக்கட்டுக்களை வீழ்த்திய ஜடேஜா, போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.உனக்கு

இந்நிலையில் தனது மீள் பிரவேசம் சிறப்பாக அமைந்தமைக் குறித்து அவர் கூறுகையில், இது மிகவும் முக்கியமான தருணம். நீண்ட நாள்களுக்கு பின்னர் அதாவது 480 நாள்களுக்கு பின்னர் மீண்டும் ஒருநாள் போட்டிகளில் களமிறங்கி சாதித்துள்ளேன். இதனை மறக்கமுடியாது.

உண்மையில் நான் நேற்றைய போட்டியை டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதாகவே நினைத்திருந்தேன்.

வெளிநாடுகளில் இரண்டு – மூன்று தொடர்களில் நான் விளையாடவில்லை. அங்கு என்ன மாதிரியான முடிவு கிடைத்தது என்று நான் அவதானித்திருந்தேன்.

அத்துடன் வாய்ப்பு கிடைக்காத காலத்தில் நான் எனது திறமையை வளர்க்கவும், என்னை நானே ஊக்குவிக்கவும் முயற்சித்தேன். எனக்கு எப்போது வேண்டுமானாலும் வாய்ப்பு கிடைக்கும் என நம்பினேன். அப்படி வாய்ப்பு கிடைத்தால் என்னைக் கட்டுப்படுத்தி விளையாட முடியும் என நம்பினேன். நான் எனது சொந்த விளையாட்டு குறித்தே கவனம் செலுத்தினேன். என்னால் இன்னும் முன்னேற முடியும் என நம்புகிறேன் என கூறினார்.

# போட்டி அட்டவணை குறித்து அணித் தலைவர்கள் அதிருப்தி

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான அட்டவணை குறித்து அணித் தலைவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.போட்டிகளுக்கான அட்டவணை சில மாதங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட போது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிருப்தி வெளியிட்டிருந்தது.

அடுத்தடுத்த நாட்களில் இரண்டு போட்டிகளில் விளையாடுவது சிரமம் என இந்தியா தெரிவித்திருந்தது.

இப்போது சுப்பர் நான்கு போட்டிகள் தமக்குப் பெரும் சிரமத்தைக் கொடுப்பதாக பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் அணித் தலைவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

“முன்னோடி சுற்று நிறைவடைவதற்கு முன்னரே எம்மை இரண்டாம் அணி என ஏற்பாட்டாளர்கள் அறிவித்தமை எமக்கு மிகுந்த ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் தருகின்றது” என்றார் பங்களாதேஷ் அணித் தலைவர் மஷ்ராபே மோர்ட்டாஸா தெரிவித்தார்.

“நாங்கள் ஒருதிட்டத்துடன் இங்கு வந்தோம். இதன் காரணமாக அபுதாபியிலும் துபாயிலும் அடுத்த நாட்களில் விளையாட வேண்டியுள்ளது. இது எமக்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்துள்ளது. இது ஒரு சர்வதேச போட்டி. நாங்கள் எமது தேசத்திற்காக விளையாடுகின்றோம். எந்தப் போட்டியானால் நியதிகள் இருக்கின்றன. ஆனால் நியதிக்கு அப்பால் செல்வதுதான் ஏமாற்றத்தைத் தருகின்றது” என அவர் மேலும் கூறினார்.

இது போன்றே அதிருப்தியை வெளியிட்ட பாகிஸ்தான் அணித் தலைவர் சர்ப்ராஸ் அஹ்மத், போட்டி அட்டவணை இந்தியாவுக்கு சாதகமாக தயாரிக்கப்பட்டுள்ளது என குறை கூறினார்.

“இந்த அட்டவணை நிச்சயமாக அதிருப்தியைத் தருகின்றது. இந்தியா தோல்வி (முன்னோடி சுற்றில்) அடைந்தாலும் துபாயிலேயே நிலைத்திருக்கும். பயணம் செய்வது (டுபாயிலிருந்து அபுதாபிக்கும் அபுதாபியிலிருந்து டுபாய்க்கும்) என்பது சிரமமானது. போட்டிகள் நடைபெறும்போது ஒன்றரை மணி நேரம் பயணிப்பது சிரமமாகும். அது இந்தியாவாக இருக்கட்டும், பாகிஸ்தானாக இருக்கட்டும், அல்லது வேறு எந்த நாடாக இருக்கட்டும். எல்லோருக்கும் ஒரே நியதி இருக்கவேண்டும்” என சர்ப்ராஸ் அஹ்மத் தெரிவித்தார்.

பங்களாதேஷ் அணி நேற்று முன்தினம் அபுதாபியில் விளையாடிவிட்டு நள்ளிரவு அங்கிருந்து புறப் பட்ட விடியற்காலை ஒன்றரை மணி அளவில் டுபாயை அடைந்தது. தொடர்ந்து 14 மணித்தியாலங்களில் இந்தியாவை எதிர்த்தாடியது.

# மன்செஸ்டர் சிற்றி அணியுடன் ஒப்பந்தத்தை நீடித்த அக்யூரோ




ஆர்ஜென்டீனா உதைபந்து அணியின் வீரரான செர்ஜியோ அக்யூரோ, மன்செஸ்டர் சிற்றி அணியுடனான ஒப்பந்தத்தை எதிர்வரும் 2021ஆம் ஆண்டு வரை நீடித்துள்ளார்.

30 வயதாகும் செர்ஜியோ அக்யூரோ, கடந்த 2011ஆம் ஆண்டில் இருந்து மன்செஸ்டர் சிற்றி அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்நிலையில் இவரது ஒப்பந்த காலம் எதிர்வரும் 2020ஆம் ஆண்டுடன் முடிவுக்கு வருகின்றது. இந்நிலையில் அவரது ஒப்பந்த காலத்தை ஒருவருட காலத்திற்கு மன்செஸ்டர் சிற்றி அணி நீட்டித்துள்ளது.

கடந்த 2017- 18 சீசனில் இங்கிலீஷ் ப்ரீமியர் லீக் தொடரில், மன்செஸ்டர் சிற்றி அணி, சம்பியன் பட்டம் வெல்வதற்கு செர்ஜியோ அக்யூரோவின் பங்களிப்பு முக்கியமாக இருந்தது. இந்தப் பின்னணியில் அவரது ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

செர்ஜியோ அக்யூரோ, மன்செஸ்டர் சிற்றி அணிக்காக 210 போட்டிகளில் விளையாடி 146 கோல்கள் அடித்துள்ளார்.

இதுவரை வாரத்திற்கு இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் பவுண்ட்ஸ்கள் வாரச் சம்பளமாக பெற்ற இவர், இனிமேல் 3 லட்சத்து 50 ஆயிரம் பவுண்ட்ஸ்கள் சம்பளமாக பெறுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமூக ஊடகங்களின் கருத்துகளால் இலங்கை வீரர்களுக்குக் காயங்கள்

ஆசிய கிண்ணத்திற்கான போட்டிகளில் ஏற்பட்ட மோசமான தோல்விகளை தொடர்ந்து சமூக ஊடகங்களில் பதிவாகிவரும் கருத்துக்கள் இலங்கை அணி வீரர்களை ஆழமாகக் காயப்படுத்தியுள்ளன என அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

இலங்கை வீரர்களின் மனோநிலையில் மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் கருத்துக்களைப் பதிவு செய்வதை இரசிகர்கள் தவிர்க்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆசியக் கிண்ணத் தோல்விகள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிப்பது வீரர்களை அவமதிக்கும் நடவடிக்கையாக அமையும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.



விளையாட்டு என்பது அரசியல் இல்லை. நாங்கள் வெற்றிதோல்வி இரண்டையும் ஏற்றுக் கொள்ளப் பழகவேண்டும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்

சமீபத்தில் மேற்கிந்திய அணி மற்றும் தென்னாபிரிக்க அணியுடனான போட்டிகளில் எங்கள் வீரர்கள் வெற்றிகளை பெற்றுள்ளனர். இதன் காரணமாக இரண்டு போட்டிகளில் தோற்றமைக்காக அவர்களை சமூக ஊடங்களில் அவமானப்படுத்துவது சரியான விடயமில்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் எங்கள் கிரிக்கெட் குறித்து சிந்திக்க வேண்டும் என்றால் எங்கள் வீரர்களின் மனோநிலை குறித்தும் சிந்திக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு போட்டிகளில் ஏற்பட்ட தோல்வி காரணமாக இலங்கையில் கிரிக்கெட் நிர்வாகம் வீழ்ச்சியடைந்துவிட்டது எனக் குறிப்பிட முடியாது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட்டை நாடாளுமன்றத்திற்குள் கொண்டு வரவேண்டாம் எனவும் விளையாட்டுத்துறை அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




# மீண்டுமொரு பலப் பரீட்சை

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சுப்பர் – 4 சுற்றின் மூன்றாவது போட்டியில், இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

டுபாயில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இப் போட்டியில், இந்தியா அணிக்கு ரோஹித் சர்மாவும், பாகிஸ்தான் அணிக்கு சப்ராஸ் அஹமட்டும் தலைமை தாங்கவுள்ளனர்.

ஏற்கனவே நடந்த ‘லீக்’ போட்டியில் இந்திய அணி, பாகிஸ்தானை 8 விக்கெட் வித்தியாசதில் எளிதாக வீழ்த்தியது. இதனால் இன்றைய போட்டியில் இதே உத்வேகத்தோடு களமிறங்கி, பாகிஸ்தானை பந்தாடும் முனைப்பில் இந்தியா அணி உள்ளது.

மறுபுறத்தில் தோல்வியின் விரக்த்தியில் உள்ள பாகிஸ்தான் அணி, இந்தியாவுக்குப் பதிலடி கொடுக்கும் ஆர்வத்தில் உள்ளது.

இரு அணிகளும் இன்று மோதுவது 131ஆவது போட்டியாகும். இதுவரை நடந்து முடிந்துள்ள 130 போட்டிகளில், 53 போட்டிகளில் இந்தியாவும், 73 போட்டிகளில் பாகிஸ்தான் அணியும் வெற்றிபெற்றுள்ளன. 4 போட்டிகளில் முடிவு இல்லை.

## பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தின் பெண் விரிவுரையாளரான போதநாயகி திட்டமிட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார் எனவும், அவரது கணவர் மீதே தமக்குச் சந்தேகம் உள்ளது எனவும் பொலிஸாரிடம் பெண்ணின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், தனது மனைவியின் மரணத்தில் சந்தேகம் உள்ளது என்று பொலிஸாரிடம் அவரது கணவன் வன்னியூர் செந்தூரன் தெரிவித்துள்ளார்.

எனது மனைவி தற்கொலை செய்யக் கூடியவர் அல்லர். அதற்கான எந்தத் தேவையும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியா– ஆசிகுளம் இலக்கம் – 108 கட்டுக்குளம் பகுதியைச் சேர்ந்த 29 வயதான நடராசா போதநாயகி சடலமாக மீட்கப்பட்டமை குறித்து அவரது கணவன் வன்னியூர் செந்தூரன் மேலும் தெரிவிக்கையில் –

எமக்குத் திருமணம் ஆகி ஐந்து மாதங்களே ஆகின்றன. எனது மனைவி விரிவுரையாளர் என்பதால் கிழமையில் ஐந்து நாள்கள் திருகோணமலையில் இருப்பார். நான் கிளிநொச்சியில் வேலை பார்ப்பதால் நான் கிளிநொச்சியில் இருப்பேன். வார இறுதி நாள்களில் நான் திருகோணமலை செல்வேன் அல்லது எனது மனைவி கற்சிலைமடுவில் உள்ள எமது வீட்டுக்கு வருவார்.

கடந்த வாரம்கூட அவர்தான் இங்குவந்திருந்தார். அவர் மூன்று மாதக் கர்ப்பிணியாக இருப்பதால் பதிவுகள் மாற்றப் படவேண்டிய தேவை இருந்தது.

கடந்த புதன்கிழமை எனக்குக் குறுந்தகவல் ஒன்றை அனுப்பி இருந்தார். இரண்டு நாளும் நான் விடுமுறை எடுத்துக்கொண்டு வருகின்றேன், எங்கள் பதிவுகளையும் மேற்கொண்டு எனது அம்மா வீட்டுக்கும் செல்வோம் என்று கூறினார்.

அதன் பின்னர் அவரது தொலைபேசி செயற்படவில்லை. அவர் சில வேலைப்பளு காரணமாக அவரது அம்மா வீட்டுக்குச் சென்றிருப்பார் என நான் நினைத்தேன். பின்னர்தான் அவரது அம்மாவும் அங்கு வரவில்லை எனவும், அவரைக் காணவில்லை எனவும் கூறினார்.

பின்னர் அவரது கைப்பை திருகோணமலை நகர கடற் கடைப் பகுதியில் இருக்கின்றது எனவும், சடலம் கடலில் மிதக்கின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. இதனைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தேன்.

எனது மனைவி தற்கொலை செய்யக் கூடியவள் அல்லர். அதற்கான எந்தத் தேவையும் இல்லை. இந்த மரணத்தில் எனக்குச் சந்தேகம் உள்ளது – என்றார்.

திருகோணமலை பொது வைத்தியசாலை சட்ட வைத்திய நிபுணர் விடுமுறையில் சென்றுள்ளதால் பிரேத பரிசோதனையை யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளுமாறு திரு கோணமலை மேலதிக நீதிவான் சமிலா குமாரி ரத்நாயக்க உத்தரவிட்டுள்ளார். இதற்கு அமையவே போதநாயகியின் சடலம் நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் சுமார் ஒரு மணி நேரம் இந்தப் பிரேத பரிசோதனை இடம்பெற்றிருந்தது. இதன்படி அந்தப் பெண்ணின் உடலில் காயங்கள் எதுவும் இல்லை. அவர் இரண்டு அல்லது மூன்று மாத கர்ப்பிணி. பெண் நீரில் மூழ்கியமையால் இடம்பெற்ற மூச்சுத் திணறல் காரணமாகவே மரணம் சம்பவித்தது எனப் பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## திலீபன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலையில் யாழ். நீதிவான் சினனத்துரை சதீஸ்தரனின், அலுவலக அறையில் பிரசன்னமாகி விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

இலங்கையிலும், வெளிநாடுகளிலும் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஓர் உறுப்பினர் உண்ணாவிரதமிருந்து உயிரிழந்தமையை நினைவு கூர்வதற்கு நல்லூரில் அவரது நினைவுத் தூபிப் பகுதியில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அந்தத் தூபி இருந்த இடத்தைச்சுற்றிகம்பிவேலிஅடிக்கப்பட்டுள்ளது. கொட்டகைகள் அமைக்கப்பட்டு அதன் கீழ் படங்கள் வைக்கப்பட்டு மாலைகள் போடப்பட்டுள்ளன.

எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறும் இந்த நிகழ்வுக்கு நீதிமன்றம் தடை விதிக்க வேண்டும். அந்த இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கொட்டகைகளையும் ஏனையவற்றையும் அகற்றுவதற்கு நீதிமன்றம் கட்டளை வழங்க வேண்டும்.

இந்தச் செயற்பாட்டு வேலைகளை மேற்கொள்ளும் யாழ். மாநகர சபை ஆணையாளருக்கு இது தொடர்பான தடை உத்தரவை வழங்க வேண்டும்.

– இவ்வாறு பொலிஸார் தமது மனுவில் விண்ணப்பித்துள்ளனர்.

இந்த மனுவைப் பரிசீலித்த நீதிவான், யாழ். மாநகர சபை ஆணையாளரை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகக் கட்டளை பிறப்பித்து உத்தரவிட்டார். (உ–7)

## அரசியல் கைதிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்பாக நாளை திங்கள்கிழமை அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் இணைந்து இந்தப் போராட்டத்துக்கான அழைப்பை விடுத்துள்ளன.

இது தொடர்பான ஊடகச் சந்திப்பு ஒன்று நேற்று யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட புதிய மாக்சிஸ லெனிசக் கட்சி, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, காணாமற்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கம் ஆகியன இணைந்தே மேற்படி அழைப்பை விடுத்துள்ளன.

இந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்றைய ஊடக மாநாட்டில் தெரிவித்தவை வருமாறு:–

அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த 9 நாட்களாகத் தமிழ் அரசியல் கைதிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அவர்களில் இருவரது நிலைமை மோசமடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இவர்களது உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் அடையாள உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

நாளை திங்கட்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை யாழ். மாவட்ட செயலகம் முன்பாக இவ் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறும்.

இந்தப் போராட்டத்தில் அரசியல் கட்சி, இன, மத, பிரதேச பேதமின்றி அனைத்துத் தரப்பினரையும் பங்குபெறு மாறு அழைக்கிறோம்–என்றனர். (ஐ–7)

## அரசியல் கைதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணியால் ஏ–9 பிரதான வீதி சுமார் 20 நிமிடங்கள் வரை மூடப்பட்டிருந்தது.

பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான பேரணி பஜார் வீதியூடாக ஹொரவப்பொத்தானை வீதியைச் சென்றடைந்து அதனூடாக வவுனியா மாவட்ட செயலகத்தை வந்தடைந்தது.

இளைஞர்களாக கைது செய்யப்பட்டவர்கள் தங்கள் வாழ்வின் அரைவாசிக் காலத்தைச் சிறைகளில் கழித்து இன்று முதியவர்களாகி விட்டார்கள். இன்றைய நல்லாட்சி அரசு இந்த 137 அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமலும், விசாரணைகளின்றியும் வைத்திருப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும். எனவே, நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய்ய வேண்டும் என்று இதன் போது வலியுறுத்தப்பட்டது.

அதேவேளை, அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி பல்வேறு சுலோகங்கள் அடங்கிய பதாதைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தமையுடன் விண்ணதிரக் கோஷமும் இட்டனர்.

பேரணியாக வந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவுள்ள பண்டாரவன்னியன் சிலைக்கு அருகில் ஒன்றிணைந்த பின்னர் பேரணியின் ஏற்பாட்டுக் குழுவின் பேச்சாளர் தயாவின் உரையுடன் போராட்டம் நிறைவு பெற்றது.

கவனவீர்ப்புப் போராட்டத்தில் தமிழரசு கட்சி, புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், சிறி ரெலோ, ஈரோஸ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, புதிய மாக்சிச லெனின் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய அரசியல் கட்சிகளும் வவுனியா மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம், வர்த்தகர் சங்கம், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், சிகை அலங்கார உரிமையாளர் சங்கம், சமூக நீதிக்கான வெகுசன அமைப்பு, இலங்கை தேசிய அரச பொது ஊழியர் சங்கம், தமிழ் விருட்சம் உள்ளிட்ட அமைப்புக்களும் பங்குபற்றின.

பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சாள்ஸ் நிர்மலநாதன், வட மாகாண விவசாய அமைச்சர் சிவநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், வட மாகாண சபை உறுப்பினர்களான சத்தியலிங்கம், ஜீ.ரி.லிங்கநாதன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், வவுனியா நகரபிதா கௌதமன் ஆகியோருடன் பல நூற்றுக்கணக்கான பொதுமக்களும் கலந்து கொண்டனர். (ஐ–100)

## நீதிமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாணம் நீதிவான் நீதிமன்றத்தில எடுத்துக் கொள்ளப் படும் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம். ஏ.சுமந்திரன் எம்.பி.நீதிமன்றில் பிரசன்னமாகி, பொலிஸ் விண்ணப்பத்துக்கு எதிராக வாதிடுவார் எனத் தெரியவருகின்றது.

ஏற்கனவே வேறு ஒரு வழக்குக்காக அன்றைய தினம் யாழ். நீதிமன்றத்தில் பிரசன்னமாக வேண்டிய தேவை அவருக்கு இருப்பதால், இந்த வழக்கையும் சேர்த்து அவர் கவனித்துக் கொள்வார் என அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

## பிராந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறங்கியுள்ளது. இதற்கான ஆரம்ப கட்டப்பணிகள் அடுத்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளன என்று அறியமுடிகின்றது.

இவ்வருட இறுதிக்குள் இரண்டு அலுவலகங்களை அமைப்பதற்கு எதிர்பார்த்திருக்கின்றோம் என்று பணியகத்தின் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் காலைக்கதிருக்கு நேற்று தெரிவித்தார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தைக் கையாள்வதற்காகப் பணியகமொன்றை நல்லாட்சி அரசு நிறுவியது.

வடக்கு, கிழக்கு, தெற்கு என நாட்டின் பல பகுதிகளுக்கும் களவிஜயம் மேற்கொண்டிருந்த பணியகத்தின் உறுப்பினர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களைச் சந்தித்துச் சாட்சியங்களையும் பதிவு செய்தனர்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு பரிந்துரை அறிக்கையொன்றை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம் பணியகத்தினர் அண்மையில் கையளித்தனர். மேற்படி பணியகத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சரவை உபகுழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பணியகத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்னவென்று வினவியபோதே, பிராந்திய அலுவலகங்கள் இரண்டை இவ்வருட இறுதிக்குள் அமைக்கவிருக்கும் தகவலை சாலிய பீரிஸ் வெளியிட்டார்.

அரசிடம் நாம் பரிந்துரை அறிக்கையை முன்வைத்தோம். அவை நடைமுறைப்படுத்தப் படவேண்டும். சிபாரிசுகளை அமுல்படுத்தும்போது உதவிகள் தேவைபடும் பட்சத்தில் அதை வழங்குவோம் என்றும் அவர் கூறினார்.

எட்டு பிராந்திய அலுவலகங்களை அமைப்பதற்கு பணியகம் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வேலையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைக்குள் இணைத்துக் கொள்ளுமாறு வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் நேற்று யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தற்போது அரசினால் வழங்கப்பட்டு வரும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனத்தில் 2016 ற்கு பின்னரான பட்டதாரிகள் அதிகளவில் இடம்பெற்றிருப்பதாகச் சுட்டிக்கட்டிய இவர்கள், இனிவரும் நாள்களிலாவது 2015ற்கு முந்திய பட்டதாரிகளை முன்னுரிமை அடிப்படையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர். (ஐ–7)

## திலீபனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடாது என்று மாநகர சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபன் நினைவிடத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவது தொடர்பான மாநகர சபையின் விசேட கூட்டம் நேற்றுச் சனிக்கிழமை காலை நடைபெற்றது.

திலீபன் நினைவேந்தலை ஒழுங்குபடுத்தும் அதேவேளை, அன்றைய தினம் மாநகர சபை எல்லையினுள் நிகழ்வொன்றை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் கூட்டத்தில் உறுப்பினர் ஒருவரால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

இதனை அடுத்து இடம்பெற்ற வாதப்பிரதிவாதங்களின் நிறைவில் எதிர்வரும் 26 ஆம் திகதி நடத்தத்திட்டமிடப்பட்டுள்ள தேசிய சுற்றுலா தின நிகழ்வுக்காக யாழ். மாநகர சபை மைதானத்தை வழங்குவதில்லை என்று கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

இந்தத் தீர்மானத்தை வடக்கு மாகாணச் சுற்றுலாத்துறைச் செயலணியின் தலைவருக்கு எழுத்து மூலம் அறிவிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. (ஐ–7)

## அரசசைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்தும் நோக்கில் நேற்றுக் காலை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாட்டில் சரியான தலைமைத்துவம் இன்மையே இந்தப் பொருளாதார சிக்கலுக்குக் காரணம்.

நான் அரசை ஒப்படைக்கும் போது அமெரிக்க டொலர் ஒன்று 131.40 ரூபாவாக இருந்தது. தற்போது அது 170 ரூபாவையும் தாண்டியுள்ளது.

ரூபாவின் மதிப்பிறக்கத்தை கட்டுப்படுத்த முடியாவிட்டால் அரசை மீண்டும் எம்மிடம் ஒப்படையுங்கள்–என்றார். (ஐ)

## விஜேதாஸ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வொன்று அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் அமைச்சர்கள் மனோ கணேசன், பழனி திகாம்பரம், ரவூக் ஹக்கீம் ஆகியோர் தமிழ் பேசும் உறுப்பினர்களாக உள்ளனர்.

அவர்களுடன், சரத் அமுனுகம, வஜிர அபேகுணவர்தன, மஹிந்த அமரவீர, ரஞ்சித் மத்தும பண்டார, தலதா அத்துக்கோரள, மஹிந்த சமரசிங்க ஆகியோரும் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

காணாமற்போனோர் அலுவலகத்தின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள உபகுழுவுக்கு அவசியமான உதவிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்கான உதவி உபகுழுவொன்றை நியமிப்பதற்கான பரிந்துரையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

## பொலிஸ்மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ விமர்சித்துள்ளார்.

எலிய அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் பொலிஸ்மா அதிபரை விளாசித்தள்ளினார்.

நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. அதைப் பாதுகாக்கவேண்டிய பொலிஸ்மா அதிபர் நகைச்சுவையாளர் போல் செயற்பட்டுவருகிறார். பொது இடங்களில் ஆடுவது, பாடல் பாடுவது என உயர்பதவிக்குப் பொருத்தமற்ற வகையிலேயே அவரின் செயற்பாடுகள் அமைந்துள்ளன என்றும் கோட்டாபய கூறினார்.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, விமல் வீரவன்ஸ ஆகியோரும் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது பொலிஸ்மா அதிபரைச் சரமாரியாக விமர்சித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இல.வானொலி தமிழ் சேவையின்...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)




சில்லையூர் செல்வராசன்

சில்லையூர் தலைமையில் கவியரங்கு. பங்கேற்ற கவிஞர்கள் காதலையும் இயற்கை யையும்தான் பாடினார்கள்.

சபையிலிருந்த எனக்கு ஏமாற்றமும் சற்றுக்கோபமும் வந்துவிட்டது. அக்காலப் பகுதியில் ஐக்கிய தேசியக்கட்சி பதவியில் இருந்தது. பிரதமர் பிரேமதாச தமது கிராமோதய திட் டத்தில் நாடெங்கும் பல மாதிரிக்கிராமங்களை அமைத்துக் கொண்டிருந்தார். ஆனால் மலையக மக்களான தோட்டத்தொழிலாளர்கள் தொடர்ந்தும்மோசமானலயன் குடியிருப்புகளில் வசதிக் குறைபாடுகளுடனேயே வாழ்ந்து கொண்டிருந்தனர். கவியரங்கு கவிஞர்களின் கவிதைகளில் தோட்டத் தொழிலாளரின் துயரம் பதிவாகவில்லையே – என்று சிறுகுறிப்பை எழுதி மேடையிலிருந்த சில்லையூருக்கு அனுப்பினேன்.

சில நிமிடங்களில் அவரே தேயிலைத் தோட்டத்தொழிலாளர்களின் குடியிருப்பு


கோமாளிகள் திரைப்படத்தில் கலைத் தம்பதி

அவலம் குறித்த கவிதையை எழுதி பாடினார். இதர கவிஞர்கள் தவறவிட்ட அந்தப் பக்கத்தை அழுத்தமாகச்சுட்டிக் காண்பித்தார்.

தான்தோன்றிக் கவிராயர் என்ற புனை பெயரையும் கொண்டிருந்த சில்லையூர், ஒரு வரகவிதான் என்ற உண்மையை அன்றுதான் தெரிந்துகொண்டேன். இரவு நிகழ்ச்சியில் நானும் கமலினி செல்வராசனும் சந்திரசேகரனும் உரையாற்றினோம்.

இந்த விழாவில் அமைச்சர் தொண்டமான் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

சுதந்திரன், வீரகேசரி , தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றிய பின்னர் வானொலி திரைப்படம விளம்பரம் முதலான துறைகளில் தனது ஆற்றலை வெளிப்படுத்தி பிரபல்யமாக இருந்த வேளையிலேயே அவர் எனது நண்பரானார்.

1970களில் ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சி பற்றி அவர் எழுதிய நூல் பின்னாள்களில் இத்துறை சார்ந்து ஆய்வுகளில் ஈடுபட்டவர்களுக்கு உசாத் துணையாக விளங்கியது.

ஞானசவுந்தரி, சங்கிலியன், பண்டார வன்னியன் முதலான கூத்துக்களிலும் மதியூக மங்கை மதமாற்றம் (அ.ந. கந்தசாமி எழுதியது) திறந்த கல்லறை, பை பை ராஜ், நெவர் மைண்ட் சில்வா ஆகிய நாடகங்களிலும் நடித்திருக்கிறார்.

தணியாத தாகம் திரைப்படச்சுவடியை அவர் துரிதகதியில் எழுத நேர்ந்தமைக்கு எதிர்பாராதவிதமாக தாம் சந்தித்த கசப்பான அனுபவங்களே காரணம் என்று அது வெளி வந்தவேளையில் என்னிடம்சொன்னார். வி.எஸ் துரைராஜா தயாரித்து வெளியிட்ட குத்துவிளக்கு படத்தை ஒரு நாள் கொழும்பு கொட்டாஞ்சேனை செல்லமஹால் திரையரங்கில் பார்த்துவிட்டு எங்கள் ஊர்பிரமுகரும் உறவினருமான மயில்வாகனன் மாமாவிடம் அந்தப்படம்பற்றி பிரஸ்தாபித்தேன்.

எங்கள் பாடசாலை பழையமாணவர் மன்றம் ஒரு விஞ்ஞான ஆய்வு கூடத்தை அமைப்பதற்காக நிதிதிரட்டிக் கொண்டிருந்த பொழுது மயில்வாகனன் மாமா ஒரு நல்ல ஆலோசனை சொன்னார்.

குத்துவிளக்கு படத்தின் மூலக்கதை எங்கள் சில்லையூருடையது என்ற பேச்சு அடிபடுகிறது. அவர் எனக்கும் உனக்கும் நண்பர். அந்தப்படத்தை நிதியுதவிக் காட்சிக்கு காண்பிப்போம் என்றார் மாமா.

பின்னர் அவரே பழைய மாணவர் மன்ற உறுப்பினர்களை கட்டக்கலைஞர் வி.எஸ். துரைராஜாவிடம் அழைத்துச் சென்றார். நிதியுதவிக்காட்சிக்காக ஈழத்து தமிழ்த்திரைப்படத்தை நாம் தெரிவு செய்தது துணிச்சலான செயல் என்று துரைராஜா பாராட்டியமையுடன் படத்தை இலவசமாகவே தந்து உதவினார். பின்னர் சிலோன் தியேட்டர்ஸ் அதிபர் செல்லமுத்துவை அவரது அலுவலகத்தில் சந்தித்தோம்.

எமதுபணிக்கு அவரது நீர்கொழும்பு ரீகல் திரையரங்கை தந்து உதவவேண்டும் என்றோம். எமது நல்ல நோக்கத்தை புரிந்துகொண்ட செல்லமுத்து ஒரு சனிக்கிழமை முற்பகல் காட்சிக்கு ரீகல் தியேட்டரை தந்துதவுமாறு எம்முன்னிலையிலேயே தொலைபேசி ஊடாக தியேட்டர் முகாமையாளருக்குப் பரிந்துரைத்தார்.

திட்டமிட்டவாறு குத்துவிளக்கு படம் நீர்கொழும்பில் மண்டபம் நிறைந்தகாட்சியாக காண்பிக்கப்பட்டது. தயாரிப்பாளர் துரைராஜா, அவரது நண்பர் கண் சிகிச்சை நிபுணர் மருத்துவர் ஆனந்தராஜா மற்றும் திரைப் படத்தில் நடித்த ராமதாஸ், ஜெயகாந்த் உட் பட வேறும் சில கலைஞர்களும் வருகை தந்து இடைவேளையின்பொழுது அரங்கில் தோன்றி உரையாற்றினர்.

இந்தத் தகவல்களைத்தெரிந்திருந்த சில்லையூரிடம் ஒரு நாள் உரையாடிய பொழுது தாம் தமது தணியாத தாகம் திரைப்படச்சுவடியை அவசர அவசரமாக அச்சிட்டு வெளியிட்டமையின் பின்னணிக் கார ணங்களைச்சொன்னார்.

தணியாத தாகம் கதையே குத்துவிளக்கு படம் என்பது சில்லையூரின் வாதம். ஆனால், படம்வெளியானபொழுது கதை துரைராஜா என்றும் வசனம் ஈழத்து இரத்தினம் என்றும் டைட்டிலில் காண்பிக்கப்பட்டது. சில்லையூர் நீதி மன்றம்வழக்கு என்று அலையவில்லை. மிகவும் துரிதமாக தணியாத தாகம் திரைப்படச்சுவடியை வெளியிட்டார்.


தமிழில் முதல் முதல் அச்சில் வெளியான திரைப்படச்சுவடி தணியாத தாகம் தான் என்ற புகழையும் பெருமையையும் பெற்றது.

கவியரசு கண்ணதாசன், இயக்குநர் பாலுமகேந்திரா முதலானோரும் குறிப்பிட்ட திரைப்படச்சுவடியை சிலாகித்துப் பேசியுள்ளனர்.



சில்லையூர் நூல்

நானும் முதல் முதலில் தமிழில் பார்த்த படித்த திரைப்படச்சுவடி சில்லையூரின் தணி யாத தாகம்தான். அதன் பிறகுதான் ஜெயகாந் தனின் சிலநேரங்களில் சில மனிதர்கள், முள்ளும் மலரும் மகேந்திரன் எழுதிய நடே சனின் வண்ணாத்திக்குளம், தங்கர் பச்சான் எழுதிய அழகி ஆகிய தமிழ்த்திரைப்படச் சுவடிகளை பார்த்திருக்கின்றேன்.





திரைக்கதை எழுதுவது எப்படி? என்று சுஜாதாவும் ஒருநூலை எழுதியிருக்கிறார்.

திரைப்படச்சுவடி எழுதுவதும் ஒரு நல்ல கலை. அதற்கு தமிழில் ஒரு சிறந்த முன்னோடி எங்கள் சில்லையூர்செல்வராசன்.

ஊடகம் எழுத்து நடிப்பு திரைப்படம் விளம் பரம் விவரண சித்திரம் முதலான துறைகளில் தனது ஆற்றலையும் ஆளுமையையும் வெளிப்படுத்தி தனக்கென தனித்துவமான இடத்தை தக்க வைத்துக்கொண்ட சில்லையூருக்கு அவரது ஊர்மக்கள் வழங்கிய பல் கலைவேந்தன் பட்டம் சாலவும் பொருத்தமானதுதான்.

தனது எழுத்துலகிலும் தனிப்பட்ட வாழ்விலும் அதிசயங்கள் புரிந்த சில்லையூருக்கும் கமலினிக்கும் பிறந்த ஆண்குழந்தைக்குப் பெயர் அதிசயன்.


சில்லையூர், கமலினி

மகன் பிறந்த செய்தியையும் சூட்டிய பெயரையும் சில்லையூர்சொன்னபொழுது அவரை வாழ்த்தியவாறே உங்கள் புதிய வாழ்வின் அதிசயமா? என்று கேட்டேன். அவரதுகண்கள் ஒரு கணம் மின்னியது.

வடமாகண மக்களின் விவசாயம் குறித்து கமம் என்ற விவரணப்படத்திற்கும் வசனமும் நடிப்பும் வழங்கிய சில்லையூர் தமிழ் சிங்கள ஆங்கிலத்திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.

கமம் விவரணப்படம் பெர்லின் திரைப் படவிழாவில் பாராட்டுப்பத்திரம் பெற்றது.

தி அட்வென்ர்ஸ் ஒஃப் டெனிஸி பஃக் (அமெரிக்கா), த லாஸ்ட் வைஸ் றோய் லோர்ட் மவுண்ட் பேர்ட்டன் (அவுஸ்திரேலியா), த டோஒஃப் த கோப்ரா (கனடா) ஆகிய ஆங்கிலப்படங்களிலும் நடித்தவர்.

எஸ். எஸ். சந்திரனின் ஆதரகதாவ சிங்களப்படத்தில் தமது மகன் ஒருவருடன் தமிழ்த்தந்தை பாத்திரமேற்று நடித்துள்ளார். இந்தப்படம்திரைக்குவருமுன்னர் பத்திரிகையாளருக்கான பிரத்தியேக காட்சியை திரைப்படக்கூட்டுத்தாபன தரங்கணி அரங்கில் சில்லையூருடன் இருந்தே பார்த்து ரசித்தேன். மனைவி கமலினியுடன் இணைந்து நடித்த படம் ராமதாஸின் கோமாளிகள். இந்தப்படங்கள் வசூலிலும் வெற்றிபெற்றவை.

தணியாத தாகம் திரைப்படச்சுவடியின் நாடகவடிவம் இலங்கை வானொலியில் பலமாதங்கள் ஆயிரக்கணக்கான நேயர்களினால் விரும்பிக் கேட்கப்பட்டது. அதில் குமார் என்ற முக்கிய பாத்திரத்தில்



நடித்த கவிஞரும் வானொலி ஊடகவியலாளரும் எனதும் சில்லையூரினதும் நண்பருமான சண்முகநாதன் வாசுதேவன் ஆஸ்திரேலியா குவின்ஸ்லாந்தில் ஒருபுதுவருடப்பிறப்பு நாளில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட செய்தி அறிந்ததும் இலங்கையில் முதலில் தகவல் தெரிவித்தது சில்லையூரிடம்தான்.

தணியாததாகம் நாடகத்தில் சில்லையூர் வழங்கிய பாத்திரத்திற்கு உயிரூட்டிய கலை ஞன் வாசுதேவனின் தற்கொலை அவரது நண்பர்களாகிய எனக்கும் சில்லையூருக்கும் வி.என். மதியழகனுக்கும் அதிர்வூட்டியது.

தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் டானியல் மறைந்த தகவலை டானியலுடன் இருந்த நண்பர் இளங்கோவன், சில்லையூருக்கு முதலில் தெரிவித்தார். சில்லையூர் அச்செய்தியைஎன்னுடன் பகிர்ந்துகொண்டதும் பத்திரிகைகளில்செய்தியை பரவவிட்டேன்.

பின்னர் எமது முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் கொழும்பு வலம்புரி கவிதா வட்ட மும் (வகவம்) இணைந்து 24 -04 -1986 ஆம் திகதி ஒரு முழுமதி தினத்தன்று முஸ்லிம் லீக் வாலிப முன்னணி மண்டபத்தில் நடத்திய டானியல் நினைவுக்கூட்டத்தில்சில்லையூரும்உரையாற்றினார்.

அதுவே நாம் சந்தித்துக்கொண்ட இறுதி நிகழ்ச்சி.

சில வருடங்களில் சில்லையூரும் மறைந்துவிட்டார் .அவரது நண்பர் கவிஞர் கங்கைவேணியனின் (கொழும்பு மாநகர சபை உறுப்பினர்) முயற்சியினால் பொரளை கனத்தை மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுச்சின்னத்தை இலங்கை வந்த தருணம் தரிசித்தேன். சில்லையூரின் பெயர்சொல்லும் அவரது வாரிசு அதிசயனை கம்பன் விழாவில் தாயார் கமலினியுடன் சந்தித்திருக்கிறேன்.

சில்லையூரின் முதல் மனைவியும் பிள்ளைகளும்கனடாவில் வசிக்கிறார்கள்.

சிறிதுகாலத்தில்கமலினி செல்வராசன் கையறு நிலையிலிருப்பதாக ஒரு செய்தி வெளியாகியது. அவரின் நிலைமை தொடர்பாக மகன் அதிசயன் சிங்கள வார இதழொன்றுக்கு வழங்கிய நேர்காணல் பற்றி சில ஊடகங்களிலும் முகப்புத்தகங்களி லும் பதிவாகியிருந்த செய்திகள் மிகவும் கவலைக்குரியவை. அச்செய்தி வெளிவந்து சில மாதங்களில் கமலினி செல்வராசன் கொழும்பில் மறைந்தார்.

சில வருடங்களாக மரணத்துள் வாழ்ந்துகொண்டே இருந்தவர், அந்த மரணத்தையும் கடந்தும் சென்று மறைந்திருக்கிறார் என்றவகையில் அவரது ஆத்மா சாந்தியடையட்டும்.

(தொடரும்)

# ஊற்றங்கரை விநாயகர் ஆலய குருக்கள் விபத்தில் உயிரிழப்பு




முல்லைத்தீவு, செப். 23

முல்லைத்தீவு தண்ணீரூற்று – நெடுங்கேணி வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஊற்றங்கரை சித்தி விநாயகர் ஆலயத்தின் முதன்மைக் குரு சிவசிறி பத்மகுமாரக் குருக்கள் உயிரிழந்தார்.


நெடுங்கேணியில் இருந்து தண்ணீரூற்று நோக்கி மோட்டார் சைக்களில் நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் பயணித்துக் கொண்டிருந்த குருக்கள், மாட்டுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானார்.

அவர் உடனடியாக அம்புலன்ஸ் மூலம் மாஞ்சோலை மாவட்ட மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டார். எனினும் அவர் உயிரிழந்தார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

தண்ணீரூற்று ஊற்றங்கரை சித்தி விநாயகர் ஆலயத்தின் முதன்மை குருவாக விளங்கிய இவர் பல்வேறு சிவ தொண்டுகளை மேற்கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# திடீரெனப் பற்றி எரிந்தது ரயில்



கொழும்பு, செப். 23

கொழும்பு – தெமட்டகொட ரயில் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு ரயில் பெட்டிகளில் நேற்றுத் தீ விபத்து ஏற்பட்டது.

புனரமைப்புப் பணிகளுக்காகக் கொண்டுவரப்பட்டுதரித்து வைக்கப்பட்ட ரயில் பெட்டிகளிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டதாக அப்பகுதி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இடத்துக்குச் சென்ற தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

(ஐ)

# ஓ.எல். பரீட்சைக்கு முன் செயன்முறைத் தேர்வு

## ஒக்ரோபரில் நடத்தத் தீர்மானம்

கொழும்பு, செப். 23

இந்த வருடம் முதல் கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு முன்னர், அதன் செயன்முறைத் தேர்வை நடத்துவதற்குப் பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தச் செயன்முறைப் பரீட்சைகளை அடுத்த மாதம் இரண்டாம் அல்லது மூன்றாம் வாரத்தில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகப் பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் எஸ். பிரணவதாசன் தெரிவித்தார்.

இந்தச் செயன்முறைப் பரீட்சைகளுக்கான அனுமதிப்பத்திரம் எதிர்வரும் நாள்களில் தபால் மூலம் அனுப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(ஐ)

# அமெ. புறப்பட்டார் மைத்திரி



கொழும்பு, செப். 23

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 73ஆவது கூட் டத்தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்காவுக்கு நேற்றுப் பயணமானார்.

எதிர்வரும் 25ஆம் திகதி, மாலை ஐ.நா பொதுச்சபையில் அவர் உரை நிகழ்த்தவுள்ளார்.

இதன்போது, படையினருக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுகளில் இருந்து – அவர்களை விடுவிப்பதற்கான யோசனைகளை முன்வைக்கப் போவதாக ஜனாதிபதி ஏற்கனவே கூறியிருந்தார்.

(ஐ)

# 6 அரசமைப்புச் சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் நேற்றுடன் நிறைவடைவு

கொழும்பு, செப். 23

அரசமைப்புச் சபை உறுப்பினர்கள் 6 பேரின் பதவிக் காலம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது என நாடாளுமன்ற பிரதிப் பொதுச் செயலாளர் நீல் இத்தவெல குறிப்பிட்டார்

அரசமைப்புச் சபையின் அங்கம் வகித்த அமைச்சர் திலக் மாரப்பன, நாடாளுமன்ற உறுப்பினர்களான டபிள்யூ.டீ.ஜே செனவிரத்ன, விஜித ஹேரத் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் மூவரின் பதவிக் காலம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும் அரசமைப்புச் சபைக்கு அண்மையில் நியமிக்கப்பட்ட மஹிந்த சமரசிங்க நீடிப்பார் எனவும் நீல் இத்தவெல சுட்டிக்காட்டினார்.




யாழ்ப்பாணத்தில்

1 ஏக்கர், 2 ஏக்கர் கற்பகவனம் 2

காணிகள் விற்பனைக்கு

எழுதுமட்டுவாழ்

உடனடி உறுதி மாற்றம் *

வங்கி கடன் வசதி செய்து தரப்படும்



1 ஏக்கர் – 16 பரப்பு
- 40 தென்னை
- 40 - 60 தேக்கு
- 20 கஜு மரம்
- 10 - 15 மாமரம்
- கல் இருக்கை 1 தொகுதி
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

25 இலட்சம்

(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)

2 ஏக்கர் – 32 பரப்பு
- 80 தென்னை
- 80 - 90 தேக்கு
- 40 கஜு மரம்
- 20 - 30 மாமரம்
- கல் இருக்கை 1 தொகுதி
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

47 இலட்சம்

(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)

- அனைத்து மரங்களும் நட்டு உரிய முறையில் 5 வருடங்கள் பராமரிப்பு செய்து தரப்படும்!
- 30 அடி, 15 அடி அகல பாதை
- விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
- 24 மணிநேர பாதுகாப்பு
- விளைபொருட்களுக்கான சந்தை வசதி




பொதுவான வசதிகள்

பொது விடுதி · உணவகம் · உடற்பயிற்சிக்கூடம் · நீச்சல் தடாகம் · விளையாட்டுத்திடல்

நடைபயிற்சிக்கான பாதை · மீன்பிடி குளம் · முந்திரிகை தோட்டம் · மூலிகைத் தோட்டம்



சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்

078 284 5000 021 492 7778

551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

Good Gift Property Developers (Pvt) Ltd

Reg. No.: PV 115306


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.09.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.